Registered at the G. P. O. as a Newspaper

வாரப்பதிப்பு விலை சதம் 20

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, SILVER SMITH STREET COLOMBO—12.

திறம் சலவைக்கு
மில்க் வைற் சோப்

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்

புத்தகம் 14 திருவள்ளுவர் ஆண்டு 1990 ஆவணி திங்கள் 14-ம் நாள் (30—8—1959) ஞாயிற்றுக்கிழமை ஸபர் பிறை 24 இதழ் 13

# தமிழருக்கு அரசாங்க பண உதவி கிடையாது?

## கொடுத்து வந்ததையும் இனி நிறுத்திவிட அந்தரங்கச் சூழ்ச்சி

### மான்ய வெட்டு படிப்படியாக அமுல்

### சமூக சேவை அமைச்சிலும், இலாகாவிலும் திட்டமிட்டு கெடுபிடிகள் செய்யப்படுகின்றன

(சுதந்திரன் யாழ்ப்பாண நிருபர்)

கஷ்ட காலங்களில் அரசாங்கப் பண உதவி பெற்று வந்த தமிழருக்கு வெகு விரைவில் அந்த உதவி கிடையாது போகலாம். மக்களுக்கு கஷ்ட நிவாரணம் அளிக்கும் சமூக ஸ்தாபனங்களுக்கு குறிப்பிட்ட தொகை மான்யம் அளித்துவந்த சமூக சேவை இலாகா அப்படிச் செய்வதை நிறுத்திவிடுவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இதன் காரணமாக இதுநாள் வரை மேற்படி ஸ்தாபனங்கள்மூலமாக உதவி பெற்று வந்தவர்கள் இனிமேல் வேறு வழி தேட வேண்டியதுதான்.

சமூக சேவைப்பகுதி தமிழ் மக்களுக்கு உதவும் கஷ்ட நிவாரண ஸ்தாபனங்களுக்கு அளித்துவரும் மான்யத்தை முற்றாக நிறுத்திக்கொள்வதற்கு முதல் படியாக இப்போது மான்யத் தொகையில் பலமான வெட்டுப் போட்டு படிப்படியாகக் குறைத்துக்கொண்டு வருகிறது. இதற்கெல்லாம் சூத்திரதாரியாக இருப்பவர் சமூகசேவைப் பகுதி டைரக்டர் திரு உடுவெலே என்றும், தமிழ்த் துவேஷமுள்ள மற்றும் அதிகாரிகள் அவருடைய பாரபட்சமான செய்கைக்கு உடந்தையாக இருந்து உதவி வருவதாகவும் தெரிகிறது.

#### மான்யம் இதுவரை இல்லை

யாழ்ப்பாணத்தில் வட மாகாண நிரந்தர கஷ்ட நிவாரண நிதி என்று ஒரு ஸ்தாபனம் இயங்கிவருவதும், தீயால்-தண்ணீரால் மற்றும் பல வகைகளிலும் அல்லல் படுவோருக்கு அருந்தொண்டாற்றி வருவதும் தெரிந்ததே. இந்த நிதி ஸ்தாபனத்துக்கு கடந்த வருடத்தில் சுமார் 4,000 ரூபாய் வரை சமூக சேவை இலாகா மான்யம் அளித்தது. இவ்வாண்டு தேவை அதிகம் இருப்பதால் சுமார் 19,000 ரூபாய் கேட்டிருக்கிறது. யாழ்—அரசாங்க அதிபரும் இத் தொகை தேவைதான் என்று சிபார்சு செய்துள்ளாராம். ஆயினும் கலாசார சமூகசேவா அமைச்சு இத் தொகையை அனுமதிப்பதாய் இல்லை. மனுச் செய்து நீண்ட நாட்கள் ஆகியும் இன்னும் கடிதப் போக்குவரத்தோடு விஷயம் நிற்கிறது.

#### கடைசியில் கையை விரிக்கலாம்

இப்படியே இன்னும் சிறிது காலத்துக்கு இழுத்தடித்தால், செப்டம்பர் 30-ந் தேதியோடு அரசாங்க நிதி வருடம் முடிவடைகிறதாகையால் எல்லாம் முடிந்துவிட்டதே என்று கையை விரிப்பதே இலாகாவின் திட்டம் என்று நம்ப வேண்டியிருக்கிறது.

#### குழந்தைகளுக்கு

இன்னுமொரு சம்பவம். புத்தூரில் குழந்தைகள் பராமரிப்பு நிலையம் ஒன்று இருக்கிறது. இங்கு க்ஷயரோகக் குழந்தைகளை வைத்துப் பராமரிக்கிறார்கள். குழந்தை ஒன்றுக்கு ரூபா 20/-வீதம் கொடுக்கலாம் என்று இருந்தும் இலாகா நயினமடம், மொரட்டுவையில உள்ள மற்ற இதுபோன்ற நிலையங்களுக்குக் கொடுத்ததுபோல இதற்கும் பிள்ளை ஒன்றுக்கு ரூபா 35/-வீதம் அதிகமாக உதவி மான்யம் அளித்து வந்தது.

#### புதிர்

இம்முறை மட்டும் தடங்கல் ஏற்பட்டு விட்டது. இந்த நிலையத்துக்கு இவ்வளவு பணம் ஏன் கொடுக்க வேண்டும் என்று ஒரு சந்தேகம் சமூக சேவைப் பகுதிடைரக்டருக்கு ஏற்பட்டிருக்கவேண்டும். இங்குள்ள பிள்ளைகளில் க்ஷயரோகம் உள்ள பிள்

(8-ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு தாதிமார் பயிற்சி நிலையத் திட்டம் கைவிடப்பட்டு விட்டது

### பதிலுக்கு ரத்தினபுரியில் தொடங்குகிறார்கள்

(சுதந்திரன் நிருபர்)


மட்டக்களப்பில் தொடங்கப்படவிருந்த தாதிமார் பயிற்சி நிலைய வேலைகள் திடீரென்று கைவிடப்பட்டுவிட்டன என்று தெரிய வருகிறது. மட்டக்களப்பில் அப்படி ஒன்றை தொடங்குவதற்குப் பதிலாக ரத்தினபுரியில் தொடங்க ஏற்பாடாகியிருக்கிறது என்று சுதந்திரனுக்கு ஒரு அந்தரங்கச் செய்தி கிடைத்திருக்கிறது.

மட்டக்களப்பு, பதுளை, அனுராதபுரம் ஆகிய மூன்று இடங்களிலும் தாதிமார் பயிற்சி நிலையங்களைத்

(9-ம் பக்கம் பார்க்க)

இந்த சக்தி வாய்ந்த நிவாரணி மார்பு நோய்களை விரட்டுகிறது!

ரிச்லெட்ஸ் பெக்டோரல்
(Richelet's Pectoral)



ஒரு பிரசித்திபெற்ற தயாரிப்பு. குறிப்பாக சுவாச சய நோய்களுக்கென்றே விசேஷமாகத் தயாரிக்கப்பட்டது. ஆகவே, நொய்வுக்கு இது ஒரு வரப்பிரசாதம்!

● மூச்சுவிடுதல் தடைப்படுவதால் வேதனை ஏற்படுவதுடன் நின்று விடாது. சில சந்தர்ப்பங்களில் அபாயத்தையும் ஏற்படுத்தக் கூடும்! எனவே இதை ஒழித்துக் கட்டுவதில் அலட்சியமாயிருத்தல் கூடாது.

● ரிச்லெட்ஸ் பெக்டோரல் துரிதமாகப் பரவி வேலை செய்யக் கூடிய ரஸச் சேர்க்கையும் சக்தியும் கொண்டது. ஆகவே ஒன்றிரண்டு வேளை மருந்து சாப்பிட்டதுமே சுவாசப்பை, மூச்சுக் குழல் இவைகளில் ஏற்படும் அடைப்பை நீக்கி, கபத்தை உடைத்து, மூச்சுத் திணறலைத் தகர்த்து, சுவாசப் போக்குவரத்தைச் சமநிலைப்படுத்துகிறது. பிசின்-நுரை-போன்ற சளியை இளகச் செய்து காறி உமிழ்வதை இலகுவாக்குகிறது.

● இடைவிடாத இருமல், இளைப்பு, நெஞ்சு வலி, தொண்டை ரணம், மூச்சடைப்பு, தொண்டையிலேற்படும் கர்ர் புர்ர் என்ற சத்தம், தடிமல் காய்ச்சல், குளிர், பீனசம், கக்குவான், போன்ற சகல நோய்களையும் தணிப்பதுடன், படிப்படியாக நிரந்தரமான—நிச்சயமான—குணத்தையும் அளிக்கிறது



ரிச்லெட்ஸ் பெக்டோரல்

நொய்வினால் துன்புற்ற பலர் ரிச்லெட்ஸ் பெக்டோரலின் புண்ணியத்தால் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் பூரண குணம் பெற்று வானளாவப் புகழ்கின்றனர்!

எங்கும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்!
வெஸ்டன் ஏஜன்சீஸ்,
170 ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு.

## இந்தியாவிலுள்ள இலங்கை மாணவர்களின் திண்டாட்டம்

### பரீட்சைக்குத் தோன்றிப் பாதியில் திரும்ப வேண்டிய தர்மசங்கடம்

[சுதந்திரன் நிருபர்]

இந்தியாவில் மேல் படிப்பு படித்துவரும் இலங்கை மாணவர்கள் பெரிதும் திண்டாடுகிறார்கள். அவர்களில் சிலர் இப்போது பல்வேறு கல்லூரிகளிலும் பரீட்சைகளுக்குத் தோன்றுகிறார்கள். அவர்களது 'விஸா' முடிந்துவிட்டதால் முழுப் பரீட்சைக்கும் தோன்றாமல் பாதியில் விட்டுவிட்டு இலங்கை திரும்ப வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியிருக்கிறார்கள்.

இலங்கையிலிருந்து இந்தியா செல்லும் மாணவர்கள் எல்லோருக்கும் அங்கே கல்லூரிகளில் இடம் கிடைத்துவிடுவதில்லை. மிகவும் சிரமப்பட்டே சேர்ந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

இந்த நிலையில் சாதாரணமாக விஸா பெற்றுக்கொண்டு இந்தியா சென்ற மாணவர்களுள் பலர் அங்கு கல்லூரிகளில் இடம் கிடைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் தோன்றியதும் உடனே விண்ணப்பித்துச் சேர்ந்துகொண்டார்கள். இப்போது அவர்களில் பலர் பரீட்சை எழுதி வருகிறார்கள். ஆனால் அவர்களுக்கு இங்கிருந்து புறப்பட்டபோது கிடைத்த 'விஸா' வின்படி மூன்றுமாத காலமே இந்தியாவில் தங்கியிருக்க முடியும். இந்தக் கெடு இப்போது வந்துவிட்டது.

#### விஸாவை நீடிக்க வேண்டும்

விஸா முடிந்து ஒரு நாள் அதிகப்படியாக அங்கு இருப்பதானாலும் இந்திய அரசாங்கம் அதை அனுமதிக்காது. உதைத்துத் தள்ளிவிடும். ஆகவே விஸாவை இலங்கை அரசாங்கத்தைக்கொண்டு நீடித்துக்கொள்ள வேண்டும்.

சாதாரணமாக காலாவதியாகும் விஸாக்கள் தக்ககார

(8-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற் சங்க இயக்கம்

## அங்கீகாரத்திற்குப் போராட்டம்-2

சோ. வன்னியசிங்கம் B. Com., M. Sc. (Econ) (Lond).
பொருளியல் விரிவுரையாளர்:
இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி,
அக்குவைனுஸ் பல்கலைக் கழக கல்லூரி.

பிரிட்டனில் தொழிற் சங்கங்களின் உரிமைகளையும் கடமைகளையும் அந்தஸ்தையும் பரிபாலிக்கும் விதித் தொகுப்புகளின் அடிப்படையாக இன்றைக்கு திகழுவது 1871-ல் இயற்றப்பட்ட தொழிற் சங்கச் சட்டமேயாகும். இச் சட்டம்தான் தொழிற் சங்கங்கட்கு அவற்றின் உரிமை ஓலையாக (Charter) அமைந்தது என்று சொல்வது மிகையாகாது. ஆயினும் தொழிற் சங்கங்களை அழித்தொழித்து விடுவதற்காக முதலாளி வர்க்கம் சிருட்டித்த சூழலில் இருந்துதான் தொழிற் சங்கங்களின் உரிமை ஓலையாகத் திகழும் இச்சட்டம் உருவாகியது.

### கதவடைப்புக்கு காரணம்

1852-ல் பொறி நுட்பத் தொழில் வினைஞர் கையாண்ட வேலை நிறுத்தத்தின் பொழுதும் முதலாளி வர்க்கம் கதவடைப்பு (Lock-out) என்னும் ஆயுதத்தைப் பிரயோகித்தது. நாளடைவில் பல்வேறு தொழில் துறைகளிலும், தொழிலாளர் நடாத்தும் வேலை நிறுத்தத்திற்குப் பதில் நடவடிக்கையாக, இந்தக் கதவடைப்பு என்னும் ஆயுதம் முதலாளி வர்க்கத்தினால் பிரயோகிக்கப்பட்டது. பெரும்பாலும் இக் கதவடைப்பின் காரணம் தொழிற் சங்கங்களில் அங்கத்தவர்களாக இருக்கும் தொழிலாளிகளை வேலைக்கு அமர்த்துவதில்லையென முதலாளிகள் கொண்ட சங்கல்பமேயாகும்.

### உருவாகிய சூழ்நிலை

இவ்வாறு முதலாளிகள் கதவடைப்பதிலும் தொழிலாளிகள் வேலை நிறுத்தத்திலும் பல முறையும் ஈடுபடுதல் பொது மக்களின் கவனத்தை இழுப்பது இயல்பே. மேலும் நாட்டுப் பொருளாதாரமும் அமைதியும் இக் காரணத்தால் ஓரளவிற்குச் சீர்குலையத் தொடங்கியன. எனவே பொது ஜன அபிப்பிராயத்தைத் தொழிலாளர்கட்குப் பாதகமாகத் திரட்டக்கூடிய சூழ்நிலை ஒன்றுஉருவாகியது.

### நடவடிக்கைகள்

தொழிலாளர் சங்கங்கள் பலரகப் பட்டவையாக இருந்தன. தேசிய விஸ்தீரணத்தில் பொறுப்பு வாய்ந்த சில ஸ்தாபனங்கள் மிதவாதக் கொள்கையைக் கடைப்பிடித்து நியாய பூர்வமான இலட்சியங்களையும் தந்திரங்களையும் கையாண்டு பகிரங்கமாக நடவடிக்கைகளை எடுத்தன. ஆனால் சிற்சில நகரங்களில் சில சிறு ஸ்தாபனங்கள் இரகசியமான நடவடிக்கைகளிலும் பலாத்காரப் பாதையிலும் செல்லத் தயங்கவில்லை.

### பலாத்காரம்

அத்தகைய குழுக்களைச் சேர்ந்த சில தொழிலாளர் ஷெப்பீல்டு (Sheffield) நகரத்தில் 1866-ல் சில கோர பலாத்காரச் செயல்களைச் செய்தனர். வேலை நிறுத்தத்தில் பங்குபற்ருத ஒரு "கருங்காலித்" தொழிலாளியின் வீட்டில் வெடி மருந்தைப் பற்ற வைத்துக் கொடுமை விளைவித்தனர். அதற்குச் சில நாட்களுக்கு முன்னர் தான் அதே நகரத்தில் பல தேசிய தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் கூடி ஒரு மகாநாடு நடத்தினர்.

### முதலாளிமார் புகார்

எனவே இந்தப் பலாத்காரச் செயல் தொழிற் சங்க மகாநாட்டின் ஆலோசனைகளுடன் தொடர்புடையது என்ற ஒரு கூக் குரலைக் கிளப்ப முடிந்தது. இந்தச் சூழ்நிலையில் முதலாளிமாரும் ஏனையோரும் தொழிற் சங்கங்கள் பலாத்கார இயக்கங்கள் என்றும் தேச சுபீட்சத்திற்கு முரண்பாடானவையென்றும் ஒரு அபாண்டமான புகாரைப் பரப்பி விட்டனர்.

### பொதுஜன அபிப்பிராயம்

"இலட்சக்கணக்கான பேர்கள் திரண்டு வேலை நிறுத்தம் செய்கிறார்கள். பொருளாதாரத்தை நிலை தளம்பச் செய்கிறார்கள். தனி மனிதனின் சுதந்திரத்தை ஆக்கிரமிப்புச் செய்கிறார்கள். இவர்களின் நடவடிக்கைகளைப் பற்றி தீர்க்கமானதொரு விசாரணை நடாத்த வேண்டும்'' என்ற பொது ஜன அபிப்பிராயம் தீவிரமாக உருவெடுத்தது.

### சங்கத் தலைவர்கள் வேண்டுகோள்

தொழிற் சங்கத் தலைவர்களும் ஒரு விசாரணைக் கமிஷனை நியமிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். விசாரணைக் கமிஷன் ஒன்று நியமிக்கப்படில் தான் தொழிற் சங்கங்கள் மேல் சுமத்தப்பட்ட அபாண்டமான குற்றச்சாட்டை நிராகரிக்க முடியும்என அவர்கள் உணர்ந்தனர்.

### சங்கம் தொடுத்த வழக்கில் தீர்ப்பு

1867-ல் ஒரு தொழிற் சங்கம் அதனுடைய கிளை ஸ்தாபனமொன்றில் பொருளாளராகக் கடமை பார்த்த ஒருவர் சங்கத்தின் பணத்தை தப்பாக சுவீகரித்தார் என்ற ஒரு குற்றச்சாட்டின் பேரில் அவர் மீது வழக்குத் தொடர நேர்ந்தது. நட்புறவுச் சங்கம்என்ற கோதாவில் பதியப்பட்ட சங்கம் அந்தத் தொழிற் சங்கம். அதுவரை காலமும் அவ்வாறு பதியப் பெற்ற சங்கங்கள் சட்ட ரீதியான ஏகத்துவம் (Legal Personality) உடையன என்றும். அவைகள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர உரித்துடையன என்றும் பல வட்டாரங்களிலும்கருதப்பட்டுவந்தது. ஆனால் எதிர்பார்த்திராத வகையில் உயர்தர நீதிமன்றம் அச் சங்கம் தொடுத்த வழக்கை நிராகரித்து அத்தகைய சங்கங்கள் வேலைநிறுத்தம் முதலாய சட்டத்திற்குப் புறம்பான குறிக்கோள்களைக் கொண்டு இயங்குகின்றமையால் அவை சட்ட ரீதியான ஏகத்துவம் அற்றவையென்றும் சட்டங்கள் வழங்கும் பாதுகாப்புக்கு லாயக்கற்றவையென்றும் தீர்ப்பளித்தது.

### ஆபத்தான விளைவு

இதன் விளைவு தொழிற்சங்கங்களைப் பேராபத்திற்குள்ளாக்கியது. ஏனெனில்இலட்சக்கணக்கில் நிதி திரட்டி விநியோகித்து வரும் சங்கங்களின் நிதிக்குவைகள் சட்டப் பாதுகாப்பு அற்றவையாய் போயின. நேர்மையற்ற பொருளாளன் யாராகிலும் எவ்வளவு பணத்தையும் தப்பாக அப்புறப்படுத்திவிட்டால் சங்கம் ஒரு வகையிலும் அவன்மீது நடவடிக்கை எடுக்க முடியாது. இந்த நிலைமையை உடனடியாகச் சீர்படுத்த வேண்டும் என்றும் அதற்கேற்ற சட்டம் உருவாக்க வேண்டும் என்றும் தொழிற் சங்கங்கள் கோரிக்கை செய்தன. இவ்விடயத்தின் விளைவுகளையும் விசாரணை செய்யவேண்டியிருந்தது.

அரசாங்கம் தொழிற் சங்கங்களின் பல அம்சங்களைப் பற்றியும் தீர்க்கமாக விசாரணை செய்யுமாறு ஒரு விசாரணைக் குழுவை நியமித்தது.

(தொடரும்)

## சுதந்திரன் சந்தா விபரம்

வாரந் தோறும் சுதந்திரனைத் தவறுமல் பெற்றுக்கொள்ள நேயர்களுக்கு ஒரே ஒரு வழி சந்தாதாரராகச் சேர்ந்து கொள்வதுதான்.

**வருடச் சந்தா ரூபா. 10-00**

(தபாற் செலவு உட்பட)

ஒரு வருடத்துக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

சர்குலேஷன் மனேஜர்
சுதந்திரன்.
தபால் பெட்டி 1183,
கொழும்பு.

## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

**ஆனந்தா வைத்தியசாலை,**
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11

# இளந் தமிழர் இயக்கம் ஏன்?

## மாணவர்கள் அரசியலில் ஈடுபடலாமா?

## இயக்கத் தலைவர் விளக்கம் தருகிறார்

தமிழ் மொழியையும், தமிழ் இனத்தையும் அவர் தம் நாட்டையும் காக்கும் மும் முனைப் போரிலே மாணவர்கள் தம் பங்கையும் செலுத்த வேண்டிய கடமையை நிறைவேற்றுவதற்காகத் தான் இளந் தமிழர் இயக்கம் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது.

'இறுதிப் போர் இதுவே ஈட்டிக்கு மார்பு காட்ட எம் செல்வங்களே வருக' என்று அன்னை செல்வா எந்த நேரம் அழைத்தாலும் மறு வார்த்தை பேசாது கர்மவீரராக மாறிப் பணியிலே இறங்கச் சித்தமுள்ளவர்கள் மாத்திரமே இயக்கத்தில் சேரும்படி அழைக்கப்படுகிறார்கள்.

மேற் கண்டவாறு கூறும் அறிக்கையொன்றை இளந் தமிழர் இயக்கத்தின் தலைவர் திரு. கரிகாலன் வெளியிட்டிருக்கிறார். இளந் தமிழர் இயக்கம் அண்மையில் யாழ்ப்பாணத்தில் தொடங்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

"இளந் தமிழர் இயக்கம் ஏன்? மாணவர்கள் அரசியலில் ஈடுபடுவது சரியா?" என்பன போன்ற கேள்விகளுக்கு அறிக்கையில் விளக்கமான பதில் தரப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:—

சிதறுபட்டுச் சீர் கெட்டுக் கிடந்த இத்தாலிக்குப் புத்துயிர் அளிக்குமுகமாக மாஜினியாலே தோற்றுவிக்கப்பட்ட இயக்கம் 'இளம் இத்தாலியர்' (Young Italians) என்ற இயக்கமாகும். இத்தாலியின் புது வாழ்விலே இவ்வியக்கத்திற்கு முக்கிய பங்குண்டு. அதே போன்று இந்நாட்டிலும் உரிமைகள் மறுக்கப்பட்டு, வசதிகள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும் தமிழ் பேசும் மக்களின் வருங்காலச் சந்ததியாகிய மாணவர்களும், அரசினரின் ஓர வஞ்சனையான சட்டங்களாலும திட்டங்களாலும், குறிப்பாகக் கல்வித் துறையிலே [illegible] களாலும் பாதிக்கப்பட்டிருப்பது தெரிந்தது. இத்தகைய தடைகளையெல்லாம் சுக்குநூறாக்கி விட்டுத் தமிழ் மாணவர்களும் இதர மாணவர்களுடன் சிறப்பாகச் செழிப்பாக வாழ்வதற்கு இத்தாலிய இளைஞர்களால் தோற்றுவிக்கப்பட்ட 'இளம் இத்தாலியர்' இயக்கம் போன்றதோர் இளம் தமிழர் இயக்கம் அத்தியாவசியமாகும்.

### சூழ்நிலையை மாற்ற வேண்டும்

எமது மாணவர் மத்தியிலே, ஆங்கிலப் பேச்சுக்களாலும், ஆடம்பர உடையலங்காரங்களாலும் பேசக்கூடிய பரந்த கண்ணோட்டப் பிரமுகர்கள், மாணவர் தம் இன, மொழியுணர்ச்சிகளை மட்டந்தட்டிவிடக் கூடியதும், அவர் தம் வளரும் உணர்ச்சிகளையெல்லாம் 'மரத்துப்போன' தன்மையுடைத்தாகச் செய்யத் தக்கதுமான முயற்சிகளையும் பிரச்சாரங்களையும் கையாண்டு வருகின்றனர். இதனால் எமமாணவர்கள் கறுவாக்காட்டு உணர்ச்சி பெற்றோராகவும் புற நானூற்றிற்கும் கலிங்கத்துப் பரணிக்கும் புழுதிவாரி யிறைக்கத்தக்கோராகவும் மாறக்கூடிய பேராபத்து எதிர்நோக்கியிருக்கின்றது. உரிமைப் [illegible] தொடுப்பது வகுப்பு வாதமாகும் என்ற மனோபாவம் அவர் தம் இளம் உள்ளங்களிலே வேரூன்றி, எமது பரம்பரை வீரத்தை யிழந்து நிற்கும் கோழையர் கூட்டமாக எமது மாணவர் சமுதாயம் மாறக்கூடிய நிலையேற்படலாம். இத்தகைய சூழ்நிலையை முளையிலேயேகிள்ளி யெறிவதற்கு இளம் தமிழர் இயக்கம் அத்தியாவசியமாகும்.

### நடவடிக்கைக்கு தூண்டுகோல்

இந் நாட்டிலே தமிழ் பேசும் மக்களை எதிர்நோக்கும் இடுக்கண் நிறைந்த பிரச்னைகள் பலவுள. அவற்றுள், தமிழ் பேசும் மாணவர்களை எதிர் நோக்கக் கூடிய பிரச்னைகளை அதாவது, அரசாங்கம் கல்வித் துறையிலே புகுத்தக்கூடியதும், தமிழ் பேசும் மாணவர்களைப்பாதிக்கக்கூடியதும், தொழிற் கல்லூரி விடயம், கலைக் கல்லூரி விடயம் போன்றவையுமான பிரச்னைகளில், தமிழ் பேசும் மாணவர்களின் கண்டனத்தையோ அவசியமானால் ஏகோபித்த எதிர்ப்பைப் பிரதிபலிக்கக்கூடிய நடவடிக்கைகளையோ மேற்கொள்ளவும்,இவை போன்ற விடயங்களில் எமது பெற்றோரையும், ஆசிரியர் சங்கங்களையும் கல்லூரி அதிபர்கள் சங்கத்தையும் நடவடிக்கையெடுக்கும்படி உரிமையோடு தூண்டவும் இளம் தமிழர் இயக்கம் அத்தியாவசியமாகும்.

### அரசியல் வகுப்புகள்

தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரையில், குறைந்த சத விகிதத்தினர், இன்னும் கூட 'சமஷ்டி' யென்றால் என்ன என்று புரியாதவர்களாக விருக்கின்றனர். இத்தன்மையோருக்கு

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு. பரஞ்சோதி, வட்டுக்கோட்டை.

கே: தேன் எங்கு கிடைக்கும்?

ப: காதலியின் இதழிலே, மழலையின் மொழியிலே கவிதையின் சுவையிலே தேன் கிடைக்கிறது.

ஃ

கே. மாரபூபதி, பண்டைத்தரிப்பு.

கே: தமிழர்கள் சிங்களம் கற்ருல் சிங்களவர்களையே தோற்கடித்துவிட்டு நல்ல உத்தியோகங்களைப் பிடித்துக்கொள்ளலாம் என்று வட பகுதியில் உள்ள ஒரு கல்வி அதிகாரி கூறுகிருராம். இது சரியா?

ப: இது பகற்கனவு. சிங்களவராகப் பிறந்து சிங்களம் ஆங்கிலம் எல்லாம் கற்றவரான சேர் ஒலிவர் குணதிலகாவையே வேண்டாம் கவர்ணர் ஜெனரல் பதவிக்கு அவர் ஒரு கிறிஸ்தவராகவுள்ள காரணத்தால் என்று கூறுகிருர்கள். இன்று சிங்களம் மட்டும் சட்டம். நாளை பௌத்தம் மட்டும் சட்டம். சிங்களம் கற்றுப் பதவி தேடலாம் என்று எண்ணும் கல்வி அதிகாரி, அவர் கட்டிக்காக்கும்இந்து மதத்தையும் விட்டு பௌத்தராவாரா பதவிக்காக?

ஃ

செ. கந்தப்பு, கிரான்குளம்.

கே: எதிர் மன்ன சிங்கத்துக்கு வரவேற்பு நடத்துவதானல் அரசாங்கமே இரகசியமாகப் பணந்தருகிறதாம் மெய்தானு?

ப: யாரோ பணம் கொடுத்துத்தான் வரவேற்புகள் ஏற்பாடு செய்யப்படுவதாகக் கேள்வி. ஆனல் பணம் கொடுப்பது அரசாங்கம் தானு என்பது திட்டவட்டமாகத் தெரியவில்லை.

ஃ

ஆர். செல்வராசா, ஹட்டன்.

கே: பெரஹராக்களில் தொடர்ந்து யானைகள் குழப்படி செய்து மக்கள் இன்னல் உறுகிருர்களே, இது எதனுல்?

ப: தேவ கோபத்தினுல் என்று சிலர் நினைக்கிருர்கள். இன்பதுன்பமெல்லாம் கர்ம பயன் என்பது புத்தரின் கொள்கை. 1958 மே—ஜூனில் தமிழர்களைச் சில

# கேட்டுப் பாருங்கள்



குயுக்தி

மிருகங்கள் தாக்கின. 1959 ஆகஸ்டில் சிங்களவர்களைச் சில மிருகங்கள் வாட்டியிருக்கின்றன. பண்டாவின் ஆட்சியில் எதுதான் நடைபெறவில்லை? வெள்ளம், வைசூரி வகுப்புக்கலவரம். யானை வெறி, பெருந் தீ இத்தியாதி.

கே: பெரஹரா என்ருல் அதன் பொருள் என்ன?

ப: பெரஹரா என்பது சிதைந்துபட்ட ஒரு தமிழ்ச் சொல். சிங்கள மொழிக்குள் புகுந்து கொண்டது. புற உலா என்பது பெரஹராவாகிவிட்டது. தெய்வம், மன்னர் வெளியில் உலா வருவது புற உலா எனப்படும். புற உலா வருவதை பழம் புலவர்கள் பாட்டாகப் பாடியிருக்கிருர்கள். மூவர் உலா, குலோத்துங்க சோழன் உலா போன்ற பிரபந்தங்கள் உதாரணம். கோவை, உலா, அந்தாதி போன்ற பிரபந்தங்களைப் பாடுவதற்கு ஒட்டக் கூத்தன் என்ற புலவர் பெயர் பெற்றவர்.

ஃ

பெ. தேவசேனன்,
யாழ்ப்பாணம்.

கே: அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் இப்போது என்ன செய்கிறது?

ப: அகில இலங்கை ஆனைப் பந்திக் காங்கிரஸாகத் தேய்ந்து, இப்போது அகில இலங்கை ஆதரிப்பாரற்ற காங்கிரஸாகக் கருகி விட்டது.

ஃ

பெ. கதிராமன், மகிழடித்தீவு

கே: எதிர் மான சிங்க(ள)ம் பத்திரிகையில் அறிக்கைகள் வெளியிடுகிருரே, அவற்றைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: "இரவல் சேலையில் இது நல்ல கொய்யகம்" என்ற பழமொழிக்கு எதிர் மன்னர் புது உதாரணமாக விளங்குகிருர் என்பதே என் அபிப்பிராயம்.

ஃ

து. கனகசபை, மட்டக்களப்பு

கே: மரணம் யாருக்குக் கவலையைத் தருகிறது? யாருக்கு மகிழ்ச்சியைத் தருகிறது?.

ப: ஆயுள்இன்ஷூரன்ஷ்கம்பனிக்கு கவலையைத் தருகிறது. சவப் பெட்டிக் கம்பனிக்கு மகிழ்ச்சியைத் தருகிறது?.

> மிஸ்டர் குயுக்தியார்
> C/o சுதந்திரன்.
> த. பெ. 1183
> கொழும்பு.—12

ஃ

திருமதி ப. சிவபாக்கியம்,
வட்டுக்கோட்டை

கே: கட்டப்பொம்மன் படத்தில் யார் யார் பிரமாதமாக நடிக்கிருர்கள்?

ப: பிரமாதம் என்ற தரத்தை எட்டிப் பிடிப்பவர்கள் இருவர். ஒருவர் சிவாஜி. மற்றவர் முத்துலக்ஷ்மி.

ஃ

ப. சேரன், கொழும்பு

கே: தி. மு. க. வின் அடுத்த பொதுச் செயலாளர் யார்?

ப: திரும்பவும் நெடுஞ்செழியனே வரலாம். அவர் முன் வராவிட்டால் கருணுநிதி தான். சென்னை மாநகர சபைத் தேர்தலில் தமது செயல் வன்மையைக் காட்டி விட்ட கலைஞருக்கு ஒரு 'கிளைம்' உண்டல்லவா?

ஃ

எஸ்.பாலசுந்தரம்,உருத்திரபுரம்

கே: ஐக்கிய தேசியக் கட்சி இப்பொழுது என்ன செய்ய வேண்டும்?

ப: தனது பெயரை மாற்றிக் கொள்ள வேண்டும். தமிழ்ப் பகுதியில் உள்ள எந்தத் தொகுதிக்கும் அது போட்டியிடாமல் சிங்களப் பிரதேசத்தில் மட்டும் 125 அபேட்சகர்களை நிறுத்தப் போகிறதாம். ஐக்கியம் எங்கே யிருக்கிறது? தேசியம் எங்கே யிருக்கிறது? சிங்கள ஐக்கியக் கட்சி யென்பது பொருத்தமான பெயர்.

ஃ

பொ. இராசரத்தினம், கல்முனை

கே: மட்டக்களப்பில் அட்வகேட் மயில்வாகனம் என்பவர் ஒரு சமசமாஜிஸ்டாமே அடுத்த தடவை போட்டியிடுவாரா பொதுத் தேர்தலில்?

ப: ஆம், சொந்த வாழ்க்கையில் அவர் ஒரு அருமையான சமசமாஜிஸ்ட். உயர்வு தாழ்வை ஒதுக்கி விட்டுத் திருமணம் செய்தவர், தன் வேலைகளைத் தன் கையாலே செய்துமுடிக்கும் பண்பினர், பாராட்டக் கூடிய குணநலம் படைத்தவர். ஆனல் அரசியலில் அவர் ஒரு குழந்தை. [illegible] ராத குழந்தை. அரசியல் அவருக்கு வேண்டாத விளையாட்டு. இப்போதுதான் ஏதோ சம்பாதித்துத் தலை தூக்கப் பார்க்கும் அவரை நண்பர்கள் என்ற வேஷத்தில் அவரை அணுகும்விரோதிகள் அவரைக் கவிழ்த்து விடப் பார்க்கிருர்கள், அவர் ஏமாந்தாலும், அவர் மனைவி புத்திசாலி, விடமாட்டார்.

ஃ

பூ. செல்லமணி, தம்பலகாமம்

கே: திருவாளர் சுந்தரலிங்கம் விடாப்பிடியாகப் பாராளுமன்றப் பதவியை துறப்பேன் என்று நிற்கிருரே, இதன் இரகசியம் என்ன?

ப: அந்த வகையில் திரு. சுந்தரலிங்கம் புத்திசாலி. அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டுத் தோற்கடிக்கப் படுவதைவிட இப்போதே வெற்றிகரமாக வாபஸ் வாங்கிவிடுவது மேல் என்பதை உணர்ந்துகொண்டவர் அவர். திரு. டி. எஸ்' சேனநாயகா கல்தா கொடுக்கப் போகிருர் என்பதைத் தெரிந்து கொண்டதும், மலைநாட்டுத் தமிழர் பிரச்னையில் மந்திரி பதவியை ராஜினுமாச் செய்வதுபோல் நாடகமாடி வீரர் என்ற புகழைத் தட்டிக் கொண்டவர் அல்லவா?

ஃ

எஸ். கே. குமார்,
திருகோணமலை

கே: மூதூர்ப் பிரதிநிதி முகம்மது அலியின் நிலை யென்ன?

ப: பரிதாப நிலை தான்! எதிர் மான சிங்க(ள)ரை விட சித்த வைத்தியர் தகுதியற்றவர் அரசியல் பதவிக்கு என்பதை பண்டாரநாயகாவே காட்டிவிட்டாரே!

ஃ

ஏ. எஸ்.நியாஸ், பருத்தித்துறை

கே: அடுப்படி முன்னணித் தலைவர் திரு. வி. குமாரசாமியின் குரலையே காணவில்லையே!

ப: கொஞ்சநாள் கூப்பாடு போட்டுப் பார்த்தார். ஏன் என்று கேட்பார் இல்லை. தொண்டைத் தண்ணீரை மிச்சப் படுத்துவோம் என்று சும்மா இருக்கிருர். அவர் கவலையெல்லாம் சாவகச்சேரியா, கிளிநொச்சியா என்பதே. எதிலும் அவர் வெல்வது நிச்சயமில்லை. அவரைப் போன்ற சோடாப் புட்டி வீரர்களுக்கெல்லாம் காலம் அகாலமாகிவிட்டது.

ஃ

பத்மலீலா சுப்பிரமணியம்,
கரவெட்டி.

கே: தங்களைப் போலப் பதில் கூறுவதற்கு எதைப் படிக்க வேண்டும்?

ப: உலகத்தைப் படிக்க வேண்டும். அத்தோடு உங்களைப் போன்ருரின் உள்ளத்தையும் படிக்க வேண்டும்.

கே: கரவெட்டியைப் பற்றியும் அங்கு வாழும் மக்களைப் பற்றியும் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: "கரவை வெட்டியவர்கள்" அதாவது கள்ளங்கபடமற்றவர்கள் அங்கு வாழும் மக்கள் என்ருர் என் நண்பரான பண்டிதர் ஒருவர். நான் முதலில் நம்பவில்லை; திருவாளர் கந்தையா பாராளுமன்றப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் நம்பிக்கொண்டேன்! 'குருகுலம் பெருகிவாழ் கரவையம்பதி' என்கிருர் ஒரு புலவர். ஆமாம், அங்கு தமிழாசிரியர்கள் நிறையஇருக்கிருர்களாமே உண்மையா?

ஃ

என். இராசம்மா, கந்தகெதர.

கே: நைடதம் எனும் நன்னூலையிட்டு இன்னுளில் எவரும் எதுவும் சொல்லக் காணுமே, ஏனே?

ப: இதோ நீங்களே சொல்லி விட்டீர்களே, இது போதாதா? நைடதம் கற்ருேர்க்கு ஔடதமாம்! கற்றவருக்கே அது மருந்தாக விருந்தால் கல்லார்க்கு வேம்பாகிவிட்டதில் என்ன வியப்பு?

ஃ

ஐ. இராசநாயகம்,
யாழ்ப்பாணம்.

கே: 'ஒட்டார் பின்சென்று ஒருவன் வாழ்தலின் அந்நிலையே கெட்டான் எனப்படுதல் நன்று' என்று ஒரு குறள் இருக்கிறதே, இது தெரியாத நிர்மூடங்களும் உலகில் உண்டா?

ப: ஏன் இல்லை? இந்த அரிய குறளின் அடிச்சுவட்டைய கூடப் பட்டிருப்பார் அறிய மாட்டார். அவருடைக் இராஜகுரு புலவர் மணியும் அறியமாட்டார்.



## நமக்குத் தொழில் கவிதை

நமக்குத் தொழில் கவிதை என்ற வெண்பாப் போட்டியில் கவிதை எழுத விரும்புவோர் யாவரும் கலந்து கொள்ளலாம். கட்டுப்பாடு கிடையாது. ஒருவர் எத்தனை வெண்பாக்கள் வேண்டுமானுலும் எழுதலாம். கவிதை அஞ்சல் அட்டையில் (Post Card) மட்டுந்தான் எழுதப்பட வேண்டும். ஒரு அட்டையில் ஒரு வெண்பாவுக்கு மேல் எழுதக் கூடாது. கீழே தரப்பட்டிருக்கும் அச்சிட்ட முகவரியை வெட்டி அஞ்சலட்டையில் ஒட்டி அனுப்ப வேண்டும். அச்சிட்ட முகவரி ஒட்டப் பெருத அட்டைகள் கவனிக்கப்படமாட்டா.

### போட்டி இல :.9

இந்த எட்டாவது வெண்பாப் போட்டிக்கு "காட்டிக் கொடுத்த கயவர் வரிசையிலே?" என்ற முதலடி தரப்பட்டிருக்கிறது. இதை வைத்தே வெண்பா எழுதப்பட வேண்டும். இலக்கியச் சுவைக்கும், நகைச் சுவைக்கும், அங்கதச் சுவைக்கும் (Satire) முக்கிய மதிப்பு அளிக்கப்படும். மத்தியஸ்தர்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற வெண்பாக்கள் சுதந்திரனில் வெளியாகும். மிகச் சிறந்த வெண்பாவை எழுதியவருக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

— ஆசிரியர் : சுதந்திரன்.

> 'நமக்குத் தொழில் கவிதை'
> C/o ஆசிரியர்,
> சுதந்திரன்,
> த. பெ. 1183,
> கொழும்பு—12.

வெண்பாக்கள்
கிடைக்க வேண்டிய
முடிவு தேதி
15—9—59

"காட்டிக் கொடுத்த
கயவர் வரிசையிலே"


# அன்பர்களே!

நீங்கள் எவ்வளவு நல்ல உணவுகள் சாப்பிட்டாலும் உடல் மெலிந்துகொண்டே போகிறதா? பசியின்மை பல் ஈறு கரைதல், கை கால் நோவு, சோம்பல், சிறுநீருடன் சக்தி போகுதல் என்பன போன்ற வியாதிகளால் கஷ்டப்படுகிறீர்களா? அப்படியானுல் மூன்று விதமான சிகிச்சைகள் தேவை.

உள் சுத்தி, புறச் சுத்தி, இரண சிகிச்சைகள் இச் சிகிச்சைகளுக்கு ஒரே வார்த்தையில் பதில்

ஸ்பேமடோன் கொம்பவுண்ட்
(Spermatone Compound)

ஒரு பிரபல ஜெர்மன் டாக்டரின் மருந்து சீட்டிலிருந்து தயார் செய்த ஒரு அற்புத சக்திவாய்ந்த மருந்தாகும்.

8 அவுன்ஸ் பாட்டில் மருந்தின் விலை ரூ. 3/25
வி. பி. பி. தனி.
விபரங்களுக்கும் வி. பி. பி. ஆடர்களுக்கும்,
டாக்டர்
'மோடர்ன் கிலினிக்'
(MODERN CLINIC)
255, காலி ரோட், கொழும்பு-4.
பம்பலப்பிட்டிய கண்வண்ட் எதிரில்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'வகுப்பு வாதம்' என்றால் என்ன?

## சரியான பொருள் தெரியாமல் பலரும் தப்பாக இந்தச் சொல்லை உபயோகிக்கிறார்கள்

## உத்தமர் காந்திஜீ கூட இவர்கள் கருத்துப்படி வகுப்புவாதியே!

'வகுப்புவாதம்', 'வகுப்பு வாதிகள்' என்ற சொற்கள் இப்போது நமது நாட்டு அரசியல்வாதிகளின் நாக்குகளில் அடிபடுவது போல, உலகத்தில் எந்த நாட்டு மக்கள் வாயிலும் உருண்டு புரண்டுகொண்டிருக்கவில்லை; இந்த சொற்களைப் பிறர்மீது சர்வசாதாரணமாக அடிக்கடி உபயோகிப்பவர்கள் அதை ஒரு 'பாஷாணக்' வைத்துக்கொண்டிருக்கிறார்கள். 'வகுப்புவாதம்' என்பது பயங்கரமான பெரியதொரு பூதம்போலவும் அது நாட்டுக்கே பெரிய பேராபத்துபோலவும் வர்ணித்து, இந்த நாட்டிலுள்ள சிறுபான்மை சமூகத்தினர்களின் நியாயமான குரலுக்கு 'வகுப்புவாத' முத்திரையைக் குத்தி, அவ்வுரிமைக் குரலை வெளிப்படுத்துவோரை 'வகுப்புவாதிகள்' எனச் சாடுகிறார்கள்.

### தீமையா?

'வகுப்புவாதம்' என்றால் என்ன? அதைக் கூறும் எவருக்கும் அதன் பொருள் தெரியாது; இதற்குத் திட்டமான பொருளை இதுவரை கூறியவரும் யாரும் இல்லை. பிரச்சார வலிமையின் காரணத்தினால், தங்கள் தலைவர்கள் சொல்வதைப் போல சிஷ்ய கோடிகளும் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்; பெரிய கட்சிக்காரர்கள் சொல்வதைக் கண்டு, சிறிய கட்சிக்காரர்களும் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். 'வகுப்புவாதம்' என்ற வார்த்தை தீமையைக் குறிப்பிடும்போது சேர்த்து சொல்லப்படுவதால், அது பெரியதொரு தீமைபோலும் என்று பாமர மக்கள் நினைத்து அவர்களும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

### தவறான கருத்துகள்

'வகுப்புவாதம்' என்பதற்கு சரியான பொருள் தெரியுமோ, தெரியாதோ அவ்வார்த்தையின் உபயோகத்திலிருந்து தாங்களாகவே ஒவ்வொரு பொருளை பலரும் பலவிதமாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். தங்கள் வகுப்புக்காக மட்டும் வாதம் புரிவது ஒரு வகுப்பினர் ஒன்று சேர்ந்து தங்கள் வகுப்பின் நன்மையை மட்டும் நாடுவது என்று சிலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். 'வகுப்புவாதம்' என்பது இரண்டு வகுப்புக்கிடையில் சண்டையை மூட்டுவதற்காக உள்ளது என்பது சிலரின் எண்ணமாகும். மற்றும் பெரும்பாலோர் நேரடியாகவே ஒரு அர்த்தத்தை உறுதிப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

### காந்தியும் அம்பேத்காரும் வகுப்புவாதிகள்

'வகுப்புவாதம்' என்றால் வகுப்பின் பேரால் உரிமைகளை வற்புறுத்துவது என்றே சொல்லப்படுவதைக் கேட்கிறோம். இதையே குற்றமென குறிப்பிடப்படுகிறது. இந்து சமுதாயத்தில் ஒரு பகுதியினரான தாழ்த்தப்பட்டோர்களுக்காக கட்சி வைத்து நடத்திய காலஞ்சென்ற டாக்டர் அம்பேத்காரும், தம்மை ஒரு இந்து சனாதனி என்று பிரகடனப்படுத்திக்கொண்டு இந்து மதத்தின் உரிமைகளையும், அதில் ஒரு பிரிவான அரிசனங்களின் நன்மையையும் நாடி பகிரங்கமாக உழைத்த காலஞ்சென்ற காந்திஜீயும் முதல் தரமான 'வகுப்புவாதிகள்' என்பதை ஒப்புக்கொள்ளாமல் இருக்க முடியாது. முன்னவர் அரசியல் நிர்ணய சாஸனத்தை வகுத்த பெருமையையும் பின்னவர் இந் நாட்டுக்கே நிரந்தர பாதை காட்டிய பெருமையையும் வகித்து வருவது வகுப்புவாதத்தின வெற்றியே யாகுமல்லவா?

### வெளியில் சொன்னால் சிரிப்பார்கள்

அகராதி அர்த்தப்படி பார்க்கப்போனால், 'வகுப்புவாதம்' என்ற தமிழ் வார்த்தை எந்த பழைய தமிழ் அகராதியிலும் இல்லை; அதன் அர்த்தமுமில்லை ஆங்கிலத்தில் 'கம்யூனல்' (Communal) என்ற வார்த்தையிலிருந்துதான், 'கம்யூனலிஸம்' 'கம்யூனலிஸ்ட்' என்ற வார்த்தைகள் வந்துள்ளன. அதற்குத்தான் 'வகுப்பு வகுப்புவாதம்' 'வகுப்பு வாதிகள்' என்று தமிழில் அர்த்தம் பிரித்திருக்கிறார்கள். அந்த மூல வார்த்தைக்கு, எப்படித்தான் ஒரு சமூகத்தை, இனத்தை தாக்குவதற்குரிய அர்த்தத்தை இந்த நாட்டின் புத்திசாலிகள் கண்டு பிடித்தார்களோ! அது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். இந்த அர்த்தத்தை, கண்டு பிடித்ததிலிருந்து, அவர்களுடைய குறுகிய, துவேஷ இதயம் தான் நமக்கு வெளிச்சமாகத் தெரிகிறது. நமது நாட்டுக்கு வெளியே போய், கம்யூனலிஸம், அல்லது கம்யூனலிஸ்ட் என்ற வார்த்தையை உபயோகப்படுத்தினால், இந்த நாட்டில் உள்ள அர்த்தமே அதற்கில்லை. அது எந்த வகையிலும், ஒரு மதத்தையோ, மதப் பிரிவையோ குறிப்பிடாது; அப்படி அர்த்தங் கூறினால் சிரிப்பார்கள்.

### மூலம் பிரெஞ்சு மொழி

கம்யூனல், என்ற மூல வார்த்தை ஆங்கிலமல்ல. கம்யூனல் என்ற சொல்லோடு 'இஸம்' 'இஸ்ட்' என்ற சொற்களைத்தான் ஆங்கில மொழியில் சேர்த்திருக்கிறார்கள். 'கம்யூனல்' என்ற சொல்லின் மூலமொழி 'பிரெஞ்சு' ஆகும். அம்மொழியில் 'கொம்யூன்' என்பது பஞ்சாயத்து போன்ற மாகாணப் பிரிவினையைக் குறிக்கிறது. இப்பகுதி வேலைகளுக்கு, கம்யூனல் வேலை என்று குறிப்பிடப்படுகிறது. ஆக்ஸ்போர்ட் அகராதியில் பார்த்தால், 'கம்யூன்' என்பதற்கு 'நிர்வாக சவுகரியத்துக்காக அமைக்கப்பட்டுள்ள சிறு பிரதேசம்' என்று பொருள் கூறப்பட்டிருப்பதைக்காணலாம்.

(13-ம் பக்கம் பார்க்க)


தலை முடியை சிவுவதல்ல உங்கள் பிரச்னை!
நீங்கள் விரும்புவதுபோல்
தலை முடியைச் சிவுவது எப்படி என்பதுதான்!

நேத்திர லோக

உங்கள் பிரச்னையை தீர்க்கிறது.

விசேஷ கலவைப் பொருட்கள் சேர்க்கப்பட்ட தனித் தயாரிப்பான நேத்திரலோக தைலம் தலையைக் குளிரச் செய்கிறது. உச்சந் தலையை சுத்தப்படுத்துகிறது. சொடுகு ஏற்படாமல் தடுக்கிறது. நீண்ட, அடர்ந்த, சுருண்ட, ஆரோக்கியமான கேசத்தை வளர்க்கிறது.

நேத்திரலோக தைலம்

★ தலை மயிர் நரைப்பதைத் தடுக்கிறது.
★ கண் பார்வையை துலக்குகிறது.
★ தலை சம்பந்தப்பட்ட எல்லா வியாதிகளையும் தடுக்கிறது.
★ கண் சம்பந்தப்பட்ட வியாதிகளைப் போக்குகிறது.
★ பீனிசம் ★ தலை எரிவு ★ தடிமல்
★ குளிர் ★ நரம்புத்தளர்ச்சி ★ தலைவலி
★ பல், காது சம்பந்தப்பட்ட சகல வியாதிகளையும் குணமாக்குகிறது.

நேத்திர லோகத் தைலம் இலங்கையடங்கிலும், அல்லது நேரில் எம்மிடமும் கிடைக்கும்.

விலை: 6 அவுன்ஸ் போத்தல் ரூபா 3/- தபாற் செலவு 50 சதம்.

டபிள்யு. கே. ஜினதாஸ,
ஆயுர்வேத வைத்தியர்
161, நோறிஸ்றோட், புறக்கோட்டை
கொழும்பு


# தமிழியக்கம்

"தேசமெல்லாம் தமிழியக்கம் செழிக்கச் செய்வோம்"

தமிழியக்கம் எங்கும் பரவத்தொடங்கியுளது. தமிழர்கள் வாழும் பகுதிகளிற் பல இடங்களில் இந்த இயக்கத்துக்குப் பேராதரவு கிடைத்துள்ளது. மலைநாட்டுத் தமிழர் தங்கள் கருமங்களை எல்லாம் தமிழிலே நடத்தி வருகிறார்கள். ஏனைய பகுதிகளிலுள்ள தமிழர்களிலும் பார்க்க மலைநாட்டுத் தமிழர் தமிழுக்கு முதன்மை கொடுத்து வருகின்றனர். எனினும் அங்கு ஆங்கிலம் கற்ற சிலர் தமிழுக்கு இன்னும் முதன்மை கொடுக்கவில்லை. இந்தச் செய்தியை மலைநாட்டுத் தொண்டர் அறிவித்திருக்கிறார். மலைநாட்டுத் தமிழியக்கத் தொண்டர்கள் இத் துறையில் தங்கள் கருத்தைச் செலுத்தித் தொண்டாற்றுதல் வேண்டும்.

### செலவோ சிரமமோ எதுவும் இல்லை

தமிழியக்கத் தொண்டர்கள் நூற்றுக் கணக்கிற் சேர முன்வந்துளர். ஆயிரக் கணக்கிற் சேர்தல் வேண்டும். மூன்று சதத்துக்கு ஓர் அஞ்சல் அட்டையை வாங்கி உங்கள் பெயர், முகவரி, வயது, தொழில் முதலியவற்றை எழுதிச் சுதந்திரனுக்கு அனுப்புங்கள். தமிழ்த் தாய்க்குத் தொண்டு செய்தற்குத் தக்க தருணம் இது. "தமிழுக்குத் தலையைக் கொடுப்போம்" அன்னை மொழிக்கு ஆருயிரைக் கொடுப்போம் என்று வாய்ப்பந்தல் போடுவதாலோ, பொது மக்களை ஏமாற்றுவதாலோ பயனில்லை. எவ்வித சிரமமும் இன்றிச் செலவுமின்றித் தமிழ்த் தாயைத் தலைமேல் வைத்துப் போற்றுதற்கு வழி காட்டுவது தமிழியக்கம். தமிழ் ஆர்வமுள்ள, தன்மான உணர்ச்சியுள்ள, நெஞ்சில் உறுதியுள்ள அனைவரையும் தொண்டர்களாகச் சேருமாறு தமிழியக்கம் அழைக்கிறது.

எனவே உடனே சேருங்கள், உங்கள் நண்பர்களையும் சேரச் சொல்லுங்கள்.

### மாணவர்களுக்கு வேண்டுகோள்

தமிழியக்கத்தை நன்கு பரப்பத்தக்க வாய்ப்பு ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் மிகவுண்டு. பாடசாலைகளிலும் கல்லூரிகளிலுமுள்ள ஆசிரியர்கள் தங்களால் இயன்றவற்றைச் செய்தல் வேண்டும். இக்காலத் தமிழ் மாணவர்கள் தமிழுணர்ச்சி நிறைந்தவர்கள்; இளமைத் துடிப்புடையவர்கள்; இவர்கள் நினைத்தால் 24 மணித்தியாலத்துக்குள் தமிழியக்கத்தை எங்கும் பரப்பி நிலைக்கச் செய்யலாம். தமிழுக்கு முதன்மை கொடாத ஆசிரியர்களும் தங்களுடைய மாணவர்களைப் பார்த்து வெட்கப்பட்டுத் தம் கடமையை உணர்ந்து கொள்வர். வீட்டிலே பெற்றோரையும், பாடசாலையிலே ஆசிரியர்களையும் "தமிழுக்கு முதன்மை கொடுங்கள், ஆங்கிலத்துக்கு அடிமையாகாதீர்கள், தாய் மொழியை வாழ வையுங்கள்; சிங்களப் பெருமக்களின் மொழி ஆர்வத்தைப் பாருங்கள்" என்று மாணவர்கள் கேட்டால் அவர்கள் என்ன சொல்லுவார்கள்? இலங்கை முழுவதும் வாழும் தமிழ் மாணவர்களே உங்களுக்கு ஒரு வேண்டுகோள்: தமிழியக்கத்தை உடனே பரப்புங்கள்; தொண்டர்களாகச் சேருங்கள்.

### தொண்டர் கடமை

தமிழாசிரியர்கள், தமிழ்ப் பண்டிதர்கள், தமிழ் எழுத்தாளர்கள், தமிழ்ப் பத்திராசிரியர்கள், தமிழ்த் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்-இவர்கள் தமிழிலே தங்கள் அலுவல்கள் யாவற்றையும் செய்து ஏனைய மக்க

(9-ம் பக்கம் பார்க்க)

# கடவுளுக்குக் கடிதம்

ஹே, தெய்வமே! இலங்கையின் பல இடங்களிலும் இருந்து உங்களுடைய கையாட்களைத் தூண்டிவிட்டு என்னை இப்படி அவமானப்படுத்தியிருக்க வேண்டாம். உங்களுடையபோஸ்ட் கார்ட்டுகளைப் படிக்க முடியாமல் நான்திணறிக்கொண்டிருக்கும் பொழுது கொழும்பிலிருந்து ஒரு அனந்த தேவனையும், வெள்ளவத்தையில் இருந்து ஒரு பாலசுப்பிரமணியத்தையும், கொடிகாமத்திலிருந்து திருமதி பரம் பாலசுந்தரத்தையும் இன்னும் பலரையும் ஏவிவிட்டு இப்படிக் கட்டுக் கட்டாக கடிதங்களை எழுதச் செய்து என்னைச் சோதிக்கலாமா?

நீங்கள் என்னைச் சோதித்த போதிலும் எனக்கு ஒரு வரவேற்பும் விருந்தும் நடத்த வேண்டும் என்று இப்பொழுதாவது புத்தி வந்ததே யென்று மகிழ்ச்சி அடைகிறேன். நீங்கள் எழுதியது போலவே நம்மைச் சேர்ந்தவர்களிடம் கொஞ்சம் கொஞ்சம் பணத்தைப் பிடுங்கி மதிள் சுவருக்குள்ளே பொலிஸ் காவலில் விருந்தை ஜமாய்த்து விடலாம். எனது விருந்துக்குப் பணம் தர மறுப்பவர்களைப் பிடித்து எப்படியும் எங்காவது மாற்றம் செய்து விட வேண்டியதுதான். அப்புறம் சிறப்பாக நடந்து விடும் எனது விருந்தும் விழாவும்.

விழாவென்றதும் கண்டிப் பெரஹெரவிழாத்தான் நினைவுக்கு வருகிறது. அங்கு ஒரு யானை வெறி பிடித்து விட்டது. மிருகத்தோடு மிருகங்கள் கூடி மிருகத்தனமாக நடந்தால், மிருகம் எனப்பட்டது வெறி பிடிக்காமல் சிரித்துக்கொண்டு கூத்தாடவா செய்யும்? அந்த யானைக்கு வெறி பிடித்ததால் சிலர் செத்துப் போய் விட்டதை பெரிதாகச் சொல்ல வரவில்லை; கடந்த இனக் கலவரத்தின்போது நூற்றுக்கணக்கான மனிதர்களை மனிதர்களே வெட்டிக் கொத்தி வேடிக்கை செய்த பொழுது யார் கவலைப்பட்டார்கள்? கேவலம் இது மிருகந்தானே! ஆகவே, நான் சொல்ல வந்தது என்னவென்றால் அந்த மிருகம் வெறிபிடித்து அட்டகாசம் செய்ய, மக்கள் கிலி பிடித்து அவதிப்பட்ட பொழுது கூட சில மனிதர் புடவைகளை, பொருட்களை, நகைகளைச் சூறையாடினார்களாம். எப்படி இருக்கிறது ஈழத்து மக்களின் பண்பாடு?

பண்பாட்டோடு விஸ்வாமித்திரருக்கு எழுதினேன், தமிழியக்கம் ஒன்று ஆரம்பித்திருக்கிறது, செய்திகளை தமிழிலேயே அனுப்புங்கள் என்று. "சில தமிழர்கள் சிங்களவரைத் தேடிப் பிடித்து சிங்களத்தில் மனுக்களை எழுதி, தமிழில் கையெழுத்திட்டு அரசாங்க அலுவலகங்களுக்கு அனுப்பிவைத்துத் தமிழ்க் குமாஸ்தாக்களை தலை குனிய வைத்து அவமானப்படுத்தும் பொழுது நான் மட்டும் செய்தால் என்னக் காணும் வந்தது?" என்கிறார் மிஸ்டர் விஸ்வாமித்திரர்.

தமிழர் அவமானப்பட வேண்டிய காலம் இதுதான் என்று சிலர் சொல்லுகிறார்கள். கடந்த வாரச் சுதந்திரனில் முன்பக்கம் பார்த்தீர்களா? எட்டப்பன் என்பதற்கு மிஸ்டர் குயுக்தியார் இன்னொரு பொருளைக் கண்டு பிடித்திருக்கிறார். இதை அகராதியில் பொறித்து வையுங்கள். வருங்காலத்துத் தமிழர் பார்த்துக் கண்ணீர்

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வறுமை தாங்காது மக்கள்சாவு! ஊழல் மலிந்து நிர்வாகத்தில் சீர்கேடு!!

## சுதந்திர ஆட்சியில் முன்னேற்றம் எங்கே? என்று கேட்டால் இப்படிவருகிறது பதில்:

## திட்டம் போட்டிருக்கிறோம்-இருந்துபாருங்கள்

சென்னை, ஆக. 26—

இந்தியா சுதந்திரமடைந்து 12 ஆண்டுகள் ஆகின்றன. இந்த 12 ஆண்டுகளில் சுதந்திர சர்க்கார் சாதித்தது என்ன? நாடு முன்னேறியிருக்கிறதா?

முன்னேற்றத்தைப்பற்றி ஆள்வோரைக் கேட்டால் "ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டுக்கொண்டு வருகிறோம். இன்னும் கொஞ்சக் காலம் இருந்து பாருங்கள், இந்தியாவில் பாலுந் தேனும் கலந்து ஓடவில்லையா என்று" என்பதாகப் பேசுகிறார்கள்.

### கடன்

ஐந்தாண்டுத் திட்டங்களின் வண்டவாளங்களைச் சொல்லி முடியாது. இரண்டு திட்டங்கள் திவாலாகி இப்போது மூன்றாவதில் வந்து நிற்கிறது பிற நாடு சென்று கையேந்தி வந்துதான் இங்கு திட்டம் தொடங்கப்படுகிறது. அமெரிக்காவிடம் முடிந்த அளவு கடன் வாங்கியாகிவிட்டது. ருஷ்யாவிடமும் அப்படியே. இந்த இரண்டு இடங்களிலும் இனி தலைகாட்ட முடியாது. வாங்கின கடனைத் திருப்பிக் கொடுக்கவே வக்கில்லாத போது மீண்டும் கடன் கேட்பது எப்படி? கப்சிப். வாங்கின முதல் ஒரு பக்கம் இருக்க வட்டிகூடக் கொடுக்க முடியவில்லையாம்!

ஆயினும் விட்டார்களா? மூன்றாவது ஐந்தாண்டுத்திட்டத்துக்கு பணம் பெற ஜப்பானுக்கு போக இருக்கிறார்கள். கைநீட்டத் தொடங்கியவன் யாரிடம் நீட்டினால் தான் என்ன கெட்டுவிடும் என்ற எண்ணம்!

### கேடுகள் சூழும்

ஐந்தாண்டுத் திட்டங்கள் ஆரம்பமாவதோடு ஒரு அறிவிப்பும் வரும். அதாவது "மக்களே நாடு செழிக்கத் திட்டம் போடுகிறோம். வயிற்றை வாயைக் கட்டி அதற்குப் பணம் கொடுங்கள். இப்போது உடனடியாக ஏற்படக்கூடிய கஷ்டங்களைப் பொருட்படுத்தாதீர்கள்" என்று அறிவிப்பார்கள். தொடர்ந்து வரி உயர்வு, விலைவாசிகள் ஏற்றம் இன்ன பிற கேடுகள் சூழும்.

### வடக்கும் தெற்கும்

திட்டங்களிலும் பாகுபாடுகள். வடக்கு—தெற்கு என்று பார்த்துத்தான் பணம் ஒதுக்கப்படுகிறது. திட்டத்தின் பெருந்தொகையான பணம் வடக்கிலே முடக்கப்படும். சாட்டுக்கு ஒரு சிறு தொகை தெற்குக்குக் கிடைக்கும். அது மூக்குப் பொடிக்குத் தான் போதும்! அதாவது கிடைக்கிறதே என்று தமிழ் நாடு மந்திரிகள் பெருமை கொண்டு பேசுகிறார்கள்.

ஆனால் மக்களோ வேறு விதமாகக் கேட்கிறார்கள். "ஏன் இந்தப் பாகுபாடு? வீதாசாரப்படி நமக்கும் தொகை ஒதுக்குங்கள். நாமென்ன வரி கொடாதவர்களா? உரிமையை வழங்க ஏன் தயக்கம்?" என்று கேட்கிறார்கள்.

### சாதனைகள்

முன்னேற்றம்பற்றி குறிப்பிடும்போது இந்தலட்சணத்திலுள்ள திட்டம்பற்றித் தம்பட்டம் அடிக்கிறார்கள் ஆட்சியாளர்கள்; சாதனைகள் என்ன என்று பார்க்கலாம் என்றால், அந்தோ!பரிதாபம்!!

### சென்னைக் கடிதம்

சுதந்திரன் சென்னை நிருபர்
**ஈழத்தரசன்**

நாட்டிலே ஊழல் மலிந்துவிட்டது. லஞ்சப் பழக்கம் ஏற்பட்டுவிட்டது. காங்கிரஸாரிடமும் சர்க்கார் ஊழியர்களிடமும் பதவிப் பித்து தோன்றிவிட்டது. மக்களுக்கு வயிறார உண்ண உணவில்லை; உடுக்க உடையில்லை; இருக்க வீடில்லை. படிக்க வழியில்லை. இன்னும் எத்தனையோ துன்பங்கள். இவைகள்தாம் சுதந்திர சர்க்காரின் சாதனைகள்!

### ராஜேந்திர பிரசாத்

ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் இந்திய சுதந்திர தினத்தன்று படைகளின் அணிவகுப்பைப் பார்வையிட்டுப் பேசும்போது சுதந்திர சர்க்காரின் ஆட்சியில் உள்ள ஒரு அம்சத்தை அப்படியே கூறினார். வறுமை, அறியாமை, நோய் இந்த மூன்றும் நாட்டை இன்னும் நாசமாக்கி வருவதாகவும் அவற்றை விரைவில் விரட்டியடிக்க வேண்டும் என்றும் கூறினார்.

### ரயில் முன் விழுந்து சாவு

இதற்கு விளக்கம் தருவது போல நாட்டிலே பற்பல சம்பவங்கள் நாளும் பொழுதும் நடந்து வருகின்றன. சமீபத்தில நடந்த சம்பவம் ஒன்று:

மாயவரம் தாலுகா, பல்லவராயப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த கந்தசாமி என்ற வாலிபர் விழுப்புரம் ரயில் நிலையத்தில் எக்ஸ்பிரஸ் வண்டியின் முன் தடால் என்று விழுந்து உயிரை மாய்த்துக் கொண்டார்.

### வறுமை காரணம்

ஏன் அவர் இப்படிச் செத்தார்? அவரிடமிருந்து எடுக்கப்பட்ட கடிதத்தில் காரணம் கூறப்பட்டு இருக்கிறது. கடிதத்தில் சொல்லப்பட்டிருப்பதாவது:- "நான் பரம ஏழை, மூன்று மாதமாக எனக்கு உடம்பு சரியில்லை. எந்த ஆஸ்பத்திரியிலும் என்னைச் சேர்த்துக் கொள்ளவில்லை. வெளியில் இருந்து மருந்து வாங்கி சாப்பிட பணம் இல்லை. வேலை தேடி அலைந்தேன், ஆனால் கிடைக்கவில்லை.

### ரத்தத்தில் சுதந்திரக் கொண்டாட்டம்

"வாழ முடியவில்லை. வைத்திய உலகமே என்னுடைய தற்கொலைக்கு காரணம். சுதந்திரத்தை என்னுடைய ரத்தத்தில் கொண்டாடுங்கள். வேறு வழிகளில் தற்கொலை செய்யலாம் என்றால் அதற்குக்கூட மருந்து வாங்க என்னிடம் பணமில்லை. அதனால்தான் இப்படி செய்கிறேன்"

கந்தசாமியைப்போலப் போய்விட்டவர்கள்தொகை இந்தியாவில் ஏராளம் இன்னும் பசி தாங்காது பருத்திக் கொட்டை, புளியங்கொட்டை தின்பவர்களும், வறுமை தாங்காது பெற்ற பிள்ளையை "பிள்ளையோ பிள்ளை!" என்று விலை கூறி விற்பவர்களும் இருக்கிறார்கள். இப்படியான நிலைமை இருப்பதை ஜனாதிபதி ஒப்புக் கொண்டது பெரிய காரியம்.

### ரூபாவின்மதிப்பு இறக்கம்

உள்ள கேடுகள் போதாவென்று புதிய தொரு ஆபத்தும் இந்தியாவை இப்போது எதிர்நோக்குகிறது. இந்திய ரூபாவின் மதிப்பு இறங்குகிறதாம். "இந்திய ரூபாவின் மதிப்பு நாளுக்கு நாள் வெகு வேகமாகக் குறைந்துகொண்டே வருகிறது. இதைத் தடுத்து நிறுத்தாவிட்டால் இந்தியாவுக்கே பெருத்த ஆபத்து" தலைமை வங்கி (ரிசேர்வ் வங்கி) கவர்னர் வருத்தத்தோடு தெரிவித்திருக்கிறார்.

நாடு விடுதலை அடைந்த 1947ல் இந்திய ரூபாவிற்கு இருந்த மதிப்பில் 29 சதவிகிதம் இப்போது குறைந்துவிட்டது என்று அவர் அறிவித்திருக்கிறார்.

## கடவுளுக்கு கடிதம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கொட்ட வேண்டாமா? போனால் போகட்டும் என்று இம்முறை இக் கடிதத்தை ஒரு மாதிரி நகைச் சுவையாக எழுதிவிட்டேன். படித்துவிட்டு தயவு செய்து சிரியுங்கள். எப்படி எனது சாமர்த்தியம்?

26—8—59 நாரதர்

# இளந் தமிழர் இயக்கம் ஏன்?

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

எமது குறிக்கோள் என்ன என்பதைப் புரிய வைப்பதற்கு 'அரசியல் வகுப்புகள்' நடாத்தப்பட வேண்டியது இன்றியமையாததாகும். இத்தகைய அரசியல் வகுப்புகளை ஒழுங்கு செய்து தரக்கூடிய நிலையமாகவும், 'கனதனவான்கள், மத்தியில் மாத்திரம் அடிபடும் அரசியற் பிரச்னைகளைத் தமது பெற்றோராகிய பொதுமக்களுக்கும் புரிய வைக்க உதவும் பணிமனையாகவும் விளங்க 'இளந் தமிழர்' இயக்கம் அத்தியாவசியமாகிறது.

### மும்முனைப் போராட்டம்

எல்லாவற்றிற்கும்மேலாக எம் இனத்தையும் நாட்டையும் மொழியையும் காக்கும் மும்முனைப் போரிலே எமது பங்கையும் செலுத்த வேண்டிய கடமையைநிறைவேற்ற 'இளந் தமிழர்' இயக்கம் அத்தியாவசியமாகிறது. ஆகவே சமஷ்டியமைப்பிலே தான் எமது இனத்தின் சந்தோஷமும் சாந்தியும்தாங்கியிருக்கிறது என நம்பிக்கை கொண்ட மாணவர்களையும், படித்த இளைஞர்களையும், மாணவிகளையும் (16—24 வயதுக் குட்பட்டோர்) எமது அணியிலே சேர, முன்வாரீர் என அழைக்கிறோம். 'தமிழரசு வாதி நான்' என 'வீண் தம்பட்டம்' அடிப்போரையல்ல, கட்சிப் பணிக்காக உழைக்கக்கூடியோரை உற்சாகம் மிக்கோரை, ஒரு மாதத்தில், அதாவது ஏறக்குறைய 720 மணித்தியாலங்களில் குறைந்த பட்சம் ஐந்து மணித்தியாலங்களையாவது எமது இலட்சியப் பணிக்கு ஒதுக்கக்கூடியோரையே அழைக்கிறோம்.

### மாணவர்களுக்கு அரசியலா?

'மாணவர்களுக்கு அரசியலா?' என அங்கலாய்ப்போர், எம்மை எதிர்நோக்கக்கூடிய பிரச்னைகளைத் தீர்க்கக்கூடியவர்களானால் அங்ஙனம் அங்கலாய்க்கட்டும். 'மாணவர்களே! சுதந்திரப் போரிலே குதியுங்கள், எனக் கூறிய மகாத்மா பொறுப்பற்றவரெனக் கருதுவார்களேயானால் அங்ஙனம்அங்கலாய்க்கட்டும்.கேரளத்தைக் காணுதோராகவும் ஜெர்மன் மாணவர்கள், தம் தாயகத்தை 1815-ம் ஆண்டின் வியன்னு ஒப்பந்தத்தின் மூலம் விடுக்க (Burchenscaft) 'பெர்ச்சென்ஸ்காப்ற்' இயக்கத்தை நிறுவி, சரித்திரம் படைத்த கதையைப் போதிக்க மறுப்போராகவும் இருந்தால் அங்கலாய்க்கட்டும் மாணவர்கள் 'அரசியல்' என்ற பாடத்தைப் பகிஷ்கரிக்க வேண்டுமெனக் கருதுவோரானால் எல்லாவற்றிற்கும் மேலாக 'பதினெட்டு வயது' வாக்குரிமைச் சட்டத்தை அறியாதோரானால் அவர்கள் அங்கலாய்க்கட்டும்.

### இயக்கத்தில் சேர்வோர் தகுதி

இதனால் எமது படிப்புப் பாழாகிவிடாதா என அங்கலாய்க்கக் கூடிய மாணவர்கட்கும் ஒன்று கூற விரும்புகிறோம். நாமும மாணவர்கள் என்ற முறையில் மாணவர்கட்கிருக்கக்கூடிய கஷ்டங்களை எம்மாலே உணர முடிகிறது. ஆகவே தான், மாணவர் தம் பிரச்னை தவிர்ந்த எத்தகைய அரசியல் போராட்டங்களிலும் ஈடுபடுவதில்லை என்ற முடிவை எமது இயக்கம் ஏற்றுக் கொண்டிருக்கின்றது. ஆனால் 'இறுதிப் போர் இதுவே' என்ற நிலை யேற்படும்போது எல்லோரும் வாரீர், தமிழினம் வாழ்வதா மாள்வதா எனத் தீர்மானித்து விடுவோம்' என எமது அண்ணல் செல்வா அழைக்கும் கடைசிக் கட்டத்திலும் கூடத் தொலைவில் நிற்கும் வோர் விலக்கப்பட வேண்டியோராவர். ஆகவேதான் எதையும் தாங்கும் இதயம் படைத்த, சுண்டியெடுக்கப் பட்டவர்களையே வாரீர் என அழைக்கிறோம். 'ஈட்டிக்கு மார்பு காட்ட வாடா மகனே' அல்லது 'வாமகளே' என எம் தந்தை செல்வா எந்த நேரம் அழைத்தாலும் மறுப்புரை பகராது பணியாற்றக் கூடியவர்களையே அழைக்கிறோம்.

### யாழ்ப்பாணம்

யாழ்-குடா நாட்டைச் சேர்ந்த மாணவ மாணவிகளையும், படித்த இளைஞர்களையும், உங்கள் பெயர், வயது, முகவரி, படிப்பின் தராதரம் இவைகளைக் குறித்து, இணைச் செயலாளர், இளந் தமிழர் இயக்கம், 25, 2-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம். இயக்கத்தின் [illegible] கட்

(6-ம் பக்கம் பார்க்க)


## வழுக்கை விழுகின்றதா.....?

அப்படியானல் உடனே

# "ஹெர்பிநேல்"

உபயோகியுங்கள்




இந்த அற்புத தயாரிப்பு

★ உதிர்ந்த மயிர்களை மீண்டும் வளரச் செய்கிறது.

★ மயிர் உதிர்வதைத் தடுக்கின்றது.

இந்த உன்னத தயாரிப்பு மூகலாயச் சக்கிரவர்த்தி ஷா ஆலம் அவர்களின் அரண்மனை வைத்தியர்களது ஏட்டுச் சுவடியில் காணப்பட்ட விபரத்திற்கேற்ப தகுந்த மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டதாகும்.

42 வகையான மூலிகைகள், வேர்கள், மலர்கள் இலைகள் மற்றும் பெருமதியான சாறுகள் கலக்கப்பட்டது. ஒவ்வொரு கலவைப் பொருளும் மனித கேசத்திற்கு நன்மை பயப்பதற்கென பரீட்சிக்கப்பட்டு நிருபணமானது. இந்த ஆச்சரியமான கேச டாணிக்கை தயாரிப்பதற்கு, மேற் கூறப்பட்டவைகள் அனைத்தும் சுத்தமான சீசேம் எண்ணையில் விஞ்ஞான ரீதியாக கலக்கப்பட்டுள்ளன.

"ஹெர்பிநேல்" ஆரோக்கியமான அடர்த்தியான பட்டுப்போன்ற கருமையான கேச வளர்ச்சிக்கு உறுதுணை புரிகின்றது. பலவீனமான மயிர்க் கால்களை வலிமையடையச் செய்கின்றது. இதன் காரணமாக மயிர் உதிர்வது தடுக்கப்படுவதோடு புதிதாக கேசம் வளர ஏதுவாகின்றது.

சோல் ஏஜண்டுகளும் விநியோகஸ்தர்களும்:-

**சிர்ருல் கதீர் அன் கம்பெனி,**

41 & 43, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச கரும மொழித் திணைக் களத்தில்

# தமிழ் ஒழிப்பு வேலை மும்முரம்!

## பொறுப்புள்ள சிங்கள அதிகாரிகள் முன்னின்று நடத்தி வைக்கிறார்கள்

—0—

## பாராளுமன்றத்தில் திரு. கு. வன்னியசிங்கம் அரசாங்கம் மீது பகிரங்க குற்றச்சாட்டு

—0—

## ஊழல்கள் அனைத்தும் அம்பலம்

**“அரசகரும மொழித் திணைக் களத்தில் திட்டமிட்டு தமிழ் ஒழிப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.**

**“தமிழ்ப் பிரிவு செம்மையாக இயங்கிச் சீரிய தொண்டாற்றுவதற்கு சில பொறுப்புவாய்ந்த சிங்கள அதிகாரிகளே எதிரிடையாக நிற்கிறார்கள்”—மக்கள் பிரதிநிதிகள் சபையிலே பகிரங்கமாக இப்படிக் குற்றஞ்சாட்டினார் கோப்பாய்ப் பிரதிநிதி திரு கு. வன்னியசிங்கம்.**

**“சிங்களத்தை வளர்க்க வேண்டுமானால் அதற்குத் தமிழைத் தாழ்த்தித்தானா ஆக வேண்டும்? போட்டி பொறாமைகளின் பிறப்பிடமாயும், ஊழல்களின் உறைவிடமாயும் அரசகரும மொழித் திணைக் களம் மாறியதேன்?”—இவ்வாறு கேட்டார் திரு வன்னியசிங்கம்.**

1959—1960 வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது திரு வன்னியசிங்கம் நிகழ்த்திய உரை அரசகரும மொழித் திணைக் களத்தில் திரைமறைவில் நடைபெறும் விஷயங்களையெல்லாம் அம்பலப்படுத்துவதாய் அமைந்திருந்தது. “இப்படியா அங்கு நடக்கிறது?” என்று உரையைச் செவிமடுத்த சில பிரதிநிதிகளே வாய்விட்டுக் கேட்டார்கள்.

வாசகநேயர்களுக்கு திரு வன்னியசங்கத்தின் பேச்சை முழுமையாகத் தருகிறோம். இன்று இங்கு முதற் பகுதி பிரசுரமாகிறது.

திரு கு. வன்னியசிங்கம் பேச எழுந்தார். அப்போது-

திரு எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா: கௌரவ அங்கத்தவர் ஆங்கிலத்திற் பேசுவாராயின் அவரை விளங்கி விடையளிக்க எனக்கு உதவியாயிருக்கும்.

திரு வன்னியசிங்கம்: கொழும்பு மத்திய தொகுதியின் 3ம் அங்கத்தவர் (திரு தேமிஸ்) சொல்லிய சில குறிப்புகளின் நிமித்தம் நான் தமிழில் பேச உத்தேசித்திருந்தபொழுதிலும் கௌரவ பிரதம மந்திரியாரின் விருப்பத்திற்கிணங்க ஆங்கிலத்தில் பேசுகிறேன்.

கொழும்பு மத்திய தொகுதியின் 3ம் அங்கத்தவர், சமஷ்டிக் கட்சியினர் சிங்களத்தையோ, தமிழையோ விரும்பவில்லை, அவர்கள் உண்மையில் ஆங்கிலத்தையே விரும்புகிறார்கள்என்றார். சமஷ்டிக் கட்சியினராகிய எம்மைப் பொறுத்தவரையில் அக்கூற்று முற்றிலும் பிழையானது என்பதை இதேயிடத்தில் அழுத்தந்திருத்தமாகச் சொல்லவிரும்புகிறேன். தமிழுக்கு மதிப்பான ஒரு இடம் வேண்டும், அந்த இடம் சிங்களத்துக்குரிய இடத்துக்குச் சமமாகவும் அதற்கு எவ்விதத்திலும் குறைவில்லாமலும் இருத்தல் வேண்டும் என்றே நாம் கோருகிறோம். இந்நாட்டில் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளாகிய நாமும், கொழும்பு மத்திய தொகுதியின் 3ம் அங்கத்தவரோ, இச்சபையின் வேறு அங்கத்தவரோ விரும்புவதுபோலவே ஆங்கிலத்தை மேலும் தொடர்ந்து அரசகரும மொழியாக வைத்திராது அதன் இடத்தைத் தேசிய மொழிகள் பெற வேண்டுமென்றே அவாவுகின்றோம்.

இக்குறிப்பை இத்துடன் நிறுத்திக்கொண்டு அரசகரும மொழித் திணைக் களம் எவ்வாறு நடத்தப்படுகிறது என்பதுபற்றி எமது கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். இத்திணைக் களம் செயல்படும் முறை எனக்குப் பெரும் ஏமாற்றத்தைக் கொடுக்கிறது. இத்திணைக் களம் சிங்கள மொழியையும் அதன் வளத்தையும் விருத்தியடையச் செய்யவும், மேலும் பல பாடப் புத்தகங்களையும் பின்னணி இலக்கியம் முதலியனவற்றை ஆக்கவும் எடுக்கும் முயற்சிகளை நான் விளங்கிக்கொள்வதுடன் என் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்வேன்; ஆனால் அத்திணைக் களத்தின் பரிபாலனத்திற்குப் பொறுப்பாக உள்ள சிலர் சிங்கள மொழியை வளர்க்க வேண்டுமாயின் தமிழ் மொழி வளர்ச்சியைத் தடுக்க வேண்டுமெனக் கருதுகிறார்கள். இவ்விடயம் பற்றியே சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

பிரதமருடன் நாம் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டவுடன் அவ்வுடன்படிக்கையைச் செயல் முறையில் கொண்டுவருவதற்கு நாம் பல பிரயத்னங்கள் செய்ததுடன் இத்திணைக் களம்பற்றிய பல விஷயங்களையும் அவருடன் பேசியது அவருக்கு ஞாபகமிருக்கலாம். பிரதமருடன் நாம் பேசிய சில விஷயங்கள்பற்றி இப்பொழுது குறிப்பிட விரும்புகிறேன்.

பொதுமக்கள் பயன்படுத்துவதன்பொருட்டு அரசாங்க காரியாலயங்களிலுள்ள அச்சிடப்பட்ட படிவங்கள் யாவும் தமிழிலும் இருத்தல் வேண்டும் என்னும் விஷயம்பற்றியே நாம் முதன்முதல் பிரதமருடன் பேசினோம். அப்பொழுது நியாயமான அளவு தமிழ் உபயோக அதிகாரச் சட்டம் நிறைவேற்றப்படவில்லை, ஆனால் பிரதமரின் நாலு அம்சச் சூத்திரம் அறிவிக்கப்பட்டிருந்தது. அச்சூத்திரத்தின்படி தமிழ் பேசும் ஒருவர் அரசாங்கத்துடன் தமிழிற் கடிதப்போக்குவரத்து வைத்துக்கொள்ளலாம். அந்த உரிமை மறுக்கப்படவில்லையென்றதனால் அத்தகைய பொதுமக்களின் உபயோகத்தின்பொருட்டு தமிழ்ப் படிவங்கள் ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்பது பெறப்படுகிறது என்பதை அவருக்கு எடுத்துக்காட்டினோம்.

எமது கூற்றைப் பிரதமர் முற்றிலும் சரியெனவும் அவ்வாறு படிவங்கள் தமிழில் கட்டாயம் இருத்தல் வேண்டும் என்பதையும் ஏற்றுக்கொண்டார். ஆனால் அரசகரும மொழித் திணைக் களத்தைப் பரிபாலனம் செய்பவர் எனக் கருதப்பட்ட அந்தக் கனவான் என்ன சொன்னார் தெரியுமா? “நான் அரசாங்க மொழிக்குரிய திணைக்கள ஆணையாளர் என்பதையும், தமிழ்ப் படிவங்களை ஏற்பாடு செய்தல் என் கடமையன்று என்பதையும் வினயமாகச் சமர்ப்பிக்க விரும்புகிறேன்” என்று கூறித் தமிழ்ப் படிவங்களை ஏற்பாடு செய்வது தன் கடமையன்று என மறுத்துவிட்டார். எம்மைப் பொறுத்தவரையில், அப்படிவங்களை யார் ஏற்பாடு செய்ய வேண்டும் என்பது முக்கியமன்று. ஆனால் அரசாங்கம் இப்படிவங்களை ஏற்பாடு செய்தல் வேண்டும் எனக் கூறினோம்.

அத்தருணத்தில் கௌரவ நிதி மந்திரியவர்கள் எமக்கு உதவ முன்வந்து “நான் இதைச் செய்விக்கிறேன், முதலில் எவ்வெப்படிவங்கள் தமிழில் உண்டு, எவையெவை தமிழில் இல்லை என்பதை அறிந்து ஒரு அறிக்கை சமர்ப்பிக்குமாறு திறைசேரி அதிகாரி ஒருவருக்கு நான் பணிக்கிறேன்” என்று கூறினார். அதன்படி திறைசேரி அதிகாரி ஒருவர் இந்த அறிக்கையை ஒரு குறித்த காலத்துள் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் பணிக்கப்பட்டார். அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் ஒப்பந்தம் நிராகரிக்கப்பட்டமை, கலகங்கள், நாம் மறித்து வைக்கப்பட்டமை முதலிய பல சம்பவங்கள் நிகழ்ந்தன. தமிழ்ப் படிவங்களைப்பற்றி நாம் கேட்டுக்கொண்டபடி இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அறிக்கையின்படி 40 சதவீத படிவங்கள் மாத்திரம் இப்பொழுது தமிழில்உண்டு.

திரு எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா: அது பெரும் எண்ணிக்கையல்லவா?

திரு வன்னியசிங்கம்: இல்லை. பொதுமக்கள் பயன்படுத்தும் படிவங்களில் 60 சதவீதம் தமிழில் இல்லை.

திரு பண்டாரநாயகா: சில எடுத்துக்காட்டுகள் கூற முடியுமா?

திரு வன்னியசிங்கம்: உடனடியாக எனக்குக் கூற முடியாது. ஆனால் உங்கள் உத்தியோகத்தரின் அறிக்கையை நீங்களே பார்த்து அறிந்துகொள்ளலாம். அவ்வறிக்கையைச் சபையில் சமர்ப்பிப்பீர்களாயின் விஷயம் விளங்கும். 60 சதவீதத்திற்கு மேலான படிவங்கள் தமிழில் இல்லையென்பதை அந்த அறிக்கை தெளிவாகக் காட்டும் என்பதையே கூற விரும்புகிறேன்.

இது ஒருபுறமிருக்க, தமிழ் மொழி அதிகாரச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின் அச்சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவரப் பிரதமர் என்ன வழிவகைகள் கையாண்டிருக்கிறார் என்பதைத் திட்டவட்டமாக அவரிடமிருந்து அறிய விரும்புகிறேன். இத்தொடர்பில், அரசகரும மொழித் திணைக் களத்திலுள்ள உத்தியோகத்தர் சிலர் தமிழ்—எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கையாளுவதிலேயே தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அதற்கு ஒரு உதாரணம் தருகிறேன். தமிழ்த் தட்டச்செழுத்தாளரும் தமிழ்ப் போதனாசிரியரும் இத்திணைக் களத்திலுள்ளனர். இவர்கள் தமிழ்த் தட்டச்செழுத்துக் கடமைக்கும் தமிழ்ப் போதனாசிரியர் கடமைக்கும் மாத்திரமே நியமிக்கப்பட்டவர்கள். இத்தகைய உத்தியோகத்தர் தாமும் தம் லீவு விண்ணப்பங்களைத் தமிழில் நிரப்ப அனுமதிக்கப்படுவதில்லை. இவர்கள் கூட சிங்களம் அல்லது ஆங்கிலத்திலேயே விண்ணப்பம் செய்ய வேண்டுமென இவ்வுத்தியோகத்தர் விதித்துள்ளனர். இவ்விடயம் பற்றி நாம் பிரதமரிடம் முன்னர் முறையிட்டுள்ளோம். இந்த நடவடிக்கை அத்திணைக் களத்தில் கையாளப்படுகிறதென்பதையும், இத்தகைய சிறுகுணம் அக் கந்தோரிலுள்ள வகுப்புவாதிகள் சிலரிடம் இருக்கிறது என்பதையும், தமக்குத் தெரியாத ஒரு மொழியில் எழுதும்படி தமிழ் உத்தியோகத்தரை அவர்கள் நிர்ப்பந்திக்கிறார்கள் என்பதையும் பிரதமர் மறுக்க முடியுமா? தமிழில் விண்ணப்பங்களை நிரப்பும் முதல் உரிமை கூட ஏன் மறுக்கப்படுகிறது என்பதை எம்மால் விளக்கிக்கொள்ள முடியவில்லை. இத்தகைய மனப்பான்மை உள்ளவர்களாகவே உங்கள் உத்தியோகத்தர் சிலர் காணப்படுகிறார்கள்.

(11-ம் பக்கம் பார்க்க)

இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி!
மங்கையர் மனதுக்குகந்தது

உஷா தையல் மெஷின்களே




- ஒருவரின் ஆயுள் காலம்முழுவதும் உழைக்கக் கூடிய வெகுமதி
- மாதத் தவணைக் கட்டணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
- இலங்கை பூராகவும் விற்பனையாகிறது.
- உங்கள் உள்ளூர் விற்பனையாளர்களைக் கேளுங்கள்.

சோல் ஏஜண்டுகள்:

**ரெய்முசன்ஸ் லிமிட்டெட்,**

**88 A, மெயின் வீதி, கொழும்பு-11**

போன்: 4243, 5060

கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்ஸிலால் நடாத்தப்படுவது

## இளந் தமிழர் இயக்கம் ஏன்?

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

குத் தவறாது சமுகம் கொடுக்க முடியுமெனக் கருதுவோர் மட்டுமே சேர முற்படுங்கள்.

### மன்னார்

மன்னார் வவனியாவைச் சேர்ந்த மேற்படி தன்மையினரை, மேற்கூறிய விபரங்கட்கமைய ஓர் அங்குரார்ப்பணக் கூட்டத்தை ஆரம்பிக்க கேட்டுக்கொள்ளுகிறோம். ஆரம்பக் கூட்டத்திற்கு அவசியமானல் யாழ் நகரிலிருந்து பிரதிநிதிகள் அனுப்பிவைக்கப்படுவர். இயக்கத்தின் சட்டதிட்டங்கள் அனுப்பிவைக்கப்படும்.

### கிழக்கு மாகாணம்

கிழக்கு மாகாண மாணவ மாணவிகளையும் படித்த இளைஞர்களையும் இளந் தமிழர் இயக்கத்தை நிறுவி, வட மாகாணத்திற்கு வழி காட்டுங்கள் எனக் கேட்கிறோம். கல்விப் பிரச்னைகளில் கண்டனக் கணை தொடுக்கவும், பாதுகாப்பு அணை அமைக்கவும் வாரீர் என அழைக்கிறோம்.

### மலைநாடு

கல்வி வசதிகள் கட்டுப்படுத்தப்பட்ட மலைநாட்டு மாணவர்களே, உங்கள் வசதிகளைப் பெருக்கித் தருவதற்குப் போராடத் தயாராயிருக்கிறார்கள் வட, கிழக்குமாணவ மாணவிகள். ‘இளந் தமிழர்’ இயக்கக் கிளைகளை நிறுவி ஒரணியிலே சேர வாரீர் என நேசக் கரம் நீட்டுகிறோம். விலகி நில்லாதீர் என வேண்டுகோள் விடுக்கிறோம். யாழ் நகரில் படிக்கும் அத்தனை மலைநாட்டு மாணவர்களும் எமது அணியிலே அங்கம் வகிக்கிறார்கள் என்பதையும் செயற்குழுவில் இடம்பெற்றுப் பணியாற்றுகிறார்களென்பதையும் மகிழ்ச்சியோடு அறியத் தருகிறோம்.

### இதர பகுதிகள்

இதர பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்களையும் ‘இளந் தமிழர்’ இயக்கக் கிளைகளை நிறுவுங்கள், எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள் என வேண்டிக் கொள்ளுகிறோம். இப்போது கிடைத்துள்ள பாடசாலை விடுமுறை நாட்கள் தமிழ் பேசும் மாணவர்கட்கு விடுதலை பெற்றுத் தரக்கூடிய வித்துக்களை நாட்டுவதற்காகப் பயன்படுத்தப்படட்டும்.




சீனாவின் இயற்கை எழில் மிக்க நகரங்களிலே கன்சௌவும் (Hanchow) ஒன்று. மலைகளும், ஆறுகளும், வாவிகளும், பூஞ்சோலைகளும் நிறைந்து விளங்குகின்றன. அழகு மிக்க பூஞ்சோலைகளும், அவற்றின் நடுவே பரந்து கிடக்கும் வாவிகளும், வாவிகளிலே மிதந்து செல்லும் உல்லாச வள்ளங்களும், வள்ளங்களை ஓட்டும் வனப்பு மிக்க வனிதையரும் இன்னபிற இயற்கைக் காட்சிகளும் கண்டோர் உயிருண்ணும் கூற்றாக அமைந்துள்ளன கன்சௌவில். ஏழ்மையும், எளிமையும், புரட்சியும் போர்வீரர் ஆட்சியுமிக்க செஞ்சீனாவிலா இத்தகைய எழில் மிக்க காட்சிகள்!

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என எண்ணிக் கன்சௌ காட்சிகளை எழுத்தோவியமாக்கலாமோவென்றால் அவை எழுத்திலடங்கா. உலகம் இன்புறக் கண்டு நானின்புற முடியாதிருக்கின்றதே!

### சினிமா

சினிமாவொன்றிற்குச் சென்றிருந்தோம். இரண்டாவது உலகப் போர் நடந்த காலத்தைப் பின்னணியாகக் கொண்டு எடுக்கப்பட்டது அச் சித்திரம். சப்பானியரின் கொடுமையையும், குவாமின்டாங் கட்சியின் (சியாங்-கை-ஷேக்கின் கட்சி) நாட்டுப் பற்றற்ற நாச வேலைகளையும், பொதுவுடைமையினரின் பொதுநலப் பணியையும், ஆட்சியாளர் சொல்வதைச் செயலாக்குவதால் ஏற்படும் நன்மைகளையும் அப் படம் சிறப்புறச் சித்தரிக்கின்றது. ஹாலிவூட் தயாரிப்புகளிலே காணப்படும் படப்பிடிப்பு நுணுக்கங்கள், காட்சியமைப்புகள், விறுவிறுப்பு முதலியன இப்படத்திலும் காணப்பட்டன.

### உடல் நல மாடங்கள்

கன்சௌவின் வெப்ப தட்ப நிலை உடல் நலத்திற்கு உறுதுணையாக அமைந்துள்ளமையினால் இங்கு தொழிலாளருக்கான உடல் நலமாடங்கள் (Sanitoriums) பல அமைக்கப்பட்டுள்ளன. தீராத நோயுடையோரும், நோய் தீர்ந்து உடல் வலுவற்றிருப்போரும் இங்குள்ள உடல் நல மாடங்களில் தங்கி நலம் பெற்று, உடற் பலம் பெற்றுச் செல்லுகின்றனர். இரயில்வேத் தொழிலாளர், கட்டடத் தொழிலாளர் முதலிய பல்வேறு துறைத் தொழிலாளர்கட்கும் வெவ்வேறு இடங்களில் இம் மாடங்கள் உள்ளன. தொழிற் சங்கங்களே இம் மாடங்களை நிர்வகித்து வருகின்றன. இங்கு தங்கும் காலத்தின் பாதிச் செலவைத் தொழிற் சங்கங்களே ஏற்றுக் கொள்ளுகின்றன.

### மருத்துவ முறைகள்

உடற் பயிற்சி முறை, நீர்ச் சிகிச்சை, மெழுகு பூசுதல், மின்தாக்கு முதலிய பல வகை மருத்துவ முறைகளும் கையாளப்படுகின்றன. இவை பற்றிய விபரங்களை ஓர் உடல் நல மாடத்திற்குச் சென்று கண்டறிந்தோம். நீர் மருத்துவப்பகுதிக்குச் சென்றோம். வெவ்வேறு வெப்ப அளவைக் கொண்ட வெந்நீர்க் குழாய்கள் இருக்கின்றன. நோயாளிகள் குறிக்கப்பட்ட வெப்ப அளவைகளில் வேளை தவறாது குளிக்கின்றனர். எமது நாட்டிலுள்ள கன்னியா வெந்நீரூற்றுக்களின் வெப்ப அளவைகளை அறிந்து நோயாளிகளைத் தகுந்த முறையில் குளிப்பாட்டினால் நோய்கள் பலவற்றைக் குணப்படுத்த முடியும் என்று என்னுக்குள்ளே திட்டமிட்டேன். எண்ணுதல் யார்க்கும் எளியதல்லவா?

### ஊசி குத்து மருத்துவம்

கால் வலிகள், வாதம் போன்ற சில வியாதிகளுக்கு வலியுள்ள இடங்களில் பரபின் மெழுகு (Parrafin wax) பூசி விடுகிறார்கள். சீனருடைய பழைய மருத்துவ முறைகளுள் ஊசிக் குத்து மருத்துவமும் (Acu puncture treatment) ஒன்றாகும். ஊசிகளை வியாதியுள்ள இடங்களில் குத்தி சில மணி நேரங்களுக்குப் பின் கழற்றி எடுக்கிறார்கள். வியாதிக்கேற்றவாறு சில குறிப்பிட்ட உறுப்புகளிலே ஊசி குத்தி விடுகிறார்கள். எந்தெந்த வியாதிக்கு எங்கெங்கு ஊசி குத்த வேண்டுமென்ற விளக்கப் படங்கள் அங்கு மாட்டப்பட்டிருந்தன. மேலை நாட்டு மருத்துவ அறிவோடு இம் முறை பற்றி மேலும் ஆராய்ச்சி நடத்துகிறார்கள்.

### பொழுதுபோக்கு வசதிகள்

நோயாளிகளின் பொழுதுபோக்குக்குப் பல வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. விளையாட்டு வசதிகள், நூல் நிலையங்கள், நடன விருந்துகள், இசை அரங்குகள் முதலியன அங்குண்டு. தலைவர்களின் படங்கள் மாட்டப்பட்டிருக்கின்றன. ஒரு பக்கத்தில் கால்மாக்ஸ், லெனின், ஸ்டாலின் போன்ற உருசியத் தலைவர்களின் படங்களும், மறு பக்கத்தில் மா—சே-துங், சூ—டே, சூ-என்-லே முதலிய சீனத் தலைவர்களின் படங்களும் மாட்டப்பட்டிருக்கின்றன. சீனப் பிரதர் சூ-என்-லே சீனத் தலைவர்களிடையே மூன்றாவது இடத்தைப் பெறுகின்றார்.

### கூட்டுறவு இயக்கம்


"கூடி வாழ்ந்தால் கோடி நன்மையுண்டு" என்பதை மக்கள் உணரச் செய்து, கூட்டுறவு இயக்க மூலம் கிராமியப் பொருளாதாரம் சீர் செய்யப்படுவதை மீ-சா-வூ என்ற கிராமத்திலே நேரிலே காணும் வாய்ப்புப் பெற்றோம். மக்களாட்சி முறை செவ்வனே நடைபெறும் நாடுகளில் மக்கள் குரலே மகேசுவரன் குரலாகக் கருதப்படுகிறது. வன் முறைகளால் மக்கள் அடங்கி, ஒடுங்கிப் பணிந்து வாழும் நாடுகளிலே 'மன்னன் குரலே மக்கள் குரலாக மாறுகின்றது "நெல்லும் உயிரன்றே, நீரும் உயிரன்றே, மன்னனிடத்தே மலர்தலை உலகம்" என்ற கருத்து அங்கு அடிக்கடி மறைமுகமாகவோ நேரடியாகவோ, வலியுறுத்தப்படுகின்றது.

### புறநானூற்றுக் கருத்துக்கு வாழ்வு

மக்களுக்கு என்னென்ன வேண்டும், எவ்வளவு உற்பத்தி செய்யப்பட வேண்டும், எவ்வாறு வாழ வேண்டும் என்பதெல்லாவற்றையும் பொதுவுடைமைக் கட்சியின் தலைமைப்பீடமே (Polit Bureau) நிர்ணயிக்கின்றது. பொதுமக்களுக்கு வேண்டிய அரசியற் பொருளாதார அமைப்பை மாபெருந் தலைவர் மா-சே-துங்கே உருவாக்குகிறார்; மக்கள் அதனை ஏற்றுப் பணிகின்றனர். "நல்[illegible]க்குக் கடனே" என்ற புறநானூற்றுக் கருத்து அங்கு நடைமுறையில் காணப்படுகின்றது.

### விளைச்சலைப் பெருக்க வழி

கூட்டுறவு மூலமாகவே விளைச்சலைப் பெருக்கலாம் எனத் தலைமைப்பீடம் கருதியது. எனவே நாடெங்கும் கூட்டுறவு இயக்கங்கள் தோன்றின. ஒவ்வொரு கிராமத்தின் அரசியல், பொருளாதார, சமூக வாழ்வை அக்கிராமத்தின் கூட்டுறவு இயக்கமே உருவாக்குகின்றது. மீ-சா-வூ கிராமத்தின் கூட்டுறவியக்கத் துணைத் தலைவர் தோழர் வூ-செங்-ஹொஆ எம்மை அழைத்துச் சென்று விளக்கமும் தந்தார்.


கன்சௌவின் அழகிய விடுதி ஒன்று. அதன் அருகே எளிய சீன விவசாயி களிப்போடு கமிராவுக்கு 'போஸ்' தருகிறான்

### வருமான உயர்வு

அந்தக் கிராமத்திலே 228 குடும்பங்கள்; அவற்றிலே மொத்தம் 1116 மக்கள் வசித்து வந்தனர். தேயிலை, நெல், பழங்கள், காய்கறிகள், சிறு தானியங்கள் முதலியவற்றைப் பயிரிடுவதற்கான நிலங்கள் தனித்தனியே இருக்கின்றன. ஆராய்ச்சிக்கான மாதிரித் தோட்டமொன்றும் உளது. 1952-ம் ஆண்டு கூட்டுறவியக்கம் இங்கு தொடங்கப்பெற்றது. 1955-ம் ஆண்டு அக்டோபர் திங்களே இது பல நோக்குக் கூட்டுறவியக்கமாக மாறியது. கூட்டுறவியக்கத்தால் குடும்பங்களின் ஆண்டு வருமானம் எவ்வளவு உயர்ந்துள்ளது என்பதைக் காட்ட துணைத் தலைவர் தந்த புள்ளி விவரங்கள் இதோ: (ஒரு யு ஆன் இலங்கை நாணயத்தில் 2 ரூபாய்க்குச் சமன்)

| ஆண்டு | —குடும்பமொன்றின் சராசரி ஆண்டு வருமானம் |
|---|---|
| 1952 | — 300 யு ஆன் |
| 1954 | — 400 " |
| 1955 | — 510 " |
| 1956 | — 614 " |
| 1957 | — 699 " |

1958-ன் மதிப்பிடப்பட்ட தொகை —800 யு ஆன்.

### ஏழைகளின் கண்ணீர்

பொதுவுடமைப் புரட்சிக்கு முன்னர் நிலப் பிரபுகளுக்குக் கூலி வேலை செய்து வாழ்ந்தனர் மக்கள். அவர்களிடம் சொந்த வீடோ, நிலமோ இருந்திருக்கவில்லை. கூலியாட்களின் பிள்ளைகள் பள்ளிக் கூடத்தைப் பார்த்தறியா. ஆனால் இன்றோ நிலைமை மாறிவிட்டது. நிலப் பிரபுக்கள் ஒடுக்கப்பட்டுள்ளனர். ஏழை விவசாயிகள் அல்லற்பட்டாற்றாது அழுத கண்ணீர் அவர்களின் செல்வத்தைத் தேய்த்துவிட்டது.

### முன்னாள் பிரபுக்கள் கூலிவேலை செய்கிறார்கள்

அவர்களுடைய மாளிகைகளே இன்றைய கூட்டுறவியக்கத் தலைமை நிலையங்கள். அவர்கள் அரசியலிலே அநாதைகள்; வாக்களிக்கவோ, தேர்தலில் போட்டியிடவோ உரிமை கிடையாது. தொந்தரவு கொடுக்கும் பிரபுக்கள் சிறைச் சாலைக்கோ அல்லது சிரச் சேதத்திற்கோ அனுப்பப்படுகின்றனர். அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு; அடங்காது 'அடம்' பிடிக்கும் கொடிகள் அழிக்கப்படுகின்றன. மனம் மாறிய பிரபுக்கள் மாத்திரம் கூட்டுறவியக்கத்தின் சாதாரண உறுப்பினராகச் சேர்ந்து மற்றவர்களைப் போலக் கூலி வேலை செய்கிறார்களாம்! ஆண்டாண்டு காலம் நிலங்களுக்கு மன்னராயிருந்து உல்லாச வாழ்க்கை நடத்தியோர் இன்று ஆண்டிகளாகளாகிவிட்டனர். குடை நிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர் நடை மெலிந்தின்று நண்ணினும் நண்ணுவரல்லவா?

### கைக்கு எட்டியது கானல் நீரோ!

மனம் மாறிய பிரபுவின் மனநிலை இன்று எப்படியுள்ளது என்பதை அறிய ஆவல் கொண்டோம். அதே கிராமத்தில் ஒருவர் இருக்கின்றார் என அழைத்துச் சென்றார்கள். ஏதோ வேலை காரணமாக அன்று அவர் வெளியே போய்விட்டார் என்று கூறப்பட்டது. கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை! அல்லது கைக்கெட்டியது வெறும் கானல் நீர்தானோ!


### அரசியல் வகுப்புகள்

கூட்டுறவு இயக்கத் தலைமை நிலையங்கள் அரசியல் வகுப்புகளை நடத்துகின்றன. தலை நகரிலிருந்து வரும் ஆணைகளை நிறைவேற்றுவதற்கு இந் நிலையங்கள் பெரிதும் பயன்படுகின்றன. கட்சிப் பிரசாரக் கூட்டங்களும், பிரசாரக் கருத்துக்களடங்கிய இசை நாடகங்களும் நடைபெறுவதற்கான மேடையுமுண்டு. கிராம உற்பத்திப் பெருக்கத் திட்டத்திற்கு அரசாங்கம் கடனுதவிகளை அளிக்க முன்வருகிறதெனினும், இவ்வியக்கங்கள் "தம் கையே தமக்குதவி" என்ற பெரு நோக்கோடு உதவிகளை அதிகம் எதிர்பார்க்காது உழைக்கின்றன.

### அன்றும் இன்றும்

பயிர்களை அழித்துவரும் பூச்சிகளை ஒழிக்க ஆண்டவர்களை வேண்டினார்களாம் முன்னே! பிரார்த்தனை முடித்தும் வந்து பார்த்தால் பயிர்கள் அழிந்தது தான் மிச்சம்! ஆனால் இன்றோ சில குறிப்பிட்ட நாட்களில் எல்லோருமாகச் சேர்ந்து இப் பூச்சிகள் மீது போர் தொடுப்பதால் ஒழிக்க முடிகிறது.

—(தொடரும்)


கன்சௌவின் எழில்மிகு காட்சிகளுள் ஒன்றை செஞ்சீனா சென்ற ஆசிரியர் நல்லெண்ணத் தூதுக் குழுவின் தலைவர் தனிமையில் ரசித்துக் கொண்டிருக்கிறார். கீழே [illegible]தில் கன்சௌ சோலைக் காட்சி ஒன்று.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

SUTANTIRAN

1959 ஆகஸ்ட் மாதம் 30ந் தேதி

194 ஏ, நட்டாதெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183


## பொலீஸும் பொதுமக்களும்

இழக்கு மாகாணத்தில், அதிலும் குறிப்பாக மட்டக்களப்பில் புதியதோர் ஆபத்து தோன்றுகிறது.

இலங்கைவாழ் இருபத்தைந்து லட்சம் தமிழ் பேசும் மக்களும் ஒன்று சேர்ந்து, ஒரே அணியில் நின்று, உரிமைப் போர் தொடுக்க வேண்டிய நாள் நெருங்கிவிட்டது என்பதை உணரும் சக்தியற்றவர்களாயிருக்கிறார்கள் சிலர். ஆளும் கட்சிக்கு பக்கத் துணையாக நிற்பதில்தான் தமது எதிர்கால நல்வாழ்வு தங்கியிருக்கிறது என்று நம்புகிறார்கள் இந்த நாதியற்றவர்கள்.

பண்டாரநாயகாவின் தனிச் சிங்கள அரசாங்கத்திற்கு தமது எதிர்ப்பை தெரிவித்துக்கொண்டே இருப்பது என்று தன்மான உணர்வும், தமிழ்ப்பற்றும், விடுதலை வேட்கையும் கொண்ட தமிழ் பேசும் மக்கள் தீர்மானித்து காரியமாற்றி வருகையில் மேலே குறிப்பிட்டவர்கள் மட்டும் திசைமாறிச் சென்று, தம் இனத்தையே காட்டிக்கொடுக்கும் தோரணையில் நடந்துகொள்கிறார்கள். பட்டிருப்புப் பிரதிநிதி திரு எஸ். யு. எதிர்மன்னசிங்கம் பிரதமரிடம் மண்டியிட்டு, தனிச் சிங்கள அரசாங்கத்தில் அரை மந்திரிப் பதவி பெற்றதையே இங்கு குறிப்பிடுகிறோம்.

இதையல்ல நாம் ஆபத்து என்று ஆரம்பத்தில் சொல்ல வந்தது. இப்படி எப்பொழுதோ ஒருநாள் நடக்கும் என்று எதிர்பார்த்ததுதான். அது நடந்துவிட்டது.

ஆபத்து என்று சொல்ல வந்தது மட்டக்களப்பு பொலீஸார் செய்துவரும் கெடுபிடிகளை—அட்டூழியங்களை! இதுவரை காலமும் இல்லாதபடி இப்போது மூர்க்கத்தனமாகவும் மிருகத்தனமாகவும் நடக்கத் தொடங்கியிருக்கிறார்கள் அவர்கள்!

தேர்தலில் தாம் வெற்றிபெற்ற விதத்தையும் மறந்து, தமிழரசுக் கட்சிக்கும் பொத்துவில் தொகுதி வாக்காளர்களுக்கும் மற்றும் தமிழ் பேசும் மக்களுக்கும் கொடுத்த உறுதி மொழிகளையும் கோட்டை விட்டு விட்டு, பண்டாரநாயகா அரசாங்கத்தில் உதவி மந்திரிப் பதவி பெற்ற பொத்துவில் பிரதிநிதி ஜனாப் முஸ்தபாவுக்கு மட்டக்களப்பில் சிலர் கள்ளத்தனமாக வரவேற்பு அளித்தபோது, அது துரோகம் என்றும், அதைத் தாம் அனுமதிக்க முடியாது என்றும் எதிர்ப்பைக் காட்டுமுகமாக கறுப்புக்கொடி ஏந்தி, அரை மந்திரியைத் திரும்பிப் போ என்று கோஷமிட்ட மக்களுக்கு பொலீஸார் கொடுத்த வெகுமதி என்ன தெரியுமா? அவர்களையெல்லாம் கைது செய்தார்கள்!

துறை நீலாவணைக் கிராமத்தில், உதவி மந்திரிப் பதவி பெற்ற திரு எஸ். யு. எதிர்மன்னசிங்கத்தை கௌரவிக்க 26 பேர் கூட்டிய கூட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்த மக்களுக்கு பொலீஸார் செய்த அட்டூழியத்தை எப்படிச் சொல்வது? கறுப்புக் கொடிகளைப் பிடுங்கினார்கள்! எதிர்ப்பு கோஷமிட்டவர்களை உதைத்து நொறுக்கினார்கள்! பெண்மணி ஒருத்தியை கைது செய்தார்கள்!

அதே அரை மந்திரியாருக்கு கிரான் குளத்தில் 25 பேர் நடத்திய கூட்டத்துக்கு யாரும் எதிர்ப்புத் தெரிவிக்கக் கூடாது என்று பொலீஸார் தடை உத்தரவே போட்டு விட்டார்களாம்.

கல்லாற்றில் திரு. எஸ். யு. எதிர் மன்னசிங்கத்துக்கு அவருடைய கையாட்கள் சிலர் மாலை போட்டு மரியாதை செய்ய ஒரு கூட்டம் ஏற்பாடு செய்தார்கள். அதையொட்டியும் பொலீஸார் மக்களுக்கு கடுமையான உத்தரவு பிறப்பித்திருந்தார்கள். வெளியில் வந்து யாரும் எதிர்ப்பு என்று ஒன்றும் செய்துவிடக் கூடாது என்பது கண்டிப்பான கட்டளையாம்.

ஜனநாயக நாட்டில் மக்கள் தமது பிரதிநிதி ஒருவருக்கு எதிர்ப்பை அமைதியான முறையில் தெரிவிப்பதற்கு உள்ள ஆகச் சிறந்த வழி கறுப்புக் கொடி காட்டுவதும் எதிர்ப்பு கோஷங்கள் முழக்குவதுமேயாகும். எல்லா நாடுகளிலும் உள்ள இந்த வழக்கத்துக்கு இலங்கையில் இப்போது முற்றுப்புள்ளி வைக்க முனைந்திருக்கிறார்கள். அதுவும் தனிச் சிங்கள அரசாங்கத்தில் ஒரே ஒரு தமிழர் ஒட்டிக் கொண்ட பின்னர் கச்சை கட்டிக்கொண்டு நிற்கிறார்கள். அவருக்கு எதிர்ப்புக் காட்டப் படுவதைத் தடை செய்யுமுகமாக ஜனநாயக வழக்கத்தையே குழி தோண்டிப் புதைக்கப் பார்க்கிறார்கள் பொலீஸார்கள்.

இந்த ஆபத்தான பரீட்சை மறவர் திருக் கூட்டம் வாழ் மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. எதற்கும் தமிழ் மக்கள் எதிர்ப்புக் காட்டாமல், எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கும் அரசாங்கம் அதற்குப் பொது மக்களை பொலீஸார் மூலமாக அடித்து, உதைத்து, கைது செய்து பயமுறுத்துவதுதான் வழியென்று கருதுமானால், அதன் விளைவையும் விரைவில் எதிர் நோக்க வேண்டியிருக்கும். பொலீஸார் மீது மக்களுக்கு இருந்து வந்த நம்பிக்கை குலையுமானால் சட்டம், அமைதி, ஒழுங்கு எல்லாம் என்ன ஆகும்? இதை எண்ணிப் பார்க்க வேண்டும் அரசாங்கம்.

துணிந்தவர்கள் மட்டக்களப்பு மக்கள். பொலீஸாரின் அடக்கு முறைக்கு அவர்கள் பணிந்து விட மாட்டார்கள் என்பதை சொல்லி வைக்க வேண்டியது நமது கடமை. தமிழ் மொழிக்காக, இனத்தின் மானத்துக்காக, உரிமைக்காக உயிர் விட வேண்டுமானால் தயங்காது அதையும் செய்யச் சித்தங்கொண்டுள்ள மட்டக்களப்பு மக்களிடம் அரசாங்கம் வாலாட்டுவதும், பொலீஸார் இன்னும் முட்டிக் கொள்வதும் விவேகமாகாது என்பதை இங்கு அழுத்தமாக சொல்லி வைக்க விரும்புகிறோம் — ஆபத்து தவிர்க்கப்பட வேண்டுமேயென்பதற்காக.

பட்டிருப்பார் விருந்து:

# எதற்காக வரவேற்பு வைபவம்

## எட்டப்பன் எதிர் மான சிங்க(ள)த்துக்கு?

## பத்துக் கேள்விகளுக்கு பதில் வருமா?

### ஏற்பாடு செய்தவர்கள் யாரும் சொல்லட்டும் பார்க்கலாம்

[ எழுதியவர் : "இராமபாணம்" சுதந்திரன் விசேஷ நிருபர் ]

மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை மதில் சுவருக்குள்ளே தமிழ்த் துரோகிகள் சிலர் ஒன்றுசேர்ந்து தமிழ் மக்களை ஏமாற்றிய தமிழ்த் துரோகி எதிர் மான சிங்க(ள)த்துக்கு எதற்காக வரவேற்பு அளித்தார்கள்? சிங்களத்துக்கும் தமிழுக்கும் சமஅந்தஸ்து பெற்றுக் கொடுத்துவிட்டார் இந்த மன்னாதி மன்னரான எதிர் மான சிங்க(ள)ம் என்பதற்காகவா? எதற்காக இந்த வரவேற்பு?

"தமிழுக்கு ஆபத்து வருமானால் பாராளுமன்ற அங்கத்தவர் பதவியை இராஜினாமாச் செய்வது" என்று தம் சொந்தக் கையெழுத்தில் ஒப்பமிட்டு சென்ற தேர்தலில் பட்டிருப்புத் தொகுதி மக்களுக்கு வாக்களித்த எதிர் மான சிங்க(ள)ம் தமிழுக்கு ஆபத்து வந்ததினால் தம் பிரதிநிதித்துவத்தை இராஜினாமாச் செய்து வருவதற்கா இந்த வரவேற்பு?

1956ம் ஆண்டு ஜூன் 5ந் தேதி தமிழுக்காக சத்தியாக்கிரகம் செய்த தமிழ் மக்கள் காலிமுகக் கடற்கரையில் அடிபட்டு இரத்தம் சிந்திய நேரத்தில் பாராளுமன்ற மேல் மாடியில் நின்றுசிரித்து சந்தோஷமடைந்து சிங்கள மக்களிடம் "நல்ல பிள்ளை"ப் பட்டம் பெற்றதற்கா இந்த வரவேற்பு?

அதே ஆண்டில் அரசாங்கத்தினால் ஏவிவிடப்பட்ட காடையர்கள் கல்லோயாப் பள்ளத்தாக்கில் குடியேறியும், விவசாயத்திலும் ஈடுபட்டிருந்த பட்டிருப்புத் தொகுதி மக்களைக் கொலை செய்தும், கொள்ளையடித்தும் வாடிகளையும், வண்டிகளையும், வாகனங்களையும் நெருப்புக்கிரையாக்கியும், நெல்லுப் பட்டறைகளை தீமூட்டியும் பழிவாங்கியதற்குப் பதிலாகப் பாராளுமன்றத்திலும் வெளியிலும் வாய் திறக்க அஞ்சி வாழ்விழந்த அம்மக்களைத் தேடிப்போய்ப் பாராது அவர்கள் தேவைகளைப் பெற்றுக் கொடுக்காது பதுங்கிக்கிடந்ததற்கா இந்த வரவேற்பு?

சாந்தமலை புண்ணியஸ்தலத்திற்கு அணிமையில் இருக்கும் 38ம் 39ம் 40ம் காலனிகளில் குடியேறிய சொந்த நிலமற்ற தமிழ் மக்களை வெளியேற்ற முயன்ற கல்லோயா அபிவிருத்திச் சபை யாருக்கு உதவி கொடுத்து நீங்கள் இங்கிருந்து எழுந்து போகாவிட்டால் பொலீஸாரும் இராணுவத்தினரும் உங்களை அடித்து துரத்துவார்கள் என்று அவர்களைப் பயமுறுத்தி காலனிகளிலும் சிங்கள மக்களைக் குடியேற்ற முயன்றதற்காகவா இந்த வரவேற்பு?

1957-ம் ஆண்டு பெரு வெள்ளத்தினால் மக்கள் அகதிகளாகத் தத்தளித்த நேரத்திலும் அதன்பின்னும் பட்டிருப்புத் தொகுதியில் வெள்ளத்தினால் தாக்கப்பட்ட மக்கள் என்னநிலையில் இருக்கிறார்கள் என்று எட்டியும் பாராது இருந்து, சம்பள உயர்வுக்கும் வேலைமாற்றங்களுக்கும் வேலை நியமனங்களுக்கும் அவரைச் சுற்றிக் கொண்டிருக்கும் சுயநலப் பேடிகளின் தேவைகளைப் பூர்த்திசெய்து தம் சொந்த [illegible] கொண்டு போகும் தியாக உணர்ச்சிக்கா இந்த வரவேற்பு? இத்தனைக்குமாக இல்லாவிட்டால் பின்னர் எதற்காக இந்த வரவேற்பு?

1958-ம் ஆண்டு வகுப்புக் கலவரத்தில் 25,000-க்கு மேற்பட்ட தமிழ் மக்கள் உடுத்த உடையோடு தம் சொந்த வீடு வாசல்களை இழந்து ஓடினார்கள். இளம் பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள். பச்சிளங் குழந்தைகள் தெருவில் அடித்துக் கொல்லப்பட்டார்கள். உயிரோடு பெற்றோல் ஊற்றி தமிழ் மக்கள் நெருப்பு வைக்கப்பட்டார்கள். இத்தனை கோர நிகழ்ச்சிகள் முழுவதற்கும் பொறுப்பு இந்த அரசாங்கமே என்று இலங்கையில் உள்ள நடுநிலைமை நோக்குள்ள சிங்களப் பெருமக்களும் உலக நாடுகளும் கூறியபின்னும் அந்த அரசாங்கத்தில் உதவி மந்திரியாகச் சேர்ந்ததற்காகவா இந்த வரவேற்பு?

தமிழ் மக்களிடம் பல்வேறு அரசியல் கட்சிகள் உண்டு; அவை எல்லாம் அரசாங்கத்தின் சிங்களமொழிக் கொள்கையை எதிர்த்து அரசாங்கத்தை வெறுத்து அதற்கு ஒத்துழைப்புக் கொடுக்காமல் மந்திரிப் பதவி, அரை மந்திரிப் பதவி பெற நினைக்காமல் தமிழ்த் தாயின் விடுதலையை நோக்கிச் சத்திய விரதம் அனுஷ்டிக்கின்ற இந்த நேரத்தில் தனிச் சிங்கள அரசாங்கத்தின் எச்சில் எலும்புத் துண்டான உதவி மந்திரிப் பதவியைக் கௌவிக்கொண்டு இலங்கைத் தமிழ் சமூகம் முழுவதையும் காட்டிக் கொடுத்த மாபெரும் துரோகச் செயலுக்காக இந்த வரவேற்பு?

கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் மக்களின் பல்வேறு கட்சிகளும், இஸ்லாமிய மக்களின் பல்வேறு கட்சிகளும் கிழக்கு மாகாணத்தில் புதிய தொகுதி பிரிக்கப்படும்போது சிங்கள மக்களுக்கு ஒரேயொரு தொகுதி மாத்திரமே கொடுகக்வேண்டுமென்று வற்புறுத்திய நேரத்தில் இல்லை கிழக்கு மாகாணத்தில் உள்ள சிங்கள மக்களுக்கு இரண்டு தொகுதிகள் கொடுக்க வேண்டும் என்று தேர்தல் நிர்ணயக் கமிஷனர் முன்னிலையில் பரிந்து பேசிய பெரும் முயற்சிக்காகவா இந்த வரவேற்பு?

தாயாம் தமிழ் மொழியின் கற்பை விற்று எதுவும் செய்ய முடியாத அற்ப அரை மந்திரிப் பதவியைக் கெஞ்சிப் பெற்றுத் தன் சமுதாயத்திற்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் அவமானம் ஈட்டித் துரோகிகளின் பட்டியலில் அழியா இடம் பெற்றதற்கா இந்த வரவேற்பு?

பண்டாரநாயகாவின் ஏக சிங்கள அரசாங்கத்தையும் அதனால் ஆக்கப்பட்ட சிங்களம் மாத்திரம் மசோதாவையும் இதன் பலனாக ஏற்பட்டுக்கொண்டிருக்கும் தமிழ் மக்கள் அடிமை நிலையையும் ஒப்புக்கொண்டு விட்டார் எதிர் மான சிங்க(ள)ம் என்பதற்காகவா? இந்த வரவேற்பு?

இப்படி நாம் மட்டுமல்ல தன்மான உணர்வும் தமிழ்ப் பற்றும் கொண்ட ஒவ்வொரு தமிழனும் தமிழச்சியும் கேட்கிறார்கள். கனதாவளை திரு எஸ். பூபாலபிள்ளை இந்தப் பத்துக் கேள்விகளை

(9-ம் பக்கம் பார்க்க)

## இந்தியாவிலுள்ள இலங்கை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணம் காட்டப்படும்போது மேலும் மூன்று மாத காலத்துக்கு நீடிக்கப்படுகின்றன. மேல்படிப்புக்காகச் செல்பவர்களுக்கு பொதுவாக நீண்டகாலம் இருந்து படித்து முடித்துவிட்டு வருவதற்கு விஸா வழங்கப்படுகிறது.

### அச்சம்

சங்கடமான நிலையில் உள்ள இந்த மாணவர்களின் விஸாக்கள் சம்பந்தமாக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும் என்பது தெரியாமல் மாணவர்கள் திகைக்கிறார்கள். "நீங்கள் முறைப்படி படிக்கப்போவதாகச் சொல்லிப் போகவில்லையே இந்தியாவுக்கு" என்று கூறி அரசாங்கம் தம்மைப் பழி வாங்குமானால் என்ன செய்யலாம் என்றே அவர்களுக்கு புரியவில்லை.

### மாணவர்கள் கோரிக்கை

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இந்திய கல்லூரிகளில் இடம் பிடித்துக் கொண்ட தமது நிலைமையை விளக்கி அந்த மாணவர்கள் தமிழரசுத் தலைவர்களிடம் உதவி கோரியிருப்பதாகத் தெரிகிறது. தமது படிப்பு முடியு மட்டும் இந்தியாவில் இருக்கவும் இலங்கையிலிருந்து படிப்புச் செலவுக்கு பணம் பெற்றுக்கொள்ளவும் வசதி ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதே அவர்கள் கோரிக்கை.

இந்தக் கோரிக்கையை மாணவர்கள் அரசாங்கத்திடம் உடனடியாகச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அப்புறம் தாங்கள் (தலைவர்கள்) ஆக வேண்டியதைக் கவனிக்கலாம் என்றும் தலைவர்கள் மாணவர்களுக்கு ஆலோசனை கூறியிருப்பதாகத் தெரிகிறது.

## தமிழருக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளைகள் எத்தனைபேர்; மற்றவர்கள் எத்தனைபேர் என்று பிரித்துக்கேட்டிருக்கிறாராம். முன்பெல்லாம் வழங்கிவந்த தொகையைத் தொடர்ந்து வழங்குவதற்கிடையில் இது என்ன சந்தேகம் என்பது புதிர்.

### பாரபட்சம்

இப்படியான கேள்விகளோ சுற்றுமாற்றுகளோ சிங்களப்பிரதேசத்திலுள்ள நிலையங்களைப் பொறுத்தவரையில் இல்லையாம். கேள்விமுறையின்றி வேண்டிய தொகைகள் அவற்றிற்கெல்லாம் ஒதுக்கப்படுகின்றன என்று அறிய வருகிறது. சிங்களப் பகுதிகளில் உள்ள ஒரு நிலையத்துக்கு சுமார் 40,000 ரூபா கூட வழங்கப்படுகிறது. தமிழ்பிரதேசத்துக்கோ வழங்கிவந்த தொகையையும் விழுங்கிவிட முனைந்து நிற்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "அமைச்சரே, கல்யாணம்-கடமையோடு நிற்கட்டும் தங்கள் விஜயம்

## பொதுவரவேற்பு வைபவம் எதுவும் நடந்தால் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம்"

## யாழ்நகர் செல்லும் சுகாதார மந்திரி ஜெயசூரியாவுக்கு மக்கள் முன்எச்சரிக்கை

(யாழ்ப்பாணம் சுதந்திரன் நிருபர்)

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவிருக்கும் சுகாதார மந்திரி திரு ஏ. பி. ஜெயசூரியாவுக்கு இங்குள்ள மக்கள் முன்எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள். வருகிற வேலையைக் கவனித்துக்கொண்டு போவதற்குப் பதிலாக மாலை மரியாதைக்கு எல்லாம் கழுத்தை நீட்டிக் காத்திருந்தால் பலமான கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடக்கும் என்று பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்கள்.

தமிழ் பேசும் மக்களுக்கு திங்குக்குமேல் திங்கிழைக்கும் பண்டாரநாயக அரசாங்க மந்திரிகளுக்கு மாலை மரியாதை செய்வதும் வரவேற்பு வழங்குவதும் தமிழ் பேசும் மக்களின் தன்மானத்துக்கே இழுக்கு என்று 'எட்டப்பன்' கூட்டத்தைச் சேர்ந்த ஒருசிலர் தவிர மற்றெல்லோரும் கருதி வருகிறார்கள்.

இதன்படி வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அவ்வப்போது கள்ளத்தனமாக விஜயம் செய்த அமைச்சர்களும் உதவி அமைச்சர்களும் காலடி வைத்த சிறிது நேரத்தில் தலைமறைவாகிக் கம்பி நீட்ட வேண்டிய அளவுக்கு 'மரியாதை' செய்து அனுப்பியிருக்கிறார்கள்.

### எதிர்ப்பு பலமாக இருக்கும்

சுகாதார மந்திரி ஜெயசூரியாவுக்கும் இந்த அனுபவம் வேண்டுமானால் தாராளமாக மாலை போட்டு கேவலமான சலுகை பெற்று வயிறு வளர்க்க இருக்கும் கும்பல் முன் அவர் கழுத்தை நீட்டட்டும்—அப்புறம் கிடைப்பது என்ன என்பதைப் பார்க்கட்டும் என்று பொது இடங்களில், சந்திகளில் வீடுகளில் எல்லாம் பலரும் சொல்லி வருகிறார்கள். இதன் பயனாக மக்களின் உணர்ச்சி வெகுவாகத் தூண்டப்படுகிறது. இம்முறை ஆர்ப்பாட்டம் ஏதும் நடக்கச் சந்தர்ப்பம் ஏற்படுமானால் அது முன்எப்பொழுதும் நடந்ததைக் காட்டிலும் விரிவானதாகவும் பலமானதாகவும் இருக்கும் என்று தோன்றுகிறது.

### விஜயத்தின் நோக்கம்

மந்திரியார் முக்கியமாக அட்வகேட் கே. வி. நடராஜாவின் மச்சானுடைய திருமண வைபவத்தில் கலந்துகொள்வதற்காகவே யாழ்ப்பாணத்துக்கு இம்முறை விஜயம் செய்கிறாராம். திரு நடராஜாவின் குடும்பச் சொத்துப்போன்ற கரவெட்டி விக்னேஸ்வர வித்தியாலய நூல் நிலையத் திறப்பு விழாவிலும் மந்திரியார் கலந்துகொள்வாராம். மந்திரி என்ற வகையில் அல்ல—திரு நடராஜாவின் நண்பர் என்ற முறையிலேயே தனிப்பட்ட ஹோதாவில் இந்த இரண்டும் நடைபெறுமாம்.

### கடமை

இந்தத் தனிப்பட்ட விஜயத்தின்போது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி பற்றிக் கூறப்படும் புகார்கள் சம்பந்தமாக அவர் நேரில் சென்று நிலைமையை தெளிவாக அறிந்துகொள்வார் என்றும் அப்போதிக்கரிமாரின் குறைபாடுகளையும் கேட்டுத் தெரிந்துகொள்வார் என்றும் சொல்லப்படுகிறது.

### புறப்பாடு

மந்திரி எதிர்வரும் 31ந் திகதி இரவு கொழும்பிலிருந்து ரயில் மார்க்கமாகப் புறப்பட்டு முதலாந் திகதி காலை யாழ்ப்பாணம் வந்து சேர்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## எதற்காக . . .

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் துண்டுப் பிரசுரமாகவே அச்சுப்பதித்து வெளியிட்டிருக்கிறார். எதிர் மான சிங்க(ள)த்துக்குத்தான் பேசத் தெரியாதே! குளறுபடி உபதேசம் செய்யும் புலம்பல்ப்புலவர்மணிகளோ அன்றி சகுனிபின்ன என்று அறிக்கைகள் தயாரித்துக் கொடுக்கும் நெட்டை நரிகளோ முடியுமானால் வாய் திறந்து பதில் சொல்லட்டும். அவர்களாலும் முடியாதென்றால் பதுங்கியிருந்து விருந்துண்ட மற்றத் துரோகிகளாவது சொல்லட்டும் எதற்காக வரவேற்பு அளித்தார்கள்? —தொடரும்

## மட்டக்களப்பு . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடங்குவதற்கான ஏற்பாடுகள் நடந்து வந்தன. இன்னும் காரியம் ஆகவில்லையே என்று மக்கள் முடுக்கியதைத் தொடர்ந்து வேலை வேகமாக நடந்தது.

கட்டட அமைப்புப் படங்கள் வரையப்பட்டன. மற்றும் தேவையான வசதிகளும் செய்யப்பட்டன. திட்டம் நிறைவேறும் சமயம் பார்த்து புது உத்தரவு ஒன்று அரசாங்கத்தால் பிறப்பிக்கப்பட்டிருக்கிறதாம். அதன்படி மட்டக்களப்பு தாதிமார் பயிற்சி நிலையம் சம்பந்தமான வேலைகள் அப்படியே ரத்தினபுரிக்கு மாற்றப்படுகின்றன.

முந்திய திட்டத்தில் இடம் பெறாத ரத்தினபுரிக்கு தாதிமார் பயிற்சி நிலையம் கிடைப்பதுபற்றி யாரும் பொறாமைப்படமாட்டார்கள் என்றாலும் மட்டக்களப்புக்கு என்று இருந்தது தற்போது இல்லாமல் போவதன் காரணம் என்ன என்பது தெரிய வேண்டுமல்லவா!

## ஜனநாயக காங்கிரஸ் மகாநாடு

மலைநாட்டுத் தமிழர்களின் மொழிக் கொள்கை தமிழும் இந்த நாட்டின் அரசகரும மொழியாக இருக்கவேண்டும் என்பதே என்று இலங்கை ஜனநாயக காங்கிரஸ், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவற்றின் தலைவர் ஜனப் ஏ. அஸீஸ் பிரஸ்தாப ஸ்தாபனங்களின் எட்டியாந்தோட்டை மாநாட்டில் தலைமைவகித்துப் பேசும்போது கூறினார்.

"அங்கப்ப நகர்" என்று பெயரிடப்பட்ட இடத்திலே மாநாடு கடந்த 22-ந் திகதி சனிக்கிழமை ஆரம்பமாயிற்று. மாநாட்டுக்கு முன்னர் தலைவர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேராவும் மற்றும் பல பிரமுகர்களும் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

### பிரஜாஉரிமை

ஜனப் அஸீஸ் தொடர்ந்து பேசுகையில் மலைநாட்டுத் தமிழரின் பிரஜா உரிமைப் பிரச்னையைத் தீர்க்க ஒரு வழி கூறினார். அரசாங்கம் காலவரையறை வைத்து, மக்கள் தாயகம் திரும்புவதற்கு தூண்டுவதான சலுகைத் திட்டத்தை வழங்க வேண்டுமென்றும் அதை ஏற்றுக்கொள்ளாமல் தொடர்ந்து இங்கு இருப்பவர்கள் எல்லோருக்கும் பிரஜா உரிமை வழங்க வேண்டும் என்றும் சொன்னார்.

தமது காங்கிரஸும் தொண்டமான் காங்கிரஸும் ஒத்துழைப்பதானல் அதன் மூலம் நாட்டுக்கு நன்மை ஏற்படும் என்றும் அவர் கூறினார். மற்றும் மலைநாட்டு மக்களின் வாழ்க்கை நிலையை எடுத்துரைத்துவிட்டு தொகுதி எல்லை நிர்ணயக் கமிஷன் மலைநாட்டு மக்களுக்கு தீங்கு செய்துவிட்டது என்றும் ஜனப் அஸீஸ் வருத்தத்தோடு சொன்னார்.

### பொருளாதாரம்

டாக்டர் என். எம். பெரேரா பேசுகையில் மலைநாட்டுத் தமிழர் இல்லாமல் நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய முடியாது என்றும் அரசாங்கத்தின் 10 வருடத் திட்டமே அவர்கள் இல்லாவிட்டால் உருப்படாது என்றும், அவ்வளவு முக்கியமான மலைநாட்டுத் தமிழருக்கு அரசாங்கம் பிரஜா உரிமை வழங்க மறுப்பது ஆச்சரியமாக இருக்கிறது என்றும் கூறினார்.

### தீர்மானங்கள்

மலைநாட்டுக் குழந்தைகளுக்கு இலவசமாகப் பால் வழங்குவது, ஆண் பெண் தொழிலாளர்களுக்கு சம சம்பளம் தருவது, இப்போதுள்ளதைக் காட்டிலும் கூடுதலான வேதனம் அளிப்பது, பாடசாலைகள் நிறுவுவது சம்பந்தமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இன்னும், வாக்குரிமை, தொழிற்சங்க ஐக்கியம், ஐ. தொ. கா. அதிகாரிகள் வெளியேற்றம், ... தைத்தொழில் சம்பந்தமான தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

## தமிழியக்கம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கு வழிகாட்ட வேண்டியவர்கள். இவர்களிற் பலர் தமிழை ஒதுக்கி ஆங்கிலத்துக்கு இன்னும் அடிபணிந்து வாழுகின்றனர். இவர்களை வழிக்குக்கொண்டுவர வேண்டியது தமிழியக்கத் தொண்டர்தம் கடமையாகும்.

விரைவிலே தமிழியக்கத் தொண்டர்கள் பட்டியல் சுதந்திரனிலே வெளியிடப்படும். தொண்டர்களாகச் சேர விரும்புவோர் தமிழியக்கம், மே/பா சுதந்திரன் த. பெ. எண். 1183, கொழும்பு எனும் முகவரிக்குத் தங்கள் முகவரி, வயது, தொழில் முதலிய விபரங்களை உடனே அறிவிக்குக.

"துன்பமுற வரினுஞ் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும், வினை"

## பண்டித மணிக்கு பழைய மாணவர்கள் பாராட்டுவிழா

சைவத் தமிழ்ப் பேரறிஞர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளைக்கு பழைய மாணவர்கள் பாராட்டு விழா ஒன்று நடத்துகிறார்கள்.

விழா இம்மாதம் 29-ந் தேதி சனிக்கிழமை காலை எட்டு மணி தொடக்கம் திருநெல்வேலி சைவ வித்தியாசாலையில் நீதிபதி திரு சி. தம்பித்துரை தலைமையில் நடைபெறுகிறது. முதல் நிகழ்ச்சியாக ஊர்வலம் இடம் பெறுகிறது.

30-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மட்டுவில் பண்டிதமணி மணிமண்டபத்தில் திரு வி. குமாரசாமி தலைமையில் விழா காலை 7.45 முதல் நடைபெறவிருக்கிறது. அன்றும் முதல் நிகழ்ச்சியாக ஊர்வலம் இடம் பெறுகிறது. பண்டிதமணி மணிமண்டபத்தை யாழ்—அரசாங்க அதிபர் திரு ம. சிறீகாந்தா திறந்து வைக்கிறார்.

விழாவில் பல தமிழ் அறிஞர்கள் கலந்து கொண்டு சொற்பொழிவாற்ற இருக்கிறார்கள். இரண்டு நாட்களிலும் விழாவில் கலந்துகொள்ளும் அனைவருக்கும் மதிய உணவு அளிக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.


## அரசாங்க குமாஸ்தா பரீட்சைகள்

- ஒஸ்பிட்டல் கிளரிக்கல் — 4 செப்டெம்பர்
- சிறுப்பர் சேவைப் பரீட்சை — 26 செப்டெம்பர்
- போஸ்ட் மாஸ்ட்டேர்ஸ் & சிக்னல்ஸ் — 2 ஒக்டோபர்

இப் போட்டிப் பரீட்சைகளில் சித்தி பெற சிறந்த துணைப் புத்தகங்கள் உள.

ஒவ்வொரு பாடப் புத்தக விலை ரூ. 5. தபாற் செலவு 35 சதம்.

விவரத்துக்கு:

அற்லஸ் ஹோல்,
723, மருதானை ரேட்,
தபாற் பெட்டி இலக்கம் : 649
கொழும்பு—10.

சி. சி. சி.

தெங்குப் பசளைக் கலவைகள்




நீங்கள் எமது பசளைக் கலவைகளில் நம்பிக்கை வைக்கலாம் ஏனெனில் அவை நல்ல, பெருவாரி விளைச்சலைப் பெறுவதற்கு உங்களுக்கு உதவியளிக்கின்றன.

இலவச விளக்கப் பிரசுரத்திற்கு தயவுசெய்து எழுதுக:-

கொழும்பு கொம்மேர்ஷியல் கம்பெனி லிமிட்டெட்

(பெரிய பிரித்தானியாவில் இணைக்கப் பெற்றது. அங்கத்தவர் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது.

தபாற் பெட்டி 33, கொழும்பு. CCC625


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வின் ஒளி

சிறுகதை — எழுதியவர்: ஈழத்து சிறி

மோட்டார் வாகனங்கள் அலறியபடி அங்கு மிங்குமாக ஓடிக்கொண்டிருக்கும் அந்தப் பிரதான வீதியில் மனதில் எண்ணங்கள் வேகமாக ஓட, அவற்றைவிட வேகமாக நாம் வீடு போகிறோம் என்று கூறுவன போல் சேகரின் கால்கள் விறு விறுவென்று நடந்தன.

"இன்று லேடீஸ் கிளப், அந்தக் கூட்டம், இந்தத் தோழிக்கு சுகமில்லை அப்படி இப்படி......" என்று சாட்டுக் கூறி அவள் வெளியில் போயிருந்தால் தாமும் அப்படியே முதலாம் காட்சி இரண்டாம் காட்சி ஆகியவைகளை பார்த்துவிட்டு வீடு திரும்புவது என முடிவுகட்டிக்கொண்டான்.

ஆமாம், இன்று அவனுக்குச் சம்பளம் கிடைத்துவிட்டதல்லவா! பணம் கையிலிருக்கும் துணிவுதான் இப்படி எண்ணத் தூண்டியது. பாவம், வழக்கமாக மனைவியின் பெட்டிப் பாம்பாகவே ஆட்டப்படும் கணவனல்லவா சேகர்!

மனைவி இன்று லேடீஸ் கிளப் பார்ட்டிக்குப் போயிருப்பாள் என்றெண்ணியவாறு வந்தவனை வீட்டு வாசல் ஏமாற்றிவிட்டது. வழக்கத்திற்கு மாறாக, சரஸ் கணவன் வரும் திசையைக் கண்மூடாது, வழி மேல் விழிவைத்தவாறு பார்த்துக்கொண்டிருந்தாள். அந்நிலையில் அவளைக் கண்டதும் ஏற்பட்ட ஆச்சரியத்தைக் காட்டிக்கொள்ளாமல் "என்ன? இன்று ஏதோ பார்ட்டி இருப்பதாகச் சொன்ணாய் போகவில்லையா?" என்று கேட்டுவிட்டு அவளின் முகத்தையே உற்றுப் பார்த்தான்.

அவளின் முகமாற்றம் மேலும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. "போதும் உங்கள் கிண்டல். இப்படியெல்லாம் கேலிபண்ணி என்னைச் சித்திரவதை செய்யாதீர்கள்" என்று கூறிக்கொண்டே உள்ளே சென்றுள். ஏது புதிசா இருக்கே விசயம் என்றாலும் அவன் விட்டுவிடவில்லை. "என்ன சரஸ்! இப்போ நான் என்ன சொல்லிவிட்டேன், 'பார்ட்டிக்குப் போக வேண்டும். நேரத்தோடு போக வேண்டும்' என்று நீதானே காலையில் சொன்னாய்?"

"என்னை மன்னித்துவிடுங்கள். நான் உங்கள் மனைவி. அதனால் எனக்கும் சில கடமைகள் உண்டு என்பதை உணருகிறேன்" என்றுள் கண்ணீருடன்.

மேலும் திகைப்படைந்தான் சேகர். "மன்னிப்பதற்கென்ன இருக்கிறது. நீ என்ன குற்றம் செய்தாய்?"

"அதையெல்லாம் இப்போ சொல்லச் சமயமில்லை. உடுப்பை மாற்றுங்கள். நான் தேநீர் போட்டுக்கொண்டு வருகிறேன்" எனக் கூறிவிட்டு அன்ன நடை பழகிச் சென்றுள் சரஸ்.

அவளின் திடீர் மாற்றம் முதலில் புரியாத புதிராக இருந்தது சேகருக்கு, பக்கத்து நாற்காலியிலிருந்த பத்திரிகையைக் கண்டதும் அதைக் கையிலெடுத்தான். அது "ஞாயிறு பதிப்பு". "நேற்று இதை வாசிக்க முடியாமற்போச்சே இப்போதாவது பார்ப்போம்" என்று எண்ணிக்கொண்டு பக்கங்களைப் புரட்டினுன். ஒரு பக்கத்தில் அவன் மனம் லயித்துவிட்டது. அப்பக்கத்தில் ஒரு சிறு கதை பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதை வாசிக்கும்படி மனம் தூண்ட, கண்கள் ஒவ்வொரு வரியாக ஊடுருவிச் சென்றன.

* *

சுந்தரின் மனைவி சுந்தரி பணக்கார வீட்டுப் பெண் கமலாவுடன் அதிக நட்புக்கொண்டிருந்தாள். இந்த நட்பு சுந்தரி தன் கணவனை வீட்டில் விட்டுவிட்டு சினிமா, கிளப், கச்சேரி, கூட்டங்களுக்குச் செல்லும் அளவிற்கு வந்துவிட்டது. கணவன் காரியாலயத்திலிருந்து திரும்பினுல் பஸ்ஸிற்காகவரிசையில் ஆகக்குறைந்தது ஒரு மணித்தியாலமாவது கால்கடுக்க நிற்பது காணுதென்று மனைவி வீடு திரும்பும்வரை வீட்டு வாசலிலும் கால்கடுக்க நிற்க வேண்டிய நிலைமை உண்டாகிவிட்டது. கணவன் மனைவியின் அடிமையாகிவிட்டான்; இல்லை ஆட்டி வைத்தாள் அவள் என்றுதான் சொல்ல வேண்டும்.

நாட்கள் பறக்க, வாரங்கள் ஓட, மாதங்கள் ஐந்தும் சுடந்துவிட்டன. ஒருநாள் கமலா உடுக்கும் புடைவையைப்போல் தானும் ஒரு புடைவை வாங்க வேண்டும் என அடம்பிடித்தாள் சுந்தரி. அதனுல் இரண்டு நாட்களாகப் பட்டினி கிடந்தாள் அவள்மீதுள்ள பாசம், நண்பர்களிடம் கடன் கேட்கத் தூண்டியது சுந்தரை. ஒருவிதமாக எழுபத்தைந்து ரூபாவை கடனுகப் பெற்று மனைவியின் மனதைச் சாந்தப்படுத்தினுன். இப்படியான நிலைமை ஒருமுறையல்ல, பலமுறை நடந்ததால் கடன் தொல்லை சுந்தரின் கழுத்தை நெரிக்கத் தொடங்கிவிட்டது. சம்பளம் எடுத்ததும் அப்படியே மனைவியிடம் கொடுப்பான். அவைகளை வீட்டுச் செலவில் முடித்துவிடுவாள் அவள். "நண்பர்களிடம்தானே கடன் வாங்கினீர்கள், வரும் மாதம் கொடுப்போம்" என்று கூறிக் கணவனைச் சமாதானப்படுத்துவாள்.

ஒருநாள் காரியாலயப் பணமான ஆயிரம் ரூபாக் கட்டொன்றை வீட்டிற்குக் கொண்டுவந்தான், அடுத்த நாள் அதை வேறு காரியாலயத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்பதற்காக. பணத்தை வீட்டில் வைத்துவிட்டு நண்பனின் வீட்டுக்குச் சென்று அரட்டை அடித்துவிட்டு வீடு திரும்பினுன் சுந்தர். இதற்கிடையில் சுந்தரி அந்த ஆயிரம் ரூபாவும் கணவனுடையதென எண்ணி அதில் ஐந்நூறை எடுத்து, கமலா முதல் நாள் வாங்கிய மாலையைப்போல் ஒன்றை உடனே வாங்கிக் கழுத்தில் தொங்கவிட்டாள். மாலையைக் கண்ட சுந்தர் "இது எப்படிக் கிடைத்தது?" என விசாரிக்க சுந்தரி உண்மையைச் சொன்னதும் கொதித்தெழுந்தான் சுந்தர். விஷயம் அறிந்த சுந்தரியும் பதறிப்போனுள். அந்த ஐந்நூறை எப்படி ஈடு செய்வது எனத் தெரியாமல் திகைத்தான். தன்னை நம்பி ஐந்து சதம்கூட யாரும் கொடுக்கமாட்டார்கள் என்பதை நன்கு அறிந்த அவன் சிறைவாசம் அனுபவிக்கச் சித்தமாயிருந்தான்.

அப்படியே காரியாலயப் பணத்தில் கைவைத்து நம்பிக்கைத்துரோகம் செய்த படியால் மூன்று மாத சிறைவாசம் செய்யச் சென்றுன் சுந்தர். அவனைக் காப்பாற்ற துடித்தாள் சுந்தரி. அவளுடைய தோழி கமலா மனம் வைத்தால் கணவனைக் காப்பாற்றலாம் என எண்ணிணுள். ஆனுல் அவளும் கைவிரிக்கவே, தான் செய்த தவறுக்காகக் கண்ணீர்விட்டுக் கதறினுள்......

* *

சேகர் கதையைவாசித்து முடிக்குமுன் "என்ன கதையிலேயே இருக்கிறீர்கள்?" என்ற கேள்வியைக் கேட்டுத்திரும்பினுன், அவன் மனைவிதான் சரஸ். "நல்ல கதையாக இருக்கிறது" என்றுன். அவளும், "ஆமாம், இதை நானும் வாசித்தேன். இதை எழுதியவரைத் தெய்வமாகக் கருத வேண்டும். என்னைப் போன்ற பெண்களுக்குப் புத்தி புகட்டவே இதை எழுதியிருக்கிருர்" என்றுள்.

"ஓஹோ! அப்படிச் சொல். இன்று உன் மாற்றத்திற்கு இதுதானு காரணம்? மிக மிக நன்று. இப்படி எல்லோருமே தம்மிலும் அந்தஸ்தில் உயர்ந்தவர்களுடன் அதிகம் பழகாமலும், கணவனிடம் பிடிவாதமும் செய்யாமலுமிருந்தால் எவ்வளவு இன்பமாகக் காலத்தைக் கழிக்கலாம்.

"கோர்ட்டுக்கு அங்கும் இங்கும் போக வேண்டிவராது. இல்லறத்தை இன்பமாக நடத்தலாம். அதை அப்படி நடத்தும் குடும்பப் பெண்ணே கணவவனின் ஏன் குடும்ப வாழ்வின் ஒளியாவாள். இன்று தொடக்கம் என் குடும்ப வாழ்வின் ஒளியாக என் சரஸ் திகழுகிறுள். அப்படித்தானே!" எனக் கூறிய சேகர் சரஸாவை பார்க்க அவளின் மலர் வதனம் நாணத்தால் சிவந்து அவனுக்கு ஒரு வெறியை உண்டாக்கிற்று. அவளைத் தன் அருகே இழுத்தான்.

"அத்தான் ஒளியை ஏற்றிய அந்தக் கதாசிரியரைப் பார்க்க என் மனம் அவாவுகிறது. நன்றியைக் கூறிவிட்டுத்தான் புது வாழ்வைத் தொடங்க வேண்டும் என்று தோன்றுகிறது"— இப்படிக் குழைந்தாள் சரஸா.

"அதனுல் என்ன, பார்த்தால் போகிறது. கதாசிரியரை எனக்கு நன்ருகத்தெரியுமே. இப்பொழுதே புறப்படுகிறாயா?"

அரைமணி நேரத்தில் இருவரும் நகர்ப் பூங்காவிலே தட்டந்தனியாகநின்றுர்கள். ஜில்லென்ற காற்று மேனியை மெல்ல வருடியது. மின் விளக்குகளோடு வானத்து முழுநிலா போட்டி போட்டுக்கொண்டு தண்ணொளி பரப்பி நின்றது.

"ஏது அத்தான், கதாசிரியர் புதிய புதியகற்பனைகளுக்காக இங்குதான் எந்நேரமும் சுடுந்தவம் புரிந்து கொண்டிருப்பாரோ! என்ன, ஆளைக் காணவில்லையே!" வீசிய தென்றலோடு இந்தத் திங்குரல் கலந்தது; சேகரின் காதிலே விழுந்தது.உவகைத்து இன்பமெல்லாம் சேர்த்து இதயத்தில் பொழிந்தது போலஇருந்தது.

"கண்ணே இதோ உன் முன்னிலையில் நிற்கிறுன் அந்தக் கதாசிரியன். சொல்ல வேண்டியதை எல்லாம் சீக்கிரம் சொல்லிவிடு" என்று உணர்ச்சி ததும்பக் கூறினுன்.

'என் கணவர் கைதேர்ந்த எழுத்தாளர்—கதாசிரியர்—அதிலும் சொந்த வீட்டைத் திருத்த எழுதி வெற்றி கண்ட வீரர், இதைவிடப் பெருமை வேறென்னவேண்டும்! வாழ்த்துவதா? வணங்குவதா?—இப்படியெல்லாம் எண்ணினுளே தவிர வெளியில் எதையும் சொல்லவில்லை. மகிழ்ச்சிப் பெருக்கம் தான் வாயை அடைத்துவிடு

(15-ம் பக்கம் பார்க்க)


★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா

கண்ணைக் கவரும் வண்ணங்களிலும்

கருத்தைக் கவரும் வடிவங்களிலும் சிறந்த பாவனையிலும் உறுதியான சாயத்திலும்

முன்னணி வகிக்கிறது

லதா

கேம்பிரிக்

சட்டை, ஜாக்கெட், கவுண், பாவாடை, கிமோனு முதலியவைகளுக்குச் சிறந்தது.

இலங்கை முழுவதிலுமுள்ள புடைவை வியாபாரிகளிடம்

கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

குண்டன்மால்ஸ்

26, கெய்ஸர் வீதி, கொழும்பு.



ஏஜண்டுகள் தேவை

சுதந்திரன் பத்திரிகை விற்பனை செய்வதற்கு கீழ்க் காணும் இடங்களில் தகுதி வாய்ந்த ஏஜண்டுகள் தேவை விபரங்கட்கு விண்ணப்பிக்கவும்.

| | |
|---|---|
| அளவத்துகொட | கெக்கிராவ |
| அளவெட்டி | கிளிவெட்டி |
| சினன்வாடி | கொச்சிக்கடை |
| கலகா | குளியாப்பிட்டி |
| ஹாலி-எல | மதவாச்சி |
| உனுப்பிட்டி | மந்திகை |
| கடுகண்ணுவை | மாத்தறை |
| கல்லாறு | பூநகரி |
| கல்பிட்டி | பொத்துவில் |
| களுத்துறை | இதல்கஸ்ஹின்ன |
| கந்தப்பொல | ருகல |
| கிரிமலே | உடப்புசல்லாவ |
| கேகாலை | |

194, ஏ தட்டாதெரு, கொழும்பு-12.

சர்க்குலேஷன் மனேஜர், சுதந்திரன்.



சிக்கனமானது! பிரகாசமுள்ளது!

உங்கள் றேடியோவில் திறமையான முறையில் கேட்பதற்கு



நாஷனல் றேடியோ பாட்றியைப் பாவியுங்கள்.

ஸ்டாக்கிஸ்ட்ஸ்:-

எஸ். யூ. மொகமெட் ஹாஜீயார்,

143, மெயின் வீதி, காலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணியம் காற்றிலே பறக்கிறது

## கோரம் இல்லாச் சீர்கேடு

### காரணமாக கூட்டங்கள் தடைபடுகின்றன

### லஞ்சப்பேய் கூடப் புகுந்துவிட்டதாகப் புகார்- பாராளுமன்றத்தின் இன்றைய நிலைமை இது

### ஆயினும் என். எம். புகழ்மாலை சூட்டுகிறார்

### எதிர்க் கட்சித் தலைவர் அவர்--அதிலும் டாக்டராயிற்றே!

எதிர்க் கட்சித் தலைவராக இருப்பவர் எதையும் எதிர்த்துத்தான் கருத்து வெளியிட வேண்டும் என்ற நியதி திடீரென்று எங்கிருந்து வந்ததோ தெரியவில்லை டாக்டர் என். எம். பெரேராதான் அதையும் தெரிவிக்க வேண்டும்.

"இலங்கை பாராளுமன்றத்தை உலகிலேயே சிறந்தது என்று கூறலாம். எத்தனையோ நாடுகளில் உள்ள பாராளுமன்றங்களின் நடவடிக்கைகளை நான் நேரில் பார்த்திருக்கிறேன். இங்கு உள்ள சிறப்பு அங்கு எல்லாம் இல்லை" என்று டாக்டர் என். எம். பெரேரா இலங்கை முஸ்லிம் லீக் செனட் கூட்டத் தொடரை ஆரம்பித்துப்பேசுகையில் கூறியதாக அணிமையில் சுதந்திரனில் செய்தி வெளியிடப் பட்டிருந்தது.

புத்தம் புதிய கருத்து இது. எந்த ஒரு நபரும் இப்படி இதுவரை சொன்னதாகவோ அல்லது சொல்லத் துணிந்தாகவோ தெரியவில்லை. மனச் சாட்சியை அடவு வைத்து இல்லாத ஒன்றை உள்ளதாகச் சொல்லி கேட்போரை இளிச்ச வாயர்களாக்கி 'அப்ளோஸ்' பெறுவதற்கு சமசமாஜத் தலைவரைப்போல் தகுதி பெறுவது ஒன்றும் சுலபமான காரியமல்லவே!

#### கண்ணியம் காற்றில் பறக்கிறது

பாராளுமன்றத்தின் முகப்புக் கட்டடத்திலே சிங்கக் கொடி படபடத்துப் பறப்பது போல உள்ளேயும் ஒன்று பறக்கிறது. அது சபையின் கண்ணியம்—அதாவது நாட்டின் கௌரவம். பிரதிநிதிகள் சபையினுள் ஆளுக்காள் பரிமாறிக் கொள்ளும் பதங்களை கள்ளுத் தவறணைகளில் கூட கேட்கலாமா என்பது சந்தேகம். ஒழுங்கு எப்பொழுதோ கழுத்திலே கயிறு மாட்டிக்கொண்டு விட்டது. பிரதிநிதிகளின் வருகை பற்றி எப்படிச் சொல்வது?

#### 'கோரம்' இருப்பதில்லை

பள்ளிக்குக் கள்ளமடிக்கும் பிள்ளைகளுக்கும் ஒரு படி மேலாக பாராளுமன்றப் பிரதிநிதிகள் நடந்து கொள்ளுகிறார்கள். சபை நடந்து கொண்டிருக்கும் திடீரென்று கலைக்கப்படும். காரணம் சபைக் கூட்டம் நடைபெறுவதற்கு வேண்டிய கோரம், அதாவது போதுமான பிரதிநிதிகள் இருக்க மாட்டார்கள். சில சந்தர்ப்பங்களில் கூட்டம் தொடங்குவதற்கு என்று செல்பவர்கள் தொடங்காமலே திரும்ப வேண்டி நேரிடுகிறது.

#### ஒத்திவைப்பு சம்பவம்

இவ்வளவுமேன், மிகச் சமீபத்தில் நடந்தது ஒரு சம்பவம். பிரதமரின் இலாகாவுக்கு மான்யம் ஒதுக்கும் பிரேரணை விவாதத்துக்கு எடுக்கப்பட்டது. அப்போது கூட கோரம் இல்லாததால் சபை ஒத்திவைக்கப்பட வேண்டியதாயிற்று. மந்திரிமாரில் 16 பேரும் உதவி மந்திரிமாரில் 15 பேருமாக அரசாங்கத் தரப்பில் மிகப் பொறுப்புள்ளவர்களே 31 பேர் இருக்கிறார்கள். இத்தனை பேரும் சபையில் இருந்தாலே கோரம் இல்லை என்ற பேச்சுக்கு எப்பொழுதுமே சபையில் இடமேற்படாது

#### தேசபந்து

இவர்கள் இருக்கிறார்களா? அரசாங்க அலுவல்கள் நடைபெறும் போதும் இவர்களுக்கு சபையில் இருக்கத் தோன்றுவதில்லை. கேள்விகளுக்கு பதில் அளிக்க ஆள் கிடைப்பதில்லை.

இந்த நிலையில் உள்ள எமது பாராளுமன்றத்துக்கு தான் எதிர்க் கட்சித் தலைவர் புகழ் மாலை சூட்டியிருக்கிறார்.

#### சேனநாயகா கருத்து

இவருடைய கருத்துக்கு நேர் எதிரான கருத்தை கடந்த வாரம் வில்கமுவையில் ஒரு கூட்டத்தில் பேசும்போது மந்திரி ஆர். ஜி. சேனநாயகா வெளியிட்டார்.

பாராளுமன்றத்தில் பிரதிநிதிகள் நடந்து கொள்ளும் விதம் வேதனைக்கு உரியது என்றும் அங்கு நடப்பதெல்லாம் கேலிக்கூத்துப் போல ஆகிவிட்டது என்றும் திரு. ஆர். ஜி. சேனநாயகா வருத்தத்தோடு கூறியிருக்கிறார்.

#### சேர் ஜோன் கொத்தலாவலை

இலங்கையின் முன்னாள் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலை பாராளுமன்றப் பக்கமே எட்டிப் பாராது விட்டுவிட்டார். அவ்வப்போது லீவு பெற்றுக் கொண்டு ஒதுங்கிவிடுகிறார். அவரைக் கேட்டால், "இங்கு பாராளுமன்றமா செயல்படுகிறது? கறிக்கடையை மிஞ்சிவிடும் போலிருக்கிறது நிலைமை! விஷயம் புரியாதவர்களுக்கு...............களுக்கு எதைச் சொல்லுவது? எப்படிச் சொல்லுவது?" என்று குறைப்பட்டுக் கொள்கிறார்.

#### லஞ்சப் புகார்

கைத் தொழில் உதவி மந்திரி வீரசேகரா சொல்வது உண்மையானால் பாராளுமன்றம் என்ற பெயருக்கே இலங்கைப் பாராளு மன்றம் லாயக்கற்றதாகிவிடும்.

இவ்வாண்டு வரவு-செலவுத் திட்ட விவாதம் நடந்து கொண்டிருந்த போது எதிர்க் கட்சியினரின் இன்[illegible] நடந்ததாம். அரசாங்கக் கட்சியிலுள்ளவர்களை எதிர்க் கட்சியினர் பணத்தையும் இன்னும் சில உறுதி மொழிகளையும் வைத்துக் கொண்டு மயக்கப் பார்த்தார்களாம். எல்லாம் அவர்களின் வாக்குக்காக. அரசாங்கத்தை வீழ்த்த வேண்டுமென்பதற்காக இப்படி லஞ்சம் கொடுத்தாவது அரசாங்கக் கட்சி எம். பிக்களின் வாக்கைப் பெற முனைந்தார்களாம். தமக்கே இந்தச் சோதனை ஏற்பட்டதாக அவர் சபாநாயகரிடம் புகார் கூறியிருக்கிறார்.

#### ஒலிப் பதிவுக் கருவி

இப்படி லஞ்சப் பேய் மட்டுமல்ல, ஒலிப்பதிவுக் கருவிகள் கூடக் கள்ளத் தனமாகப் பாராளுமன்றத்துக்குள் புகுந்து கொள்கின்றன. இன்னும் வேறு என்னதான் அங்கு வேண்டும்?

#### ஒழுங்குமுறை தலைகீழ்

ஒழுங்கு முறை சம்பந்தமாகவும் ஒரு முக்கிய விஷயம். வரவு செலவுத் திட்ட விவாதம் கமிட்டி நிலையில் பரிசீலிக்கப்பட்டபோது வழக்கத்துக்கு மாறாக ஒன்பது அமைச்சுகளின் மான்யங்கள் விவாதமோ ஆராய்வோ எதுவுமின்றி ஒதுக்கப்பட்டன. இதனால் அந்த அமைச்சுகள் மீதுள்ள குறை குற்றங்களைச் சரியானபடி சுட்டிக்காட்டி நிலைமையைச் சீர் செய்யச் சந்தர்ப்பம் இல்லாமல் போயிற்று.

இத்தனை அலங்கோலங்களையும் உள்ளடக்கியது தான் இலங்கை பாராளுமன்றம். எதிர்க்கட்சித் தலைவர் வேண்டுமானால் இன்னும் அதைப் பாராட்டிக் கொண்டே இருக்கலாம். அவர் டாக்டராயிற்றே!

## அரச கருமமொழித் திணை....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இனி அரசகருமச் சொற்றொகுதி விடயத்தை எடுத்துக்கொள்ளுவோம். பிரதி ஆணையாளர் ஒருவரே அரசகரும மொழிப் பிரிவுக்குப் பொறுப்பாக விருக்கிறார் என்பது பலரும் அறிந்ததே. சிவில் சேவை அதிகாரி யொருவரும் பிரதி ஆணையாளராகவிருக்கிறார். அவர் தமிழ் ஒழிப்பு மனப்பான்மையில்லாதவரெனவும் வேறு நல்ல குணங்களுள்ளவரெனவும் கேள்விப்பட்டுள்ளேன். ஆனால் அரசகரும மொழிப் பிரிவுக்குப் பொறுப்பாகவுள்ள உள் பிரதி ஆணையாளர் பற்றி மிகவும் திருப்தியற்ற செய்திகளே என் காதுக்கெட்டியுள்ளன.


தமிழ்ச்சொற்றொகுதி தயாரிக்கும் பொறுப்புள்ள குழுவின் கூட்டங்களுக்குத் தானே தலைமை தாங்க வேண்டுமென விடாப்பிடியாக நின்றவர் இவரென்பது பிரதமருக்கு நினைவிருக்கலாம். சிங்கள சொற்றொகுதி விடயமாகத் தகுதி பெற்ற இவர் அச் சொற்றொகுதி தயாரிக்கும் குழுவின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவலதை எவரும் எதிர்க்கவில்லை. ஆனால் தமிழ்ச் சொற்றொகுதி தயாரிக்கும் குழுவுக்கு ஏன் தலைமை வகிக்க வேண்டும்? அவ் வேலையைத் தடைப்படுத்தும் நோக்கத்துடனேயே இவர் தமிழ்க் குழுக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்க விரும்பினார். இவ் விடயத்தை நாம் பிரதமரின் கவனத்திற்குக் கொண்டுவந்த பொழுது அவர் அதனைத் திருப்திகரமாகத் தீர்த்து வைப்பதாகக் கூறினாரேயன்றி எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பின்னர் நான் இவ் விடயத்தை இச்சபையின் கவனத்துக்குக் கொண்டுவந்தேன். தமிழ் தெரியாத ஒருவரின் தலைமையில் அக்குழு செயற்படுவதிலும் பார்க்க அக் குழுவைக் கலைத்துவிடுவது சிறந்தது எனக் கூறினேன். அதன்பின்னர்தான் அந்த உத்தியோகத்தரை அக் கூட்டங்களுக்குப் போக வேண்டாமெனப் பிரதமர் கட்டளையிட்டார். பின்னர் அக்குழு வேலை தொடங்கிற்று ஆனால் அது தொழிற்படுவதைத் தடை செய்ய வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அச் சொற்றொகுதியிலுள்ள சொற்களைப் புனர் ஆய்வுசெய்ய வேண்டுமெனக் கூறி அத்தகைய கருமம் நடைபெற்றது இப்படியே பல காலம் கடத்தப்பட்ட பின்னர் ஒருவாறு சொற்றொகுதியின் முதற் பாகம் அச்சிடப்பட்டது.

அச்சிட்டு வெளியானதும் மற்றுமொரு சம்பவம் நடைபெற்றது. அப் பிரதிகள் யாவும், விசேட ஆணையாளரோ, பிரதி ஆணையாளரோ இட்ட கட்டளைப் படி, நீண்ட காலமாகப் பூட்டி வைக்கப்பட்டன. அவ்வாறிருக்கும்பொழுது தான் அப் பிரதிகள் இச் சபைப் பிரதிகள், அரசாங்க உத்தியோகத்தர் முதலியோருக்கு ஏன் அனுப்பப்படவில்லையென்ற கேள்வியைக் கேட்க நான் முன்னறிவித்தல் கொடுத்தது தலைவருக்கு நினைவிருக்கலாம். அம் முன்னறிவித்தல் கொடுத்து மூன்று வாரத்தின் பின்னர், ஒரு விசேட தினத்தில், அச் சொற்றொகுதியில் ஒன்று எனக்குக் கிடைத்தது.

அரசகருமமொழித்திணைக்களத்திலுள்ள சில அதிகாரிகள் தமிழுக்கும் தமிழரோடு சம்பந்தப்பட்ட யாவற்றுக்கும் எவ்வளவு எதிரிடையாக விருக்கிறார்கள் என்பதைக் காட்டுவதற்காகவே இவற்றை இங்கே எடுத்துக் காட்டினேன்.

(தொடரும்)

கெம்பீரமாக தோற்றமளிக்கவேண்டுமா?
அணியுங்கள்
மௌலானு சாரங்களை
இலே இலங்கையிலும் அரை நூற்றாண்டுக்கு மேல் அழியாப் புகழ்பெற்று இன்னமும் எழிலுடன் ஒப்புயர்வற்று சிறந்தோங்குவன
மௌலானு சாரங்கள்

MOULANA (Ceylon) Ltd.
மௌலானு (சிலோன்) லிமிட்.,
இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சனம்:

# திருமதி ரஞ்சனு தங்கராஜா அளித்த நாட்டிய விருந்து

கடந்த வாரம் வெளியிடுவதற்கென எழுதப்பட்ட விமர்சனம் இது இடமின்மையால் நிறுத்தி வைக்கப்பட்டு இவ் வாரம் இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

—ஆசிரியர்

திருமதி ரஞ்சனு தங்கராஜா அற்புதமாக ஆடக்கூடியவர் மட்டுமல்லர்; பிறரை ஆட்டுவிக்கும் திறமை மிக்கவரும்கூட என்பது கடந்த வாரம் உறுதியாயிற்று. இவ்வாண்டு ஜனவரி மாதம் ஆரம்பித்த தமது நிருத்தியோதய நாட்டிய சங்கீதக் கல்லூரி நடன நிகழ்ச்சிகளை கொழும்பு ரேயல் கல்லூரி மண்டபத்தில் கலாசார மந்திரி தலைமையில் கடந்த ஞாயிறன்று நடத்திக் காட்டியதைக் கண்டதிலிருந்தே இப்படிக் கூறுகிறோம்,

சின்னஞ் சிறு குழந்தைகள் சுமார் 15 பேர் சிங்கார உடைகளணிந்து இள முறுவலோடும் குறு குறுத்த பார்வையோடும் மேடை மீது பற்பல வேடங்களில் தோன்றிச் சிறப்பாக ஆடினார்கள். அவர்களின் ஆட்டத்தில் எத்தனை மிடுக்கு!

### ஒரு அடிக்கு பல விளக்கங்கள்

திருமதி ரஞ்சனு பாடல்களுக்கு பதம் பிடிக்கும் முறை அலாதியானது. குறிப்பாக "வேலனை அழைத்து வா சகியே" என்ற பாடலுக்கு அவர் பதம் பிடித்த போது ஏற்பட்ட அனுபவத்தை என்னென்று சொல்ல? 'மோகம் வீசுதே' என்ற ஒரு அடிக்கு ஏழு எட்டு விதமாக அபிநயித்து விளக்கம் தந்தார். 'சரஸமாய் முருக வேலனை' என்ற அடிக்கும் அப்படியே வெவ்வேறு விளக்கங்கள் தந்தார். முகத்திலே எத்தனை பாவம்! முத்திரிகைகளிலே எவ்வளவு நுணுக்கங்கள்—நோக்கிலே, நிலையிலே எத்தனை அர்த்தங்கள்!

### முகக் குறிப்புகள்

"மாலைப் பொழுதினிலே" என்ற பாடலுக்கு பதம் பிடித்தபோதும் திருமதி ரஞ்சனு நம்மைச் சும்மா விடவில்லை. இப்படி அற்புதமாகச் சொற்களுக்கு உயிர் கொடுத்து உணர்வுகளை மீட்டிவிட எப்படித்தான் கற்றுக் கொண்டாரோ! Facial Expressions என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்களே! அதாவது முகக் குறிப்புகளால் விஷயத்தை விளக்குவது—அதற்கு ரஞ்சனுவை மிஞ்சுவது யாருக்கும் எளிதல்ல என்றே நம்ப வேண்டியிருக்கிறது.

### நிருத்தியமும் அபிநயமும்

பரத நாட்டியத்தில் அபிநயத்தைப் போல முக்கியமான மற்ற அம்சம் நிருத்தியம், அதாவது தாளக்கட்டுக்கு வெறுமே ஆடுவது. அதுவும் ரஞ்சனுவுக்கு கைவரப் பெற்றதுதான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ரஞ்சகமாக இருப்பதற்கு காலம் கடந்துவிட்டது என்பதை குறிப்பிட வேண்டியிருக்கிறது.

### கண்டிய நடனம்

பரத நாட்டியப் பதங்களிலே கற்பனை வளத்தோடு பாவங்களைக் கொட்டிய ரஞ்சனு தாளத்தைத் தவிர மற்றப்படி பாவத்துக்கோ, முத்திரைக்கோ மற்றும் சிறப்புகளுக்கோ இடமளிக்காத கண்டிய நடனமும் ஆடினார். திறமையைப் பார்க்கப் பெருமையாக இருந்தது. ஆயினும் "ஏன் இந்தக் கலைக்கு இவ்வளவு வறுமை? ரஞ்சனுவுக்கு ஏன் இந்தத் தொல்லை?" என்றும் கேட்கத் தோன்றியது. கை தேர்ந்த கலைஞருக்கு கட்டுப்பாடு விதிக்கும் கலை மீது கோபம் வரச் செய்யாதா என்ன?

### விந்தையான போக்கு

திருமதி ரஞ்சனுவின் திறமையை வாயாரப் பாராட்டும் அதேசமயத்தில் ஒருசிறு குறையையும் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது. 'None is master of art'- அதாவது சாதாரண வழக்குத் தமிழில் சொன்னால் கலையைக் 'கரைத்துக்குடித்தவர்' எவருமில்லை. எல்லோரும் மேலும்

(13-ம் பக்கம் பார்க்க)



திருமதி ரஞ்சனு தங்கராஜா



கட்டப் பொம்மன்

## மட்டக்களப்பு நாட்டிய நிகழ்ச்சி

மட்டக்களப்பில் அணிமையில் நடந்த நாட்டிய நிகழ்ச்சி பற்றி 16-8-59 சுதந்திரனில் விமர்சனம் எழுதப்பட்டிருந்ததல்லவா? நிகழ்ச்சிகளுக்கு கலை கூட்டிய ஆடைகளை அற்புதமாகத் தயாரித்து அளித்தது தையற் கலைஞர் திரு. இ. கந்தசாமி ஆவர். இவருடைய பெயர் விமர்சனத்தில் தவறுதலாக விடுபட்டுப் போய் விட்டது.

இன்னும், நாட்டிய ஆசிரியர்: திரு. கைலாசபிள்ளை. பிடில் வாசித்தவர்: திரு. வே. சங்கரலிங்கம். ஜலதரங்கம் வாசித்த (டாக்டர் மனைவி) திருமதி சசிலேகா பாலச்சந்திரன். இந்து மகளிர் மன்றச் செயலாளர்: திருமதி கங்கேஸ்வரி கந்தையா. இவர்களின் பெயர்கள் சில அச்சுப் பிழைகளோடு வெளியிடப்பட்டுவிட்டன. வருந்துகிறோம்.

—ஆசிரியர்.

பட விமர்சனம்:

# புதுமைப் பெண்

"புதுமைப் பெண் அந்தஸ்து பேதத்தைப் பாராட்டமாட்டாள். அதுவும், காதல் குறுக்கிட்டு விட்டால் பின்னர் அவள் புதுமைப் போக்கைப் பற்றிக் கேட்பானேன்?"—இந்தக் கருத்தை வலியுறுத்துகிறது புதுமைப் பெண் என்ற படம்.

எம். என்.ராஜம் புதுமைப் பெண்ணுக நடிக்கிறார். அடக்கம், அன்பு,சேவை உணர்ச்சி, பண்பு எல்லாம் உள்ள பெண்ணுக இந்தப் படத்தில் தோன்றுகிறார். சதா வில்லியாக, கொடுமைக் காரியாக நடித்துப் பழக்கமுடைய எம். என். ராஜம் புதிய பாத்திரத்தில் பார்த்தோர் மனதைப் பறித்தெடுக்கும் வகையில் 'புதுமை'யாகத்தான் நடிக்கிறார்.

### இலட்சியம்

இலட்சிய நடிகரைக் காதலராக அடைவதற்கு அவர் படும்பாடு கொஞ்சநஞ்சமல்ல. இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரனும் அப்படி என்ன குறைந்த பேர்வழியா? பணக்கார வக்கீலின் மகளான ராஜத்தை தாம் ஒருபோதும் கல்யாணம் செய்ய முடியாது என்று இலட்சியக் குரல் எழுப்பிவிட்டு கடைசியில் தோற்றுவிடுகிறார். கல்யாணம் நடந்துவிடுகிறது துடிப்பான நடிப்பு ஒரு பக்கம் இருக்க, இலட்சிய நடிகர் தமது இலட்சியத்தை கோட்டை விடுவது பார்க்க ரஸமாயில்லாது போகுமா?

### நகைச் சுவை

படத்தில் இன்னொரு



'புதுமைப் பெண்'
எம். என். ராஜம்

ஜோடி வருகிறது. மனோகர்-ராஜசுலோசனு. காதலித்து கல்யாணம் செய்து கொள்கிறார்கள். நடிப்பு ஒரே கலகலப்புத்தான். கலகலப்பை உண்டு பண்ணக் காரணமாய் உள்ளவர் பாலையா. அவர் ஒரு புரியாத புதிர் மனிதர். இருவருக்கும் நண்பர். புதுமைப் பெண்ணை மணக்க விரும்பினார். மண் கவ்வ வேண்டியதாயிற்று. ஆயினும் விட்டாரா? நண்பர்களுக்கு முடிந்தவரை உதவினார். ரஸிகர்களுக்கும் நல்ல ஹாஸ்ய விருந்து அளித்தார். அவருடைய பேச்சும் முக பாவமும் உடற் கட்டும் எந்தக் கட்டத்திலும் சிரிப்பை மூட்டாமல் இல்லை. சி. எஸ் பாண்டியன் பாவம் 'போர்' அடிக்கிறார்.

### சுவையான பேச்சு

சுப்பையாவின் வழமையான நடிப்பைக் காண முடிகிறது. வி. கே. ராமசாமி கண்டிப்பான வக்கீலாகப் புது[illegible] நடிக்கிறார். [illegible] இவ

(13-ம் பக்கம் பார்க்க)

பட விமர்சனம்

# வீரபாண்டிய கட்டப் பொம்மன்

கட்டப்பொம்மன் படத்தைப் பார்க்கத்தவறுபவர்கள் தமிழராக இருக்கவோ அன்றித் தமிழ்ப் படங்கள் பற்றிப் பேசவோ தகுதியற்றவர்களாகிறார்கள் என்றே கூற வேண்டும்.

தம் இனத்தைக் காட்டிக் கொடுக்கும் ஒரு எட்டப்பனும் தொண்டமானும் படத்தில் வருகிறார்களே என்பதற்காகவோ அல்லது படம் வலியுறுத்தும் ஒப்பற்ற கருத்துக்காகவோ நாம் இப்படிச் சொல்லவில்லை, படத்தின் தரத்தையும் நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் நடிப்புத் திறனையும் மனதில் கொண்டே இப்படித் திட்ட வட்டமாகக் கூறினோம்.

### சிறப்பு அம்சங்கள்

சரித்திரக் கதைப் புனைவு, வசன அமைப்பு, சம்பவச் சேர்க்கை, படப் பிடிப்பு, இசை அமைப்பு, ஒலி, ஒளிப்பதிப்பு, நடிப்பு முதலான எல்லா அம்சங்களிலும் கட்டப் பொம்மன் படம் உயர்வாகவே காணப்படுகிறது. முதன் முதலாக முழு நீள வண்ணப் படமாக வெளியிட்டிருக்கிறார்கள் கட்டப் பொம்மனை. இதிலும் வெற்றிதான். சிலர் எதிர்பார்த்தது போல கண்ணை உறுத்தாமல் கவர்ச்சிகரமாக விளங்குகிறது வர்ணம்.

### நான்கு ரஸங்கள்

காதல், வீரம், சோகம், பக்தி-இந்த நான்கு ரஸங்களுக்கும் குறைவில்லைப் படத்தில். தமிழ்ப் பண்பின் சிறப்பு வேறு துலங்குகிறது. உரிமை முழக்கம் கேட்கிறது. தன்மான உணர்வு சுடர் விட்டுப் பிரகாசிக்கிறது. 'நாட்டுக்கு ராசாவாக உள்ளவனும் வீட்டிலே சாதாரணம் தாம்' என்ற தத்துவத்தின் விளக்கம் பொலிகிறது.

### உலக நடிகர்

கட்டப் பொம்மனுக நடிக்கும் நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் நடிப்பில் குறை காண இடமில்லை, நிறைவை உள்ளபடி உரைக்க நம்மால் முடியவில்லை. உலகத்துச் சிறந்த நடிகர்களிலே தாமும் ஒருவர் என்பதைக் கட்டப் பொம்மன் நடிப்பின் மூலம் அவர் ஐயந்திரிபுக்கு இடமில்லாமல் காட்டிவிட்டார்.

"அதாவது," "அப்படித் தானே," "அல்லவா"—இந்த மூன்று ஆறு வார்த்தைகளையும் கொண்டு மந்திரி தானுபதிப்பிள்ளையையும், வெள்ளைத்துரைமாரையும் அவர்கள் தூதுவர்களையும் எட்டப்பனையும் நையாண்டி செய்வதைப் பார்க்க வேண்டுமே-அடடா எத்தனை சிறப்பு!

### தனிச் சிறப்பு

இன்னுமொரு தனிச் சிறப்பு. கட்டப் பொம்மன் நீதி தவருத மன்னன்; நாட்டுப் பற்றும் தன்மான உணர்வும் படைத்தவன்; அன்பும் பண்பும் பக்தியும் உள்ளவன்; அத்தோடு சிறந்த குடும்பஸ்தன். எல்லாவற்றிற்கும் மேலாகச் சுத்த வீரன் அவன் என்பதைக் காட்டுகிறார்கள்.

கட்டப் பொம்மன் சுத்த வீரன் என்பதை அவன் வாள் வீச்சிலிருந்துதான் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற அவசியம் ஏற்படுவதாய் இல்லை. போர்க்களத்துக்கு அவன் போகாவிட்டாலும் கூட அவனை வீரன் என்று படம் பார்ப்போர் எண்ணத் தக்க விதத்தில் பாத்திரத்தை உணர்ந்து கணேசன் அற்புதமாக நடித்திருக்கிறார்.

### மற்றவர்களின் நடிப்பு

அடுத்தபடியாக முத்துலட்சுமியின் நடிப்பும் மந்திரி தானுபதிப் பிள்ளையாக நடிப்பவரின் நடிப்பும் நெஞ்சை விட்டு அகலுவதாயில்லை. அனாயாசமாக நடிக்கிறார்கள். அதில் எத்துணை கச்சிதம்!



தானுபதிப்பிள்ளை



கட்டப்பொம்மன் மனைவி



ஊமைத்துரை

ஊமைத்துரையாக ஓ. ஏ. கே. தேவரும், சேனுதிபதி வெள்ளைத்தேவனுக ஜெமினி கணேசனும், அவர் தம் மனைவி வெள்ளையம்மாளாக பத்மினியும், எட்டப்பனுக வி. கே. ராமசாமியும், கட்டப் பொம்மனின் மனைவியாக எஸ். வரலட்சுமியும், ஊமைத்துரையின் மனைவியாக ராகினியும் நடிக்கிறார்கள். இவர்களுடைய தரமான நடிப்பையும் நாம் மறந்து விடுவதற்கில்லை.

### வெள்ளைத்துரை

ஜாவார் சீதாராமன் வெள்ளைத்துரை பானர்மேனுக வருகிறார். உதடுகளை நன்ருகப் பிதுக்குகிறார்; வாயைப் பிளந்து கட்டளைகளைக் கக்குகிறார்; தூய தமிழ் பேசுகிறார். இவர் தோன்றும் கட்டங்களில் எல்லாம் "சிவகெங்கைச் சீமை"யில் வெள்ளைத் துரையாக வந்த வஹாப் காஷ்மீரியின் நினைப்பு பளிச் பளிச் சென்று வருகிறது. அவருடைய நடையும், பார்வையும் பேச்சும் ஜாவார் சீதாராமனிடம் இருந்திருந்தால் கட்டப் பொம்மனின் தரம் இன்னுமொருபடி உயர்ந்திருக்கும்.

### சிறு குறைபாடுகள்

குழந்தையின் நாட்டியத்தை நிறுத்தி அதிகப் பிரசங்கித் தனத்தையும் குறைத்திருக்க வேண்டும். ஜக்கம்மாள் ஆலயத்து கூத்தடிப்பையும் தவிர்த்திருக்கலாம். ஜெமினி கணேசன் காளையை அடக்கிய காட்சியைச் சுருக்கி அதன் மூலம் அதை விறுவிறுப்புள்ளதாக ஆக்கியிருக்கலாம். கட்டப் பொம்மன் (மாறு வேடத்தில்) சவுக்கால் அடிபட்ட போது வெள்ளைத்தேவன் வந்து கட்டப்பொம்மனை அடையாளம் தெரிந்து விடுவிக்கிறன். ஊமைத் துரையும் மற்றவர்களும் கூட இருந்தும் ஏற்கனவே கட்டப்

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி ரஞ்சனு தங்கராஜா...

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் பயில்பவர்களே. எத்தனை ஆண்டு கலையைப் பயின்ருலும் முடிவு காண முடியாது. அத்தனை பெரியது அது. இந்த உண்மையை திருமதி ரஞ்சனு நாம் சொல்லித்தான் உணர வேண்டுமானல் அது வருத்தத்துக்குரியதே. "வேலனை அழைத்து வா சகியே" என்ற பாடலுக்கு பதம் பிடித்த போது குரல்வளையை நெரித்தமாதிரி நிகழ்ச்சியை இடையில் முறித்து விடுக்கென்று உள்ளே சென்ற திருமதி தங்கராஜா மண்டபத்துள் இருந்த அத்தனை பேரின் கோபத்துக்கும் இலக்காஞர்.

வாத்தியக் கோஷ்டியினரையும், நட்டுவஞரையும் பாடகிகளையும் துச்சமாக மதித்து நடந்தபாங்கும் பலருக்கும் பிடிக்கவில்லை.

## வாத்தியக் கோஷ்டியும் பாட்டும்

நட்டுவஞர் வைத்தீஸ்வரன் கோவில் மகாதேவ பிள்ளை பாவம் தாளத்தைப் பலமாகப் போட்டு அதன் பின்னுல் மறைந்துகொண்டார். அவருடைய சத்தம் அனேகமாக வெளிவரவில்லை. வாய் மட்டும் சிற்சில கட்டங்களில் அசைந்தது தெரிந்தது.

தப்லாக்காரர் திரு கே. கே. நடராஜன், மிருதங்கக்காரர் திரு கணபதியா பிள்ளை, வயலின்காரர் திரு பி. எஸ். மணிஐயர் ஆகியோர் நன்ருக வாசித்தார்கள். கமலா ஹரிஹர ஐயரும் பகவதி ரெங்கராஜனும் அழகாகப் பாடினர்கள். பாட்டுகள் பாவத்தோடு வந்தன. இனிய குரல் இன்பம் அளித்தது.

## சிவதாண்டவம்

சுகுமாரன் நாயர் திருமதி ரஞ்சனுவோடு சேர்ந்து சிறப்பாக சிவதாண்டவம் ஆடினர். எல்லோரும் நன்கு ரஸிக்கும்படியாக இருந்தது.

## நீண்ட நிகழ்ச்சிகள்

கண்டிய நடனங்கள் நாலைந்து இடம் பெற்றிருந்தன. கடைசி நிகழ்ச்சிகள் அவை. காலம் அதிகம் கடந்துவிட்ட காரணத்தால் அவற்றைப் பார்க்கும் பொறுமையையே பலரும் இழந்தனர்.

நடன நிகழ்ச்சிகள் எல்லாம் மூன்றரை மணி நேரம் நடந்தன. நடன நிகழ்ச்சிகளுக்கு இரண்டு அல்லது இரண்டரை மணி நேரம் தாராளமாகப் போதும். திருமதி ரஞ்சனுவின் பதங்களைத் தவிர மற்ற எல்லா நிகழ்ச்சிகளையுமே விரித்ததுக்குப் பதிலாகச் சுருக்கியிருக்கலாம். நிகழ்ச்சி இன்னும் தொடராதா என்று பார்ப்போரை அங்கலாய்க்க வைக்கும் அளவுக்கு சுருக்கியிருக்கலாம்.

ஆரம்ப நடனமே நீண்டதாகத்தான் இருந்தது. 15 நிமிஷ நேரம் நடந்த நிருத்தியத்தில் 10 நிமிஷங்கள்வரை தீபங்களை வைத்துக்கொண்டு மின்மினிகள நடமாடுவதுபோல மேடையில் சில பிள்ளைகள் வளைந்தார்கள்—ஆடவில்லை. பின்னர்தான் 4 பேர் வந்து ஆடினர்கள். மேடை அதிரும்படியாக இருந்தது. ஆரம்பக் கட்டத்தை இப்படி நடத்துவது கவர்ச்சியைப் பாழடித்துவிடுமே!

எது எப்படி இருந்தபோதிலும் திருமதி ரஞ்சனுமேடையில் தோன்றுவதோடு பிறதெல்லாவற்றையும் மறந்து அவர் தரும் கலை விருந்தில் மனம் லயிக்க வேண்டி ஏற்பட்டுவிடுகிறது.

—கே. கே. ஆர்.

# வீரபாண்டிய . . .

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

பொம்மனை அடையாளம் கண்டுகொள்ள முடியாது போனது ஏன்?-இந்தக்குறைபாட்டையும் தவிர்த்திருக்கலாம். மற்றும் சண்டைக் காட்சிகளை இன்னும்முயன்று விறுவிறுப்புள்ளனவாககியிருக்கலாம். அப்போது படத்தின் தரம் இன்னுமொரு படி உயர்ந்திருக்கும்.

அப்படிச் செய்யாததால் படத்தின் வெற்றிக்கு ஒன்றும் பாதகம் ஏற்பட்டுவிடவில்லை.

நடிப்பு மெய்சிலிர்க்க வைக்கிறது; பேச்சு புது உணர்வு தருகிறது; பாட்டுகள் இன்பம் அளிக்கின்றன; வண்ணக் காட்சிகள் உள்ளத்தை நிறைக்கின்றன. குறிப்பாக சக்தி கிருஷ்ணசாமி (வசனகர்த்தா)யும் டைரக்டர் பந்துலுவும் பாராட்டுக்குரியவர்கள்.

"மேல்நாட்டுப் படங்களின் தரத்துக்கு உள்ள தமிழ்ப் படங்கள் தமிழகத்தில் வெளிவருமா?" என்று கேட்டவர்களையெல்லாம் நடிகர் திலகத்தின் ஒத்துழைப்போடு வாயடைக்கச் செய்கிருர்களே இந்த இருவரும் அது போதாதா இவர்களைப் பாராட்ட?

# 'வகுப்புவாதம்'...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

## சரியான கருத்து

சேம்பர்ஸ் 20-வது நூற்ருண்டு அகராதியில் இதன் விளக்கம் நன்கு கூறப்பட்டிருக்கிறது. 'கம்யூன்' என்பது ஒரு மேயரால் நிர்வகிக்கப்படும் ஒரு பகுதி; 1871-ம் ஆண்டில் பிரான்ஸ் நாட்டில் இப் பகுதிசுயமே இயங்கும் உரிமை இல்லாமலிருந்தது; ஆதலால் மக்கள் மத்ய ஆட்சியினரை எதிர்த்து, உரிமைக்காகப் போராடினர்கள். இவர்களுடைய மாகாணசுய ஆட்சிக் கோரிக்கைக்கு கம்யூனலிஸம்என்றும் குறிப்பிடப்பட்டதாக அந்த அகராதி விளக்குகிறது இந்த 'கம்யூன்' என்ற வார்த்தை 'காமன்' என்ற சொல்லிலிருந்து வந்ததாகவும், 'எல்லோருக்கும் சம உரிமை அளிப்பது' என்பது இதற்குப் பொருளெனவும் பிரஞ்சுப் பேரகராதி கூறுகிறது.

## நம்மவர் செய்யும் கேடு

நம் நாட்டு புத்திசாலிகள் இருக்கிருர்களே, இவர்கள் தமது அழுக்கு இதயத்தை தாங்கள் வெளியிடும் அகராதிகளில் காட்டாமலில்லை. மேற்கூறிய பொருள்களின் சுருக்கத்தை குறிப்பிட்டுவிட்டு, சாதி உணர்ச்சி, இன உணர்ச்சி என்று அர்த்தம் எழுதி தங்கள் புத்தியை வெளிப்படுத்தியிருக்கிருர்கள். இதை 'லிப்கோ' போன்ற ஆங்கில தமிழ் அகராதிகளில் காணலாம்.

'மகிழ்ச்சி', சுப்பு

# கலாசார ஒப்பந்தம்

அணுசக்தியிலிருந்து சமாதானம் பேசும் வரை எதிருக்கு எதிராக இருந்து வரும் அமெரிக்காவும் ருஷ்யாவும் திரைப் படங்களைத் திரையிடுவதின் மூலம் ஒற்றுமையாகி இருக்கின்றன.

அமெரிக்கா—ருஷ்யா கலாச்சார ஒப்பந்தத்தின் கீழ் அமெரிக்கப் படங்களை ருஷ்யாவிலும், ருஷ்யப் படங்களை அமெரிக்காவிலும் திரையிடுவதற்கு வேண்டிய முயற்சிகள் அதிதீவிரமாக நடந்துகொண்டிருக்கிறது.

இப்பொழுது நூருவது மணித்தியாலமாக காண்பிக்கப்படுகிறது!

எல்பின்ஸ்டன் (மருதானை) ரெக்ஸி (வெள்ளவத்தை)
வேல்ஸ் (கண்டி) நியூ இம்பீரியல் (மட்டக்களப்பு)

செப்டம்பர் 3-ம் திகதி முதல்
வின்ஸர் (யாழ்ப்பாணம்) ரீகல் (யாழ்ப்பாணம்)

சிவாஜி கணேசன்,
ஜெமினி கணேசன்,
பத்மினி
நடிக்கும்

வீரபாண்டிய கட்டபொம்மன்
(டெக்னிக் கலர் படம்)



தித்திக்கும் தீஞ்சுவைத் திரை விருந்து!
இன்று குதூகல ஆரம்பம்



சென்ட்ரல் (மருதானை) ஓடியன் (கல்கிசை)
தினசரி பி. ப. 2, 6, 9-30
ஜோதி (திருகோணமலை) 6-00, இரவு 9-30
லிபர்ட்டி (பதுளை) தினசரி மாலை 6-30, 9-30
ராணி (யாழ்ப்பாணம்) (2-வது வாரம்)
இன்று மாலை 6, இரவு 9-30
ராஜசுலோசனு, எம். என். ராஜம்,
டி. எஸ். பாலையா, மனேஹர்,
வி. கே. ராமசாமி, இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன், எஸ். ஆர். ஜானகி நடிக்கும்

புதுமைப் பெண் (தமிழ்)

வஞ்சகமும் சூழ்ச்சியும் மலிந்த சமுதாயத்திலே வாழ வழியறியாது தவிக்கும் வெள்ளை மனம் படைத்த குபேரன் ஒரு[illegible] சிக்கல்கள் பல மலிந்த விறு விறுப்பான படம்.

# புதுமைப் பெண்

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

ரும் சுப்பையாவும் காய கல்பம் சாப்பிட்டார்களோ என்னவோ, ஆண்டுகள் பல கடந்தும், (அதாவது பிள்ளைகள் பெரியவர்களாகிய பின்னரும்) வயது முதிர்ச்சி இல்லாமல் இருந்தார்கள்.

குமாரின் வசனங்கள் பரவாயில்லை. கு. மா. பாலசுப்பிரமணியத்தின் "நெஞ்சதை முடிச்சுடுவா" என்ற பாடலை சுசீலா பாடுவது கேட்க மிக ரஸமாக இருக்கிறது. அப்போது ராஜம் ஆடுவதும் அழகுதான். டைரக்டர் திரு வேங்கடம் பொழுதைப் போக்க உகந்த படமாக புதுமைப் பெண்ணை உருவாக்கியிருக்கிருர். கொழும்பு சென்ட்ரல் தியேட்டரில் இப்பொழுது இப் படம் காண்பிக்கப்படுகிறது.

வியாபாரத்திற்கழகு
விளம்பரம்
செய்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பொறுமை

மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் பொறுமை என்னும் அணிகலன் அவசியம். பெண்கள் தான் எக்காரியத்திலும் பொறுமையாக இருக்கவேண்டுமென்று சிலர் கூறுகின்றார்கள். அது தவறு ஆண்களும் தமதுகாரியங்களில் பொறுமையா இருக்க வேண்டியது அவசியம்.

ஒவ்வொரு சிறு விஷயத்திலும் நாம் பொறுமையாக இருக்க வேண்டும். எதிலும் பொறுமையாக இருந்தால் வெற்றி பெறுவது நிச்சயம். ஒருவர் சிறு பிழை செய்து விட்டாராஞல் அதற்காக பொறுமையின்றி அவரைத் தண்டிக்கக் கூடாது. ஒருவன் துன்பம் செய்து விட்டால் அதற்காக அத்துன்பத்தை திரும்ப அவனுக்கு செய்யாது பொறுமையுடன் இருந்தால் அவன் வாழ் நாள் முழுவதும் சந்தோஷமாக இருப்பான். அப்படியல்லாமல் பொறுமையிழந்து தீங்கு செய்வாஞயின் அது அவனுக்கு அந்நேரத்தில் மாத்திரம் இன்பமாக இருக்கும். பின் அவனுக்கு துன்பத்தையே கொடுக்கும். இதைக் கருதியே வள்ளுவப் பெருந்தகையார் கூறுகின்ருர்.

"ஒறுத்தார்க் கொரு நாளை
இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும்
புகழ்".

இந்திய தேசபக்தர்களில் ஒருவரான காந்திஜி, ஆங்கிலேயர் எவ்வளவோ கொடுமைகள் செய்தும் அவர் பொறுமையைக் கைவிடாது பொறுமையுடனிருந்து சாத்வீகப் போராட்டத்திஞல் இந்திய தேசத்தை சுதந்திரமடையச் செய்தார் அல்லவா? காந்தியைப் போல் நாமும் பொறுமையுடன் இருந்தால் வெற்றி பெறுவது உண்மை.

பொய்யா மொழிப் புலவர் கூறிச் சென்ருர்:-

"அகழ்வாரைத் தாங்கும்
நிலம் போல்த் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல்
தலை".

ஒருவன் எவ்வளவு நம்மை அவமதித்தாலும் அதைப் பொறுப்பது தலையான செயல். பொறுமையாயிருப்பது கசக்கும். ஆஞல் அதன் பயன் இனிக்கும். ஆகவே நாம் பொறுமையை கைக்கொண்டு எக்காரியத்திலும் வெற்றி பெறுவோமாக.

"பொறுத்தார் பூமியாழ்வார்
பொங்கிஞர் காடாள்வார்".

—புனிதா ஆறுமுகம்,
புன்னலைக்கட்டுவன்.

## சுதந்திரம்

—மு. க.—

சுதந்திரம் ஒருசக்தி. அதனை அடைவது அரிது. ஆஞலும் ஒரு தேசம் சுதந்திரத்தைப்பற்றி சிந்திக்கத் தொடங்கிவிட்டால் அதைத் தடுக்க எந்தச் சக்தியாலும் முடியாது.

இன்று உலக நாடுகளது தனி மதிப்புக்காளாகியுள்ள பாரதமும் மேற்குறிப்பிட்ட சுதந்திர தாகங்கொண்டே விடுதலை அடைந்தது.

பாரத சுதந்திரத்திற்காக அல்லும் பகலும் பாடுபட்ட சுதந்திர வீரர்களுள் நமது காந்தி தாத்தாவும் ஒருவர். அவர் தாம் இறக்கும்வரையிலும் சுதந்திரத்திற்காகவே பாடுபட்டார். இவரும் இவரது சகாக்களும் சுதந்திரத்தைப் பெற தமக்கேற்பட்ட எவ்வளவோ கஷ்ட நஷ்டங்களையும் மிகுந்த பொறுமையுடனே சகித்து வந்தார்கள். அவரது பொறுமைக்கு இதோ ஒரு எடுத்துக்காட்டு.

ஒருமுறை காந்திமகான் சிறையிலிருக்கும்போது நெடுநேரம் தியானஞ் செய்துகொண்டிருந்தார். அவருக்கு உணவு கொண்டு வந்த காவல் வீரன் அவரைப் பல முறை அழைத்தும், வெகு நேரம் காத்திருந்தும் பொறுமையிழந்தவஞய் தியானத்திலிருந்த அவரைத் தனது காலால் உதைத்துவிட்டான். அதஞல் அவரது வாயிலிருந்து இரத்தம் வழிந்தது. என்ருலும் அவர் சிறிதுப் கோபியாது அவ்வீரனின் பாதத்தைத் தடவி "உங்கள் காலை எனது பல் குத்தியிருக்குமே. பிறருக்கு துன்பஞ் செய்யும் இந்தப் பல்லைக் கடவுள் எனக்குத் தந்ததற்காக பெரிதும் வருந்துகிறேன்" என்ருர் அப்போது அவ்வீரன் வெட்கி மன்னிப்புக் கோரலாஞன்.

மேலும் சுதந்திர தாகங் கொண்ட அவர் மக்களிடையே எவ்வளவாக உயர்ந்த நிலைமையில் வைத்துப் போற்றப்பட்டாரெனில்:-

"........பாரத தேசத்தை வாழ்விக்க வந்த காந்தி" என்று கூறப்பட்டுள்ளது. இதனை இவரைப்போலவே சுதந்திர தாகங்கொண்ட கவி, சுப்பிரமணியப் பாரதியாரே கூறியுள்ளார். இதோ அந்தப் பாடல்:-

"வாழ்க நீ! எம்மான், இந்த
வையத்து நாட்டிலெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந்தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மஹாத்மா! நீ வாழ்க!
வாழ்க!"

## இலக்கியக் காட்சி

புலவர்கள் பல இயற்கைக் காட்சிகளைச் செய்யுள்கள் மூலம் படைத்துத் தந்த இலக்கியத்தைப் போல் இன்பந்தரத் தக்கது வேறெது? நினைக்க நினைக்க நெஞ்செல்லாம் இனிக்குமே! அத்தகைய காட்சிகளில் ஒன்றைப் பார்ப்போம்.

"ஒரு பூஞ்செடி. அதில் மலர்கள் உள. அவற்றில் தேன் உண்டு. ஒரு வண்டு வந்து அத்தேனைக் குடிக்கின்றது.மயக்கம்வந்ததால் கீழே விழுந்துகிடக்கின்றது அணிமையில் ஒரு பெரிய நாவல் மரம் நிற்கின்றது. கீழே பழங்கள் உதிர்ந்து கிடக்கின்றன. அவற்ருேடு இவ் வண்டும் கிடந்தபடியால் பழம் பொறுக்கவந்த ஓர் பெண் இதுவும் நாவற் பழமாகும் என எண்ணி அதை எடுத்து உள்ளங்கையில் வைத்துப் பார்த்தாள் மயக்கம் தெளிந்ததும் வண்டு விழித்துப் பார்த்தது. அப் பெண்ணின் முகம் முழு மதி போலவும், கை தாமரை போலவும் அதற்குத் தோற்றியது. 'ஒகோ! சந்திரன் வந்து விட்டதே! இத்தாமரை மலர் குவியப் போகுதே! அதற்கு முன் யான் பறந்து விட வேண்டுமே!' எனப் பயந்து உடனே பறந்து சென்றது. அப் பெண் திகைத்து, 'இதென்ன புதுமை! இப்போது பறந்தது வண்டு தாஞ? அல்லது நாவற் பழமா?' என யோசிக்கலாஞள். பின்னர் தன் தோழியிடம் இதைச் சொன்ஞள்"

இந் நிகழ்ச்சியை விவேக சிந்தாமணி ஆசிரியர் எமக்கு விளக்கிக் காட்டுகின்ருர். அதனை நினைத்து நினைத்து மனம் மகிழ்வோமாக.

"தேனுகர் வண்டு
மதுதனையுண்டு
தியங்கியே கிடந்ததைக்
கண்டு
தானதைச் சம்புவின்
கனி யென்று
தடங்கையில் எடுத்து
முன பார்த்தாள்
வானுறுமதியம்
வந்ததென் றெண்ணி
மலர்க்கரம்
குவியுமென்றஞ்சிப்
போனது வண்டோ?
பறந்ததோ பழந்தான்
புதுமையோவிது
வெனப் புகன்ருள்.

—சோ. இரா.

## மயிலும் மங்கையும்



படத்தில் காண்பது உயிருள்ள மயில் அல்ல. வெறும் சித்திரம், அதற்கு உயிரூட்டிய மங்கை ஹொங்காங்கைச் சேர்ந்த சிங்குவா அருகே நிற்கிருர் விமானத்தில் உபசாரப் பணியாளாகக் கடமை செய்யும் இவர் ஓய்வு நேரங்களில் சித்திரம் தீட்டிப் பொழுதைப் போக்குகிருர். லண்டனில் சமீபத்தில் கண் காட்சி ஒன்றை ஏற்பாடு செய்து அதில் தமது சித்திரங்களைப் பார் வைக்கு வைத்தார்.

## ஐயமிட்டுண்

இரப்போர்க்கு ஈய்ந்து நீயும் உண் என்பது இதற்குப் பொருள்.

ஏழைகள் பசியால் வாடி வதங்கவும் மனம் இரங்காது தம் வயிறு புடைக்க உண்டு வாழ்தல் கூடாது. அது தர்மம் அன்று. எமக்குக்கிடைத்ததில் ஒரு சிறு பங்காவது கொடுத்து ஏழைகளைக் காக்க வேண்டும். இறைவன் எமக்குச் செல்வத்தை அளிக்கும் போது இதை மனதில் வைத்துக்கொண்டே அளிக்கிருன். அதஞல் எமது செல்வத்தில் சிறிதளவாவது ஏழைகட்கு உதவ வேண்டும்.

காகம் சிறிதளவு பண்டத்தைக் கண்டபோதும் தன் சகாக்களைக் கூவி அழைத்துக் கொண்டே உண்கிறது. இதஞலன்ருே 'கரவாது கரைந் துண்ணும் காக்கை' எனப் பட்டது. இத்தன்மை எம்மிடத்திலும் அமைய வேண்டும். அப்போதுதான் அன்பு வளர்ச்சி உண்டாகும்.

பகுத்துண்டு வாழ்தல் நாம் செய்யும் அறங்கள் எல்லாவற்றிலும் தலை சிறந்தது.

"பகுத்துண்டு பல்லுயிர்
ஓம்புதல் நூலோர்
தொகுத்த வற்றுள்
ளெல்லாம் தலை".

—ஏ. ஜீ. ஆனந்தம்.

## "எண்ணித் துணிக கருமம்"

"எண்ணித் துணிக கருமம்" என்பது சிறந்தோர் வாக்கியம். ஆறறிவு படைத்த மானிடராகிய நாம் ஒரு கருமத்தை ஆரம்பிக்கு முன் நன்ருக ஆராய்ந்து துணிவுடன் செய்தல் வேண்டும்! ஒரு தொழிலை ஆரம்பிப்பதற்கோ அல்லது ஒரு தொழிலைச் செய்வதற்கோ துணிவு மிகவும் வேண்டற்பாலது. துணிவின்றிச் செய்யும் ஒவ்வொரு காரியமும் சிதைந்துபோகும். உதாரணமாக, ஒரு மாணவன் தான் பரீட்சையில் சித்தியடைய வேண்டுமென்னும் எண்ணங் கொண்டு தன் நம்பிக்கையுடனும் துணிவுடனும் செய்வானேயாகில் அவன் அப் பரீட்சையில் சித்தியடைவானென்பது திண்ணம்.

"முதற் கோணில் முற்றுங் கோணும்" என்ற வாக்கியத்தின்படி துணிவின்றி மனம் கோணி ஒரு காரியத்தைச் செய்வோமாஞல் அக் காரியம் சித்தியடையாதென்பது உண்மை.

அநேக மாணவர்கள் பரீட்சையில் சித்தியடையாமலிருப்பதற்குக் காரணம் பரீட்சை ஆரம்பமாகுமுன் மனத் துணிவு இல்லாமலிருத்தலாம். மனிதரால் செய்ய முடியாததென ஒன்றுமில்லை. காந்தி மகான் போன்றவர்கள் உலகின் உத்தமர்களாக விளங்கியதற்குக் காரணம் அவர்களது மனத் துணிவும், எண்ணமும் என்பது உள்ளங்கை நெல்லிக் கனி போல புலஞகின்றது. அவரது துணிவே தாய் நாட்டிற்கு தொண்டாற்றுவதற்குக் காரணமாயிருந்தது.

"உச்சி மீது வானிடிந்து
வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை! அச்சமில்லை!!
அச்சமென்பதில்லையே!!!"

என்ற பாரதியாரின் பொன்மொழிப்படி எதற்கும் "அஞ்சாமை வேண்டும்" என மனத் துணிவு கொண்டு அரும் பெரும் செயல்களைச் செய்து சிறை புகுந்தார். இவ்வாருக அனேக பெரியார்கள் துணிவையே ஆயுதமாகக் கொண்டு போர் செய்து வெற்றி ஈட்டினர். அஞ்சி வாழும் ஆண்களோ, பெண்களோ, வாழ்வில் பிரயோசனமில்லை. வீரப் பெண்ணுக ஆணுகத் திகழ வேண்டுமெனில் துணிவும் அதற்கு முதற் காரணமாகிய வீர எண்ணமும் அவசியமாகும்.

"மனமுண்டாஞல் இடமுண்டு" என்ற வாக்கியத்தின் படி ஒரு கருமத்தைச் செய்யுமுன்னர் துணிவும், எண்ணமும் மனதிற் கொண்டு அக் கருமத்தைச் செய்யின் சித்தி யெய்துவாரென்பதை முன்னரே, அத் துணிவு பளிங்குக் கண்ணுடி போலப் படம் பிடித்துக் காட்டிவிடும். இவை யாவற்ருலும் நாம் அறியக் கூடியது யாது? எக் கருமத்தைச் செய்யினும் துணிவு வேண்டுமென்பதே.

ஆகவே, எதற்கும் முதலவசியமானது துணிவு. அத் துணிவுக்கு முதற் காரணம் எண்ணம். எண்ணி பின் துணிந்தால் எக்காரியமும் கைகூடும். இதை வள்ளுவர்

"எண்ணித்துணிக கருமம்!
துணிந்தபின்
எண்ணுவமென்பது இழுக்கு"

எனக் கூறிப் போந்தார். ஆகவே, இன்று தொடக்கம் நாம் "எண்ணித்துணிக கருமம்" என்ற வள்ளுவன் வாக்கின்படி நடப்போமாக.

—கோவைச் சிவன்

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத் தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

### வளர்மதி
### சுதந்திரன் மாணவர் மன்றம்
#### அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 6.

பெயர்.......................................................

பாடசாலை.......................................................

விலாசம்.......................................................

.......................................................

.................................... ....................................
பெற்ருேர் அல்லது ஆசிரியர் கையொப்பம் — கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் இலங்கை அரசியல் கட்சிகள்

# சமஷ்டி அரசமைப்பை வெறுக்கக் காரணம் என்ன?

## ஒற்றைஆட்சி ஒழிந்தால் தமிழ் பேசும்மக்களை அடக்கி ஒடுக்க முடியாதே என்ற பயம் அவர்களுக்கு!

## பத்தவேளி ச.ச. நிலைய விழாவில் கு.வ.பேச்சு

"ஒற்றையாட்சியில்தான் சிறுபான்மை மக்களை அடக்கி ஒடுக்க முடியும் என்பது தென் இலங்கை அரசியல் கட்சிக்காரர் எல்லோருக்கும் நன்கு தெரியும். அதனுலேயே அவர்கள் சமஷ்டி அரசமைப்பை வேம்பாக வெறுக்கிருர்கள். வெறுப்புக்கு இதை விட வேறு காரணம் எதுவும் இல்லை"—இவ்வாறு கோப்பாய்ப் பிரதிநிதி திரு கு. வன்னியசிங்கம் பத்தவேளி விநாயக சனசமூக நிலைய 6 - வது வருடாந்த விழாவில் பேசும்போது கூறினர்.

கிராமச் சங்கத் தலைவர் திரு ஏ. ஆர். மனுவேற்பிள்ளை தலைமையில் விழா நடைபெற்றது.

தலைவர் தமது தலைமையுரையில் வாசிகசாலைகள், சனசமூக நிலையங்கள் மக்களுக்கு இன்று அருந் தொண்டாற்றுகின்றன வெனவும் சன சமூக நிலையத்தில் கட்சி வேறுபாடு காட்டுவது தவிர்க்கப்பட வேண்டுமெனவும், எல்லாரும் ஒற்றுமையாகக் கடமையாற்றுவதில்தான் ஒரு நிலையத்தின் வருங்கால வளர்ச்சி தங்கியிருக்கின்றதெனவும் குறிப்பிட்டார்.

திரு. கு. வன்னியசிங்கம் எம். பி. மேலும் பேசியதாவது:—

"இலங்கையில் எமது மொழி முன்னேற வேண்டும், வளம் பெற வேண்டும் என விரும்புவோர் கொள்கையில் பிழை எதுவும் இல்லை.

"இலங்கையில் தமிழ் மொழி வளர வேண்டுமானுல் தமிழ் மக்கள் வாழ வேண்டுமானுல் தமிழர் வாழும் பிரதேசம் காப்பாற்றப்பட வேண்டும். தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் அன்னியர் குடியேற்றம் தடுக்கப்பட வேண்டும். இதைத் தென்னிலங்கையில் வாழும் எந்த அரசியல் கட்சியும் செய்யத் தயாராக இல்லை என்பதை மக்கள் உணர வேண்டும்.

"சென்ற கலவரத்தின் போது தென்னிலங்கையில் வாழ்ந்த தமிழ் மக்கள் அகதிகளாக யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டார்கள். தமிழ் பிரதேசமென்று ஒன்று அவர்களுக்கு இருந்தபடியினுல்தான் அவர்கள் இங்கு வரமுடிந்தது. எனவேதான் தமிழர் வாழும் பிரதேசம் காப்பாற்றப்பட வேண்டுமெனச் சொல்லுகிறேன்.

"சமசமாசக் கட்சியோ கம்யூனிஸ்ட் கட்சியோ, எம். ஈ. பி. யோ தமிழ் பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றத்தை தடுக்கவில்லை. நல்லாட்சி புரிவதென்பது ஒற்றையாட்சியில் சாத்தியமாகாதென்ற உண்மை இப்பொழுது நிரூபிக்கப்பட்டு வருகிறது.

"இலங்கையில் மொழிப் பிரச்னையை சிறுபான்மை மக்களும் ஏற்றுக் கொள்ளும் வகையில் தீர்க்கப்பட வேண்டுமானுல் சமஷ்டி ஆட்சி தான் சரியான மார்க்கமாகும்.

"தென்னிலங்கையில் இயங்கும் எந்தக் கட்சியாயினும் சமஷ்டி ஆட்சியை ஏற்றுக்கொள்ள வில்லையே என சிலர் கேட்கலாம். அவர்கள் ஏற்றுக் கொள்ளாததற்கும் சரியான காரணமுண்டு. ஒற்றையாட்சியில் தான் சிறுபான்மை மக்களை அடக்கி ஒடுக்கி ஆள முடியுமென்ற சித்தாந்தத்தை அவர்கள் கடைப்பிடித்து வருகின்ருர்கள். சமஷ்டி ஆட்சியில் சிறுபான்மை மக்களை ஏமாற்ற முடியாதென்பது அவர்களுக்கு நன்கு தெரியும்.

"மலை நாட்டுத் தமிழ் மக்கள் உரிமை கோரி இப்பொழுது இடதுசாரிகள் பேசுகிருர்கள். இது வெறும் ஏமாற்றுப் பேச்சென்பதில் சிறிதும் ஐயம் இருக்க வேண்டியதில்லை. இவர்கள் தொகுதி நிர்ணயக் கமிஷன் முன் தோன்றி மலை நாட்டுத் தமிழர்களுக்கு பாராளு மன்றத்தில் ஒரு ஸ்தானத்தைத் தானும் ஒதுக்கித் தரும்படி கேட்டார்களில்லை. பதவிக்கு வரும் எண்ணத்துடன், தமிழ் மக்களைத் தம்பக்கம் இழுக்கத்தான் அவர்கள் இப்படியான ஆசை வார்த்தைகளைப் பேசுகின்ருர்கள்.

"தமிழ் மக்களிடம் இது வரை செல்வாக்குப் பெற்ற கட்சிகள் வகுப்பு வாதத்தையே பேசுவதாகக் கூறப்படுகின்றது. சுமார் 25 வருட காலமாக வகுப்பு வாதக் கட்சிகள் மக்களைத் தவருன வழியில் இழுத்துச் செல்வதாகவும் சொல்லப்படுகிறது. இப்படிச் சொல்லும் தோழர்கள் அடுத்த தேர்தலிலோ, ஆதற்குப் பின்போ இடதுசாரி அரசாங்கம் பதவிக்கு வருமென எப்படித் திட்டவட்டமாகச் சொல்ல முடியும்? தமிழ் மொழிக்கு சம அந்தஸ்தும் தமிழ் மக்களுக்கு உரிமை வாழ்வும் தருவதாகக் கூறும் தென்னிலங்கை அரசியல் கட்சிகளுக்கு நான் எங்கும் பாராட்டுத் தெரிவித்து வருகிறேன். ஆனுல் தமிழ் மக்கள் உரிமையை அவர்கள் பெற்றுத் தருவார்களென தமிழ் மக்கள் எண்ணியிருந்தால் ஏமாற்றம்தான் அடைவார்கள்.

"எங்கே தமிழ் மக்கள் பெரும்பான்மையாக இருக்கிருேமோ அங்கே தமிழ் மக்கள் சந்தோஷமாக வாழ வழி வகுக்க வேண்டும். அதற்கு சமஷ்டி ஆட்சிதான் ஒரே வழியாகும். தமிழ் மக்கள் தங்கள் பலத்தையும், தங்கள் தியாகத்தையும் ஒரு பொழுதும் கைவிடக் கூடாது. தியாகத்திஞல் தான் தமிழ் மக்கள் உரிமையைப் பெற வேண்டும். அப்படி உரிமையைப் பெறுவதற்கு தமிழ் மக்கள் ஒன்றுபட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளுகிறேன்"—இவ்வாறு திரு. வன்னியசிங்கம் கூறி முடித்தார்.

அடுத்து திரு. வி பொன்னம்பலம் 'பாரதி கண்ட சமுதாயம்' என்ற பொருள் பற்றிப் பேசினுர்.

கூட்டத்தில் திருவாளர்கள்: எஸ். பரஞ்சோதி, இ. இ. தர்மரத்தினம், "புலோலவன்", "நாவேந்தன்", "புத்தொளி", திருமதி வேதவல்லி கந்தையா, செல்வி பூபதியம்மா சின்னத்தம்பி ஆகியோரும் பேசினர்.

திரு. வி. என். செல்வராஜ் இன் இசை நிகழ்ச்சியும், நீர்வேலி தெற்கு மாதர் சங்கத்தினரின் காவடி நடனமும், 'விருப்பும் வெறுப்பும்' என்ற நாடகமும் இடம் பெற்றன.

### தமிழ் இளைஞர் மன்றம்

சிலாபம் தமிழ் மன்றத்தின் மாதாந்தக கூட்டம் சென்ற 18-8-59-ல் திரு வி. எம். ஏ. முகம்மது தலைமையில் நடைபெற்றது.

செயலாளர் திரு. எஸ்.எம். பைஸ்தீன் கடந்த கூட்ட அறிக்கையை வாசித்தளித்தார்.

பின்னர், இளைஞர்களின் நாவன்மையை வளர்க்கவும், அவர்களின் உள்ளக் கருத்துகளை உறுதியுடன் வெளியிடவும் விவாத அரங்கமொன்று தொடக்கி வைக்கப்பட்டது. விவாத வரிசையில் முதன் முதலாக, "திருக்குறளின் கருத்துக்களைச் சமூக வாழ்வில் நடைமுறைக்குக் கொண்டு வருவதெப்படி?" என்ற விஷயம் எடுத்துக் கொள்ளப்பட்டது. விவாதத்தைத் திரு. முகமது தொடக்கி வைத்துப் பேசுகையில் திருக்குறளின் சிறப்புப் பற்றிப் பேசிக்கொண்டிராமல், அதனை நடை முறைக்குக் கொண்டுவருவதற்குரிய வழிகளைப்பற்றி விவாதிப்பதையிட்டுத் தான்மகிழ்ச்சியடைவதாகக் கூறினுர்.

திரு. எம். ஏ. கான் "பாடசாலைகளில், ஆசிரியர்கள் ஒவ்வொரு நாளும் மாணவர்களைச் சில குறள்களை மனனம் செய்துவரச் சொல்லி, அவற்றின் கருத்துக்களை நீதிக் கதைகளுடன் விளக்கிக் கூறிஞல் மாணவர்கள் உள்ளத்தில் அவை பதிந்து, அவற்றின்படி நடக்கும் ஆர்வமும் எழும்" என்று கூறினுர். திரு. சதக்கத்துல்லா உட்படப் பலர் பேசினர்.

இறுதியில், மக்களுக்குச் சிறு வயது முதற்கொண்டு திருக்குறளில் அளிக்கப்படும் பயிற்சிதான் குறட் கருத்துகளை நடைமுறைக்குக் கொண்டுவர ஏற்றவழி என்ற முடிவு காணப்பட்டது. மேலும் சிலாபத்தில் திருக்குறட் கருத்துக்களைப் பரப்பும் பொருட்டு, தமிழ் மறைக் கழகம் ஆண்டு தோறும் நடத்திவரும் திருக்குறள் தேர்வுக்கான மத்திய நிலையங்களுள் ஒன்ருகச் சிலாபத்தையுமாக்க, ஏற்பாடுகள் செய்வதென்றும், பாடசாலைகளில் மாணவர்கள் குறளை மனனம் செய்வது பற்றி ஆசிரியர்கள் நேரடியான கவனம் செலுத்துமாறு வேண்டிக் கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டன. திருக்குறள் தேர்வைச் சிலாபத்தில் நடத்தும் பொறுப்பைக் கவனிக்க, தலைவர், செயலாளர் உட்பட ஐவர் குழுவொன்றும் அமைக்கப்படவிருக்கிறது.

விவாத அரங்கினையடுத்து, சில முக்கியமான விஷயங்கள் விவாதிக்கப்பட்டன. அடுத்து [illegible] பாரதி விழா [illegible] யிட்டுச் சில முடிவுகள் செய்யப்பட்டன. பிரேரணை ஒன்றினுக்குப் பதிலளித்துப் பேசுகையில் தலைவர், "தமிழ் வளர்ச்சிதான் மன்றத்தின் அடிப்படைக் கொள்கை" என்று குறிப்பிட்டார்.

### பசறை கலைமகள் படிப்பகம்

பசறை கோவில் வீதியிலுள்ள கலைமகள் படிப்பகத்தை சென்ற 15-8-59-ல் திரு. வீரப்பத்தேவர் திறந்து வைத்தார். திருவாளர்கள் தமிழோவியன், பாஸ்கரன், முருகையா முதலியோர்பேசினர். படிப்பகத்தின் செயலாளர் திரு. சிவலிங்கம் சட்ட திட்டங்களை வாசித்தார். பின்னர் திரு. சிவலிங்கம் செயலாளராகவும், திரு. நெய்னுன் உதவிச் செயலாளராகவும், திரு. சந்திரன் பொருளாளராகவும், திரு. சித்தாராம் புத்தக அளிப்பாளராகவும் திரு. ஸ்டீபன் புத்தக பரிசோதகராகவும், திரு. கயூப்கான், திரு. பாஸ்கர் உதவியாளராகவும் தெரிவு செய்யப் பெற்றனர்.

### அருந்ததியர் சங்க சாதனைகள்

#### தலைவர் விளக்கம்

"அகில இலங்கை அருந்ததியர் சங்கம் ஆரம்பித்த ஒரு சில மாதங்களில் திருவண்ணுமலை ஸ்ரீ வெங்கடேஸ்வர பெருமாள் கோவிலுக்கு அருகில் அருந்ததிய மக்களுக்காக ஒரு மடம் கட்டிக் கொடுப்பதற்கு அஸ்திவாரமிடப்பட்டது. ஆனுல் ஒரு சில பொருமைக்காரர்களின் சூழ்ச்சியால் இம்முயற்சி கைவிடப்பட்டது. எனினும் நமது சங்கத்தின் இடைவிடாத கிளர்ச்சியின் பயனுக அருந்ததிய மக்களுக்கு விசேஷ ஒழுங்குகள் செய்து தர கோவில் நிர்வாகம் ஒப்புக்கொண்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும்"

இவ்வாறு அகில இலங்கை அருந்ததியர் (அரிசன) சங்கத் தலைவர் திரு மூ. வேலாயுதம் தமது சங்கம் சாதித்துள்ள காரியங்களை விளக்கி பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டிருக்கிருர்.

அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது:-

எம் சமூக மக்கள் பொருளாதாரத்தின் பிற்போக்கிற்கு மது (கள்) அரக்கனும் ஒன்று என அரசாங்கம் ஏற்படுத்திய மதுவிலக்கு கமிஷன் முன் மகஜர் சமர்ப்பித்து, சங்கம் நேரடியாகவும் சாட்சியமளித்து பூரண மதுவிலக்கு அவசியமென வற்புறுத்தியது. இலங்கையில் எம் மக்களின் இன்னல்களை போக்குவான் வேண்டி காலி, திருகோணமலை போன்ற இடங்களில் மாநாடுகள் நடாத்தப்பட்டதுடன் திருகோணமலையில் எம் சங்கத்தின் தூண்டுகோலின்பேரில் தமிழ் பெருந்தலைவர்கட்கும், குறிப்பாக தமிழரசுத் தந்தையும் தீண்டாமை யொழிப்பின் பிதாவாக இலங்கையில் கருதப்படுபவருமான திரு.எஸ்.ஜே. வி. செல்வநாயகம் உட்பட தமிழ் பாராளுமன்ற அங்கத்தவர்கட்கும் சமபந்தி போசனம் நடாத்தியது.

அணிமையில் நாம் தமிழகம் சென்று சென்னை மாகாண முதல் மந்திரி திரு. கே. காமராஜர், முன்னுள் முதல் அமைச்சர் சக்கரவர்த்தி சி. ராஜகோபாலாச்சாரி உட்பட பல சமூகத் தலைவர்களை சந்தித்து எமது நியாயமான கோரிக்கைகளுக்கு ஆதரவு தேடினேன் என்பது குறிப்பிடத்தக்கது.

### மாத்தளை இ. தொ. கா. புதிய நிருவாகிகள்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மாத்தளை மாவட்ட தேர்தல் கூட்டம் கடந்த 16-8-59-ல்மாத்தளை கந்தசாமி தமிழ் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

அவ்வமயம் கீழ் காண்பவர்கள் இ. தொ. கா. மாத்தளை மாவட்டக் கமிட்டி உத்தியோகஸ்தர்களாக தேர்ந்தெடுக்கப் பெற்றனர்:-

திரு. சு. அருணுசலம் தலைவர், எம். பழனியாண்டி உபதலைவர், திரு. ப. சின்ன பழனியாண்டி காரியதரிசி, சி. கந்தையா, உதவிக் காரியதரிசி, சீ. வீரபத்திரன் ஆடிட்டர் ஆகியோருடன் மாவட்டக் காரியக் கமிட்டி அங்கத்தினர்களாக 18 பேரும் தேர்ந்தெடுக்கப் பெற்றபின் இலங்கை தொழிலாளர்காங்கிரஸ் பொதுச் சபை அங்கத்தினர்களாக 12 பேர்களும் இலங்கை ஜனநாயக காங்கிரஸ் பொதுச் சபை அங்கத்தினர்களாகப் 12 பேர்களும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

### இணுவிலில் சுந்தரமூர்த்தி நாயனுர் குருபூசை

இணுவில் சைவ மகாஜன வித்தியாலையில் சுந்தரமூர்த்தி நாயனுர் குருபூசை அணிமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. தலைமையாசிரியர் திரு. வ. நடராசா தலைமைவகித்துப்பேசுகையில், "இப் பாடசாலையில் நாயன்மார் நால்வரதும் நாவலரதும் குருபூசைகள் மகேஸ்வர பூசைகளாகச் சென்ற 12 ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றன. பாடசாலைகள் உடல், உளம் அல்லது பரீட்சைக் கல்வியுடன் நின்றுவிடாமல் உயிர்க்கு உறுதி பயக்கும் கல்வியையும் போதிக்க வேண்டும். இலங்கையில் குருபூசைகள் எமக்கு வழி காட்டிற்கு உரியன. குருபூசை நிகழ்ச்சிகளின் பங்கு பற்றுவதன் மூலம் மாணவர்கள், ஆசிரியர்கள்,பெற்ருர் ஆகிய யாவரும் பயன் பெறுகின்றனர். மாணவருக்குச் சாதனமுறைக் கல்வியாக உதவுகின்றது. குருபூசைகளைக் கொண்டாடுவதால் நாயன்மார்களுக்கு யாதும் பயன் இல்லை. எமக்கே பயன். எமது வாழ்விற்கும், உயிர் வளர்ச்சிக்கும், உறுதுணையாகும். மனம், வாக்கு, ஆகிய மூன்றும் தூயனவாகக் கொண்டு குருபூசைகளில் பங்குபற்றுதல் வேண்டும்" என்று கூறினுர்.

வித்துவான், பண்டிதர் திரு க. அருளம்பலம் குருபூசையில் பங்குபற்றிய யாவர்க்கும் நன்றி கூறினுர். மத்தியானம் மகேஸ்வர பூசை சிறப்பாக நடைபெற்றது.

### வாழ்வின்....

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறதே. அலாக்காகச் சேகரின் மார்புமீது சாய்ந்தாள்;

இதை எதிர்பார்த்துத் தானே அவனும் வெறிச் சென்று வீட்டைவிட்டு வளமார் பூங்காவுக்கு அவளை அழைத்து வந்து தன் 'அடக்கத்தை' வெளியிட்டான். எத்தனை நாட்களாகத்தான் தேன் நிலவை அனுபவிக்க அவன் துடித்தானே! ஆயினும் அதற்கு வழி செய்த தாய்த் தமிழ் எழுத்தை வழுத்தும் நிலையில் அப்போது அவன் இல்லை. மனமொத்த மனைவியல்லவா அணைப்பில்......!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5-வது கடைசி வாரம்!

## கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) மனோஹரா (யாழ்ப்பாணம்)

**பார்த்தவர்கள் புகழ்கிருர்கள்! கேட்டீர்களா?**

"மன்னவன் பணியென்ருல் உன்பணி
மறுப்பனன்ருே"

"என் பின்னவன் பெற்ற செல்வம்
நான் பெற்றதன்ருே"

படிக்கச் சுவையாக இருக்கிறதல்லவா?
இந்தக் காட்சியை கண்டு களிக்கத் தவருதீர்கள்!



# சம்பூர்ண
# ராமாயணம்

சிவாஜி கணேசன்—ராமராவ்—பத்மினி
ஜி. வரலக்ஷ்மி நடித்தது.

கதை வசனம்: ஏ. பி. நாகராஜன். தாரிப்பு: எம். ஏ. வேணு. டைரக்ஷன்: கே. சோமு.

---

## செப்டம்பர் 4-ம் திகதி முதல்

## கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பணித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
## விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ண (திருகோணமலை)




பாலாஜி, தங்கவேலு,
முத்துக்கிருஷ்ணன்
சரோஜாதேவி, காமினி,
குமுதினி
ஆகியோர் நடித்த

# ★ மனமுள்ள மறுதாரம் ★

இப் பத்திரிகை கொழும்பு தட்டாதெரு, [illegible] எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டா தெரு, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1959 ஆகஸ்ட் மாதம் 30 ம் திகதி பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org